செப்டம்பர் - 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING

நடப்பு நிகழ்வுகள்

வ. எண்	பொருளடக்கம்	பக்க எண்
01.	2022 – G20 கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பு	03
02.	ரோஷினி – இந்தியாவின் முதல் உவர்நீர் விளக்கு	05
03.	'செர்வாவாக்' – தடுப்பூசி	06
04.	மகசேசே விருது	07
05.	சதுப்புநிலங்களைக் காப்போம்!	11
06.	இந்தியாவின் முதல் 'இரவு வான் சரணாலயம்'	16
07.	'புதுமைப்பெண்' திட்டம்	21
08.	தில்லி இராஜபாதை: கடமைப்பாதை	25
09.	மீண்டும் 'சிவிங்கிப்புலி திட்டம்'	28
10.	காலை சிற்றுண்டித் திட்டம்	33
11.	தமிழ்நாடு: பாதணிகள் & தோல் பொருட்கள் கொள்கை	40
12.	டைமண்ட் லீக்: நீரஜ் சோப்ரா	41
13.	கயாஜி அணை: மிக நீளமான இரப்பர் அணை	43
14.	மாசற்ற காற்று உச்சிமாநாடு: பெங்களூரு	43
15.	11-09-2022: 'மகாகவி' நாள்	45
16.	US ஓபன் சாம்பியன்: இகா ஸ்வியாடெக்	45
17.	ககன்யான் திட்டம்: முதலாவது சோதனை விண்கலம்	54
18.	உலகின் மிகநீளமான கிளைக்கால்வாய்	56
19.	'சிற்பி' திட்டம்	58
20.	சிறந்த உயிரியல் பூங்கா (2ஆம் இடம்): வண்டலூர்	62

மேலும் பல...

1. 2022ஆம் ஆண்டில் G20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கிற நாடு எது?

அ. இந்தியா

ஆ. சீனா

இ. இந்தோனேசியா ☑

ஈ. இலங்கை

✓ G20 உறுப்புநாடுகளின் சுற்றுச்சூழல் அதிகாரிகள், காலநிலை நடவடிக்கை மற்றும் உக்ரைனில் நடைபெற்று வரும் போரின் உலகளாவிய தாக்கம் குறித்து இந்தோனேசியாவின் பாலி தீவில் பேச்சுவார்த்தை நடத்தினர். காலநிலை மாற்றத்தை எதிர்த்துப்போராடுவதற்கும் வளரும் மற்றும் வளர்ந்த நாடுகளிடையே இலக்குகளை ஒத்திசைப்பதற்கும் ஒவ்வொரு G20 நாடுகளின் பங்களிப்பை செயல்படுத்துவது பற்றியும் அவர்கள் விவாதித்தனர்.

2. நாட்டில் பாம்பு தீண்டுவதால் ஏற்படும் பாதிப்பு, இறப்பு, நோயுற்ற தன்மை மற்றும் சமூகப்பொருளாதார சுமை ஆகியவை குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ. AIIMS

ஆ. ICMR ☑

இ. NITI ஆயோக்

ஈ. IMA

✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (ICMR) நாட்டில் பாம்பு தீண்டுவதால் ஏற்படும் பாதிப்பு, இறப்பு, நோயுற்ற தன்மை மற்றும் சமூகப்பொருளாதார சுமை குறித்த ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. ஆய்வின்படி, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் பாம்பு தீண்டுவதால் மட்டும் 45,000–க்கும் மேற்பட்ட மக்கள் இறப்பெய்துகின்றனர். அதில் பாதிக்கப்பட்டவர்களுள் 30 சதவீதம் பேர் மட்டுமே மருத்துவ சிகிச்சை பெற மருத்துவமனைகளை அடைகின்றனர். இந்தியாவில் ஓராண்டுக்கு 46,900 பேர் விஷப்பாம்புக்கடியால் உயிரிழக்கின்றனர்.

3. இந்தியாவில் சமூகப் பங்குச்சந்தையை (SSE) அறிமுகப்படுத்தும் கட்டமைப்பை அறிவித்துள்ள ஒழுங்குமுறை அமைப்பு எது?

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ☑

இ. நிதியியல் சேவைகள் துறை

ஈ. பொருளாதார ஆலோசனைக் குழு

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) இந்தியாவில் சமூகப்பங்குச்சந்தையை (SSE) அறிமுகப்படுத்தும் கட்டமைப்பை அறிவித்துள்ளது. இப்புதிய வகை பரிமாற்றம் சமூக நிறுவனங்களுக்கு நிதி திரட்ட கூடுதல் வழியை ஏற்படுத்தும். பங்குச்சந்தைகளில் இலாப நோக்கற்ற நிறுவனங்களை இந்தக்கட்டமைப்பு பட்டியலிடுகிறது மற்றும் அவைகளுக்கு மாற்று நிதி திரட்டும் வழியையும் வழங்குகிறது.

4. அண்மையில், பல்லுயிர் பாதுகாப்பு தொடர்பாக கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ. ஜப்பான்

ஆ. நேபாளம் ☑

இ. இலங்கை

ஈ. ஆஸ்திரேலியா

✓ வனங்கள், வனவுயிரிகள், சுற்றுச்சூழல், பல்லுயிர் பாதுகாப்பு, வழித்தடங்கள் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கும் பகுதிகளை மீட்டெடுப்பது உள்ளிட்ட பருவநிலை மாற்றம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி விரிவுபடுத்துவது, இருநாடுகளுக்கிடையே அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வது என்ற கண்ணோட்டத்துடன் நேபாள அரசுடன் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் முன்மொழிவுக்குப் பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

5. சமீபத்திய NSO தரவுகளின்படி, இந்த 2022–23 நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம் என்ன?

அ. 12.3%

ஆ. 13.5% ☑

இ. 14.7%

ஈ. 15.2%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்டுள்ள அண்மைய தரவுகளின்படி, இந்தியப் பொருளாதாரம் ஓர் ஆண்டில் மிகவிரைவான வேகத்தில் விரிவடைந்துள்ளது. இந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 13.5 சதவீதம் அதிகரித்துள்ளது. இது ரிசர்வ் வங்கி கணித்திருந்த 16.2% பொருளாதார வளர்ச்சியை விடக்குறைவாகும். 2022–23இன் முதல் காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) மொத்த மதிப்புச் சேர்ப்பு (GVA) 12.7 சதவீதமாக உள்ளது.

6. உலக உடலுறுப்பு தான நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.11

ஆ. ஆகஸ்ட்.13 ☑

இ. செப்டம்பர்.13

ஈ. செப்டம்பர்.11

✓ உடலுறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ஆக.13ஆம் தேதி உலக உடலுறுப்புதான நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. உலகெங்கிலும் உள்ள மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் உறுப்பு செயலிழப்பும் ஒன்றாகும் என்பதால் இந்த நாள் உறுப்புகளை தானம் செய்ய மக்களை ஊக்குவிக்கிறது. ஒருவர் 18 வயதை அடைந்த பிறகு உறுப்புதானம் செய்ய பதிவுசெய்யலாம்.

7. 'சூப்பர் கருடா தற்காப்புப் பயிற்சியை' நடத்திய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. இந்தோனேசியா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜப்பான்

✓ அமெரிக்கா, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 5000–க்கும் மேற்பட்ட வீரர்கள் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் நடந்த கூட்டுப் போர்ப்பயிற்சியில் பங்கேற்றனர். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் அதிகரித்துவரும் சீன நடவடிக்கைகளுக்கு இடையே இந்தப்பயிற்சி நடத்தப்பட்டது. கடந்த 2009ஆம் ஆண்டில் இந்தப்பயிற்சி தொடங்கப்பட்டது.

8. இந்தியாவின் முதல் உவர்நீர் விளக்கின் பெயர் என்ன?

அ. வர்த்தினி

ஆ. லாவண்யா

இ. ரோஷினி ☑

ஈ. கீர்த்தி

✓ LED விளக்குகளை இயக்குவதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மின்முனைகளுக்கு இடையே கடல்நீரை மின்பகுபொருளாகப் பயன்படுத்தும் இந்தியாவின் முதல் உவர்நீர் விளக்கை நடுவண் அறிவியல் & தொழில்நுட்பம், அமைச்சர் Dr ஜித்தேந்திர சிங் சென்னையில் அறிமுகப்படுத்தினார்.

✓ கடல்சார் ஆராய்ச்சிக்காக சென்னையில் அமைந்துள்ள தேசிய பெருங்கடல் தொழில்நுட்பக்கழகத்தால் இயக்கப்பட்டு, பயன்படுத்தப்படும் சாகர் அன்வேஷிகா என்ற கடல்சார் ஆராய்ச்சிக்கப்பலை நேரில் சென்று பார்த்த அவர், 'ரோஷினி' என்று பெயரிடப்பட்ட இந்த உவர் நீர் விளக்கை அறிமுகப்படுத்தினார்.

9. உலக நலவாழ்வு அமைப்பால் (WHO) குரங்கம்மை தீநுண்மத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பூர்வ பெயரென்ன?



அ. கிளேட் ☑

ஆ. ஃப்ளீட்

இ. கிளியோ

ஈ. ஹேலோ

✓ உலக நலவாழ்வு அமைப்பு (WHO) குரங்கு அம்மை தீநுண்மத்தின் திரிபுகளுக்கு புதிய பெயர்களை அறிவித்துள்ளது; இது கலாச்சார அல்லது சமூக குற்றங்கள் ஏற்படுத்துவதைத் தவிர்க்கிறது. நிபுணர்கள், மத்திய ஆப்பிரிக்காவின் முன்னாள் காங்கோ படுகை கிளேடை (திரிபுகளின் குழு) 'கிளேட் I' என்றும், முன்னாள் மேற்கு ஆப்பிரிக்க கிளேடை 'கிளேட் II' என்றும் குறிப்பிடுவார்கள். இது, 'கிளேட் IIa' மற்றும் 'கிளேட் IIb' ஆகிய இரண்டு துணைப்பிரிவுகளைக் கொண்டுள்ளது. கடந்த 1958ஆம் ஆண்டு முதன்முதலில் இது கண்டுபிடிக்கப்பட்டபோது 'குரங்கு அம்மை' வைரஸ் என்று பெயர்சூட்டப்பட்டது.

10. 2022 ஆகஸ்ட்.15 நிலவரப்படி, இந்தியாவில் எத்தனை இராம்சர் தளங்கள் உள்ளன?

அ. 75 ☑

ஆ. 57

இ. 100

ஈ. 250

✓ விடுதலையின் 75ஆம் ஆண்டில் 13,26,677 ஹெக்டேர் பரப்பளவைக்கொண்ட 75 ராம்சர் தளங்களை உருவாக்க இராம்சர் தளங்களின் பட்டியலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 இடங்கள் உள்பட மேலும் 11 ஈரநிலங்களை இந்தியா சேர்த்துள்ளது. 11 புதிய தளங்கள்: தமிழ்நாட்டில் நான்கு (4) தளங்கள், ஒடிசாவில் மூன்று (3), ஜம்மு & காஷ்மீரில் இரண்டு (2) மற்றும் மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 1 அடங்கும். இந்தத் தளங்களின் பெயர் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு & மேலாண்மை மற்றும் அவற்றின் வளங்களை புத்திசாலித்தனமாக பயன்படுத்த உதவும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கர்ப்பப்பைவாய் புற்றுநோயைத் தடுப்பதற்கான 'செர்வாவாக்' தடுப்பூசி இந்தியாவில் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ளதாக நடுவண் அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.

கர்ப்பப்பைவாய் புற்றுநோயைத் தடுப்பதற்கான, 'செர்வாவாக்' தடுப்பூசி இந்தியாவில் முதன்முறையாக உருவாக்கப் –பட்டுள்ளதாக நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) Dr ஜிதேந்திர சிங் அறிவித்துள்ளார்.

கர்ப்பப்பைவாய் புற்றுநோய் இந்தியாவில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதில், இரண்டாவது இடத்தில் உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய Dr ஜிதேந்திர சிங், இந்த நோய் பெரிதும் தவிர்க்கக்கூடியதாக இருந்தபோதும், இந்த புற்றுநோயால் உலகில் ஏற்படும் மரணங்களில் சுமார் நான்கில் ஒரு பங்கு இந்தியாவில் ஏற்படுவதாக கூறினார். இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1.25 இலட்சம் பெண்களுக்கு கர்ப்பப்பைவாய் புற்றுநோய் இருப்பது கண்டறியப்படுவதாகவும், இவர்களில், 75,000 பேர் உயிரிழப்பதாகவும் அவர் தெரிவித்தார். 'மாபெரும் சவால்கள் இந்தியா' திட்டத்தில் பங்கேற்றுள்ள சீரம் இந்தியா நிறுவனத்தின் ஆதரவுடன் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளைமூலம் உயிரி தொழில்நுட்பத்துறையும் உயிரி தொழில்நுட்ப தொழில்துறை ஆராய்ச்சி உதவி கவுன்சிலும் இணைந்ததன் விளைவாக, 'செர்வாவாக்' தடுப்பூசி உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

---

2. முதல் காலாண்டில் GDP 13.5% உயர்வு

நிகழ் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 13.5 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த 2021–22 நிதியாண்டின் கடைசி மூன்று காலாண்டுகளில் பதிவான விகிதத்தைக் காட்டிலும், நிகழாண்டின் முதல் காலாண்டில் GDP 13.5 சதவீதம் அதிகமாக பதிவாகியுள்ளதாக தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) தெரிவித்துள்ளது.

கரோனா காலத்துக்கு முந்தைய நிலையை ஒப்பிடும்போது, GDP சுமார் 4 சதவீதம் அதிகரித்துள்ளதாக நிதித் துறைச் செயலர் டி வி சோமநாதன் தெரிவித்தார். மேலும், 2023இல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7 முதல் 7.5 சதவீதமாக அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்டின் தொடக்கத்தில், ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கை கூட்டத்தின்போது நிகழ் நிதியாண்டின் முதல் காலாண்டில் GDP 16.2% வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டிருந்தது. இதே காலகட்டத்தில் சீனாவின் பொருளாதார வளர்ச்சி 0.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை கடந்த ஏப்ரல்–ஜூன் வரையிலான காலகட்டத்தில், நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 20.5 சதவீதத்தை எட்டியதாக தலைமை கணக்கு அதிகாரி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில், வருவாய்ப்பற்றாக்குறை அதன் இலக்கில் 21.3 சதவீதத்தை எட்டியது குறிப்பிடத்தக்கது.

---

3. குத்துச்சண்டையில் பதக்கங்களை வெல்ல உதவும் 'ஸ்மார்ட் பாக்ஸர்' மென்பொருள்: சென்னை ஐஐடி தகவல்

சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் இன்ஸ்பயர் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் (ஐஐஎஸ்) உடன் இணைந்து, 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் பதக்கங்களை அதிகரிக்கச்செய்ய மேம்பட்ட குத்துச்சண்டை பகுப்பாய்வு மென்பொருளை உருவாக்கி வருகின்றனர்.

சென்னை IITஇன் விளையாட்டு அறிவியல் மற்றும் பகுப்பாய்வுக்கான தனிச்சிறப்பு மையம் 'ஸ்மார்ட் பாக்ஸர்' என்ற பகுப்பாய்வு மென்பொருளை உருவாக்கி வருகிறது. அணியக்கூடிய சென்சார்கள் மற்றும் விடியோ கேமராக்களைப் பயன்படுத்தி 'இன்டர்நெட்–ஆஃப்–திங்ஸ்'மூலம் பின்னூட்டம் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகளை இப்பகுப்பாய்வுத் தளம் வழங்கும். இந்திய விளையாட்டு வீரர்களின் போட்டித்திறனை மேம்படுத்த இது உதவும்.

எவ்வாறு செயல்படுகிறது? 'இன்டர்நெட்–ஆப்–திங்ஸ்' அடிப்படையில், பஞ்ச்–இன் வேகத்தை ஆயும் வகையில் சென்சாருடன் கூடிய கையுறைகள், தரை வினை விசையைப் பதிவுசெய்வதற்காக 'வயர்லெஸ் ஃபுட் இன்சோலுடன் கூடிய அழுத்தமானி, விளையாட்டு வீரர்கள் உடலின் கீழ்பகுதியில் இயக்கத்தைப் பதிவு செய்வதற்காக வயர்லெஸ் இ எம் ஜி சென்சார்கள், விளையாட்டு வீரர்கள் உடலின் மேல்பகுதியில் இயக்கத்தைப் பதிவுசெய்வதற்காக இயக்கசக்தி அளவீட்டு அலகு ஆகியவை பயன்படுத்தப்படுகிறது.

குத்துச்சண்டை வளையத்தில் வைக்கப்படும் விடியோ கேமராக்கள் வீரரின் இடது, வலது கைகளை அடையாளம் காண்பதுடன், தாக்குதல், தற்காப்பு, பாசாங்கு ஆகியவற்றை வகைப்படுத்தும். ஐஐஎஸ்–இல் சரிபார்க்கப்பட்டபின், சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் ஐஐஎஸ்–உடன் இணைந்து 'ஸ்மார்ட் பாக்ஸர்' காப்புரிமைக்காக விண்ணப்பிக்கத் திட்டமிட்டுள்ளன.

---

4. இந்தியாவில் இணையவழி குற்றங்கள் 5% அதிகரிப்பு

இந்தியாவில் இணையவழியில் நடைபெறும் குற்றங்கள் கடந்த ஆண்டில் (2021) 5% அளவுக்கு அதிகரித்துள்ளது. முந்தைய ஆண்டில் இது 15% அளவுக்கு அதிகரித்தது குறிப்பிடத்தக்கது. 2020–ஆம் ஆண்டு 50,035–ஆக இருந்த இணையவழிக் குற்றம் தொடர்பான புகார்கள், 2021–ஆம் ஆண்டில் 52,974–ஆக அதிகரித்துள்ளது. 2019–இல் 44,735 இணையவழிக்குற்றங்கள் நடைபெற்றுள்ளன.

இதுதொடர்பாக தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள தகவலில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: 2021–ஆம் ஆண்டில் தெலங்கானா, உத்தர பிரதேசம், கர்நாடகம், மகாராஷ்டிரம், அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களில்தான் அதிக அளவில் இணையவழி குற்றங்கள் பதிவாகியுள்ளன. பதிவாகும் குற்றங்களில் மூன்றில் ஒன்றுக்குதான் காவல் துறையினரால் தீர்வுகாண முடிகிறது.

இணையவழிக் குற்றங்களில் 60.8% நிதி உள்ளிட்ட மோசடிகள் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக உள்ளது. இதற்கடுத்து 8.6 சதவீதம் பாலியல் ரீதியான இணையவழிக் குற்றங்கள் ஆகும். 5.4 சதவீதம் மிரட்டுவது, அச்சுறுத்துவதுபோன்ற குற்றங்கள் ஆகும்.

தெலங்கானாவில் அதிகபட்சமாக 10,303 இணையவழிக்குற்றங்கள் பதிவாகியுள்ளன. பெண்கள், குழந்தைகளுக்கு எதிராகவும் இணையவழியில் குற்றங்கள் அதிகம் நடைபெறுகின்றன. தகவல் திருட்டு, டெபிட், கிரெடிட் கார்டு மோசடிகள் இணையவழியில் நடப்பது அதிகம் உள்ளது. இதுதவிர இணையவழியில் பயங்கரவாதத்தைப் பரப்புவது தொடர்பாகவும் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. இருவருக்கு மகசேசே விருது

"ஆசியாவின் நோபல் பரிசு" என்றழைக்கப்படும் பிலிப்பின்ஸின் மகசேசே விருதுக்காக, கம்போடியாவில் அரசின் அடக்குமுறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய மனநல மருத்துவர் சொதியாரா சிம் (54), வன்கொடுமைக்குள்ளான ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு உதவிய பிலிப்பின்ஸ் மருத்துவர் பெர்னடெட் மேட்ரிட் (64) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

---

1. மெய்நிகராக இயங்கும் நாட்டின் முதல் பள்ளியைத் தொடங்கியுள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. கர்நாடகா

ஆ. புது தில்லி ☑

இ. தெலுங்கானா

ஈ. கேரளா

✓ தில்லி முதலமைச்சர் அரவிந்த் கேஜ்ரிவால், 'தில்லி மாதிரி மெய்நிகர் பள்ளி' என்று அழைக்கப்படும், 'நாட்டின் முதல் மெய்நிகர் பள்ளி'யைத் தொடங்கினார். இதில் இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் 9 முதல் 12 வரையுள்ள வகுப்புகளில் சேர தகுதியுடைவர் ஆவர். DMVS ஆனது தில்லி பள்ளிக்கல்வி வாரியத்துடன் இணைக்கப்படும். இந்தப் பள்ளியில் சேருவதற்கு யாதொரு கட்டணமும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படாது. 'ஸ்கூல்நெட்' மற்றும் கூகுள் உருவாக்கிய ஒரு சிறப்புறு தளத்தின்மூலம் வகுப்புகள் நடத்தப்படும்.

2. 'சினெர்ஜி – Synergy' என்ற இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்திய நிறுவனம் எது?

அ. CERT-In ☑

ஆ. இந்திய வான்படை

இ. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம்

ஈ. இந்திய விண்வெளி ஆய்வு மையம்

✓ சிங்கப்பூரின் இணையவெளிப் பாதுகாப்பு முகமையுடன் இணைந்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழுள்ள இந்திய கணினி அவசரநிலைப் பதிலளிப்புக்குழு (CERT–In), 13 நாடுகளுக்கான 'சினெர்ஜி' என்னும் இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை வெற்றிகரமாக வடிவமைத்து நடத்தியது. தேசிய பாதுகாப்புக் கழக செயலகத்தின் (NSCS) தலைமையில் இந்தியா தலைமையிலான சர்வதேச முடக்கச்செயலி (ransomware) எதிர்ப்பு முனைவு–நெகிழ்திறன் பணிக்குழுவின் ஒருபகுதியாக இது நடத்தப்பட்டது. "Building Network Resiliency to counter Ransomware Attacks" என்பது இந்தப் பயிற்சியின் கருப்பொருளாகும்.

3. NCRBஇன் ஓர் அண்மைய அறிக்கையின்படி, கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான தேசத் துரோக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன?

அ. உத்தர பிரதேசம்

ஆ. மத்திய பிரதேசம்

இ. ஆந்திர பிரதேசம் ☑

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ NCRBஇன் (தேசிய குற்ற ஆவணக்காப்பகம்) ஓர் அண்மைய அறிக்கையின்படி, ஆந்திர பிரதேச மாநிலத்தில் (29) அதிக எண்ணிக்கையிலான தேசத்துரோக வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. IPC பிரிவு 124Aஇன்கீழ் நாட்டில் 2021ஆம் ஆண்டில் தேசத்துரோகத்திற்காக 76 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 2020ஆம் ஆண்டில், ஆந்திர பிரதேச மாநிலத்தில் தேசத்துரோக வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை. சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (UAPA)கீழ் 1,604 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

4. அண்மையில் காலஞ்சென்ற மிக்கேல் கோர்பச்சேவ், கீழ்க்காணும் எந்த நாட்டின் முன்னாள் அதிபராவார்?

அ. உக்ரைன்

ஆ. ரஷ்யா ☑

இ. பெலாரஸ்

ஈ. பல்கேரியா

✓ 1985 முதல் 1991 வரை முன்னாள் சோவியத் யூனியனின் கடைசித் தலைவராக இருந்த மிக்கேல் கோர்பச்சேவ், தனது 91ஆவது வயதில் காலமானார். கடந்த 1986ஆம் ஆண்டில், அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனிடம் உள்ள அனைத்து தொலைதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளையும் ஒழிக்க கோர்பச்சேவ் முன்மொழிந்தார். அது பனிப் போரின் முடிவின் ஆரம்பமாகும். அவருக்கு கடந்த 1990இல் அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

5. நாட்டிலேயே முதன்முறையாக தடயவியல் சான்றுகளைச் சேகரிப்பதைக் கட்டாயமாக்கிய முதல் மாநிலம்/யூடி காவல்துறை எது?

அ. தமிழ்நாடு

ஆ. தில்லி ☑

இ. கர்நாடகா

ஈ. ஒடிஸா

✓ ஆறு ஆண்டுகளுக்கும் மேலான தண்டனையுடன்கூடிய குற்றங்களில் தடயவியல் ஆதாரங்களை சேகரிப்பதை கட்டாயமாக்கிய நாட்டின் முதல் காவல்துறை என்ற பெருமையை தில்லி காவல்துறை பெற்றுள்ளது. இந்த நடவடிக்கை தண்டனை விகிதத்தை அதிகரிக்கவும், குற்றவியல் நீதி அமைப்பை தடய அறிவியல் விசாரணையுடன் ஒருங்கிணைக்கவும் செய்யப்பட்டுள்ளது. தில்லி காவல்துறையானது குற்றவியல் நீதி அமைப்பை தடய அறிவியல் விசாரணையுடன் ஒருங்கிணைத்துள்ளது மற்றும் அதன் அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க காந்திநகர் தேசிய தடய அறிவியல் பல்கலைக்கழகத்துடன் கூட்டிணைந்துள்ளது.

6. 2022ஆம் ஆண்டு விடுதலை நாளன்று அதிக விருதுகளைப்பெற்ற மாநிலம்/யூடி காவல்துறை எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. பஞ்சாப்

இ. ஜம்மு காஷ்மீர் ☑

ஈ. கேரளா

✓ 2022ஆம் ஆண்டு விடுதலை நாளையொட்டி மொத்தம் 1,082 காவலர்களுக்கு காவல்துறை பதக்கங்கள் வழங்கப்பட்டன. 347 காவலர்களுக்கு வீரதீரத்திற்கான காவல் பதக்கம் வழங்கப்பட்டது. ஜம்மு–காஷ்மீர் காவல் துறைக்கு 108 பதக்கங்கள் வழங்கப்பட்டன; இதன்மூலம் விருதுகள் பெற்ற அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலேயே ஜம்மு காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது. மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களும் 2022ஆம் ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான காவலர் பதக்கங்களைப் பெற்றுள்ளன.

7. பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணியானது கீழ்க்காணும் எந்நாட்டில் சூரிய ஆற்றல் திட்டத்தை நிறுவவுள்ளது?

அ. எகிப்து

ஆ. கென்யா

இ. கியூபா ☑

ஈ. தென்னாப்பிரிக்கா

✓ கியூபாவில் 1150 MW உற்பத்தித் திறன் கொண்ட சூரிய மின்னாற்றல் உற்பத்தித் திட்டத்தை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளியை கியூப அரசாங்கத்துடன் இணைந்து பன்னாட்டு சூரிய ஆற்றல் கூட்டணி முன்வைத்துள்ளது. இத்திட்டத்தை அமைப்பதற்கான ISAஇன் திட்ட மேலாண்மை ஆலோசகராக அரசுக்குச்சொந்தமான NTPC உள்ளது. கியூபாவின் 2100 MW சோலார் திட்டங்களை செயல்படுத்தும் திட்டத்தின் ஒருபகுதியாக இந்தத்திட்டம் உள்ளது. இது ISA'இன் பரந்துபட்ட சூரிய மின்னாற்றல் உற்பத்திப் பூங்கா திட்டத்தில் முதன்மையானதாக உள்ளது.

8. வில்லியம் சமோய் அராப் ரூடோ என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபராக பதவியேற்றார்?

அ. கென்யா ☑

ஆ. எத்தியோப்பியா

இ. நைஜீரியா

ஈ. தென்னாப்பிரிக்கா

✓ கடந்த 2013ஆம் ஆண்டு முதல் கென்யாவின் துணை அதிபராக இருந்த வில்லியம் சமோய் அராப் ரூடோ, அதிபர் தேர்தலில் வென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளார். ரூடோ 50.49% வாக்குகளைப்பெற்று வெற்றி பெற்றார். கடும்போட்டி நிலவி வருவதால், சட்டப்போராட்டம் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 2017ஆம் ஆண்டில், முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, உச்சநீதிமன்றத்தால் அதிபர் தேர்தல் இரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

9. T20 கிரிக்கெட்டில் 600 போட்டிகளில் விளையாடிய முதல் கிரிக்கெட் வீரர் யார்?

அ. விராட் கோலி

ஆ. கீரன் பொல்லார்ட் ☑

இ. ரோகித் சர்மா

ஈ. ஆண்ட்ரே இரஸ்ஸல்

✓ T20 கிரிக்கெட்டில் 600 போட்டிகளில் விளையாடிய முதல் வீரர் என்ற பெருமையை மேற்கிந்திய தீவுகள் அணியின் அணித்தலைவர் கீரன் பொல்லார்ட் பெற்றார். அவர் 2022 ஏப்ரலில் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுறுவதாக அறிவித்தார். அண்மையில், ஆல்–ரவுண்டர் டுவைன் பிராவோ, T20 கிரிக்கெட்டில் 600 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் கிரிக்கெட் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தார்.

10. துரந்த் கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. ஹாக்கி

ஆ. கால்பந்து ☑

இ. மட்டைப்பந்து

ஈ. பூப்பந்து

✓ ஆசியாவின் பழமையான கால்பந்து போட்டியான துரந்த் கோப்பைப் போட்டிகள் 2022 ஆகஸ்ட்.16 முதல் தொடங்க உள்ளன. இதன் தொடக்க ஆட்டம் கொல்கத்தாவில் FC கோவா மற்றும் முகமதின் SC அணிகளுக்கு இடையே நடக்கும். துரந்த் கோப்பை வரலாற்றிலேயே முதன்முறையாக மேற்கு வங்கம், அஸ்ஸாம் மற்றும் மணிப்பூர் ஆகிய மாநிலங்கள் இணைந்து 2022 துரந்த் கோப்பைக்கான போட்டிகளை நடத்துவதால், இப்போட்டி பல நகரங்களில் நடத்தப்படுகிறது. இந்தியன் ஆயில் நிறுவனம் இப்போட்டியின் தலைப்பு புரவலராக உள்ளது. துரந்த் கோப்பையின் 2021 பதிப்பை FC கோவா அணி வென்றது குறிப்பிடத்தக்கது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஆகஸ்ட் மாத ஜிஎஸ்டி வசூல் ₹1.43 இலட்சம் கோடி!

நடப்பாண்டு ஆகஸ்ட் மாதத்தில் சரக்கு மற்றும் சேவை வரி (GST) ₹1.43 லட்சம் கோடியாக வசூலானது. நடப்பாண்டு மே மாதத்தில் ₹1.41 லட்சம் கோடி, ஜூன் மாதத்தில் ₹1.44 லட்சம் கோடி வசூலான ஜிஎஸ்டி கடந்த ஜூலை மாதத்தில் ₹1.49 லட்சம் கோடியாக அதிகரித்திருந்தது.

இந்நிலையில், ஆகஸ்ட் மாத ஜிஎஸ்டி ₹1.43 லட்சம் கோடியாக குறைந்துள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே கால கட்டத்தில் வசூலான ₹1,12,020 கோடியுடன் ஒப்பிடுகையில் 28 சதவீதம் அதிகமாகும். மேலும், தொடர்ந்து 6ஆவது மாதமாக ஜிஎஸ்டி வசூல் ₹1.40 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது.

நடப்பாண்டு ஆகஸ்ட் மாதத்தில் வசூலான ₹1,43,612 கோடியில், மத்திய ஜிஎஸ்டியாக ₹24,710 கோடியும், மாநில ஜிஎஸ்டியாக ₹30,951 கோடியும், ஒருங்கிணைந்த ஜிஎஸ்டியாக ₹77,782 கோடியும், செஸ் ₹10,168 கோடியும் வசூலாகியுள்ளதாக நடுவண் நிதித்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

2. சதுப்புநிலங்களைக் காப்போம்!

சதுப்புநிலம் என்பது, கடல் மட்டத்தைவிட குறைவான ஆழம்கொண்ட நீர்நிலையாகும். நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும், மண்ணரிப்பைத் தடுக்கவும், புயல், சூறாவளிபோன்ற இயற்கைச் சீற்றங்களை மட்டுப்படுத்தவும் சதுப்புநிலங்களின் பங்களிப்பு இன்றியமையாதது. இவை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு பெரிதும் துணை புரிகின்றன.

பூமியின் மொத்தப்பரப்பளவில் 6% சதுப்புநிலங்களாக உள்ளன. இன்று உலகில் 2000–க்கும் மேற்பட்ட இடங்கள் சதுப்புநிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த நிலப்பரப்பு சுமார் 20 கோடி ஹெக்டேர் ஆகும். உலக அளவில் ஆப்பிரிக்காவிலும், ஆசியாவிலும், அமேசானை ஒட்டிய பிரேசில் பகுதிகளிலும் 1,112 சதுப்புநிலப்பகுதிகள் காணப்படுகின்றன. அவை மொத்தமாக 89.37 மில்லியன் ஹெக்டேர் நிலப்பகுதியைக் கொண்டிருக்கின்றன.

இந்தியாவில் 27,403 சதுப்புநிலங்கள் உள்ளன. இந்நிலங்கள் பூமியில் வாழும் பல்வேறு உயிரினங்களின் பாதுகாப்பைத் தன்னகத்தே கொண்டிருப்பதால், 'நகரங்களின் நுரையீரல்கள்' என்று இவை அழைக்கப்படுகின்றன. சதுப்புநிலங்களின் மேலாண்மையை சிறப்பாக பேணும் பகுதிகளுக்கு ராம்சா' சா'வதேச அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. சதுப்புநிலங்களைப் பாதுகாத்து நிலங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும், புவி வெப்பமயமாகி அனல் கக்கிவரும் இன்றைய சூழ்நிலையில் உலக அளவில் சதுப்புநிலம் தொடர்பான பிரச்னைகளை நாடுகள் பகிர்ந்து கொள்வதற்கும், பிரச்னைகளை விவாதித்துத் தீர்வுகாண்பதற்கும் தேவையான கொள்கைகளை இந்த "இராம்சர் பிரகடனம்" வழங்குகிறது.

"இராம்சர் பிரகடனம்" அல்லது ஈரநிலங்களுக்கான உடன்படிக்கை என்பது, ஈரநிலங்களின் பயன்பாடு, அவற்றின் பாதுகாப்பிற்காக சர்வதேச அளவில் ஏற்படுத்தப்பட்ட ஒரு உடன்படிக்கையாகும். 1971–ஆம் ஆண்டில் ஈரானில் உள்ள ராம்சர் நகரத்தில் இதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டது. அதனாலேயே, அந்நகரின் பெயரைத் தழுவியே "இராம்சர் பிரகடனம்" என்ற பெயர் ஏற்படுத்தப்பட்டது.

உலக நாடுகளிடையே இயற்கை வளங்களைப் பாதுகாத்து, சதுப்புநிலங்களின் செழுமையையும், வளமையையும் பேணுதலே இந்த உடன்படிக்கையின் குறிக்கோளாகும்.

இந்தியாவில் மேலும் 11 சதுப்புநிலக்காடுகளுக்கு ராம்சர் சாசன அங்கீகாரம் கிடைத்துள்ளது. நம் நாட்டின் 75–ஆவது சுதந்திர ஆண்டு நிறைவுக்குப் பொருத்தமாக இந்தியாவில் இராம்சர் சாசன பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள சதுப்பு நிலக்காடுகளின் எண்ணிக்கையும் 75ஆக உயர்ந்துள்ளது. இது மிகவும் பெருமையளிப்பதாக மத்திய சுற்றுச்சூழல், வனம், பருவநிலை மாற்றத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுமார் 76,316 ஹெக்டேரில் உள்ள 11 சதுப்புநிலக் காடுகளில் தமிழ்நாட்டில் உள்ள நான்கு சதுப்புநிலக் காடுகளும் இடம்பெற்றுள்ளன. அவை, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இரு பறவைகள் சரணாலயங்களான, சித்தரங்குடி பறவைகள் சரணாலயம் (260.47 ஹெக்டேர்), கஞ்சிரங்குளம் பறவைகள் சரணாலயம் (96.89 ஹெக்டேர்), கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் தேரூர் பறவைகள் சரணாலயம் (94.23 ஹெக்டேர்), திருவாரூர் மாவட்டம் வடுவூர் பறவைகள் சரணாலயம் (112.64 ஹெக்டேர்) ஆகிய நான்கு சதுப்புநிலக் காடுகளுக்கு இராம்சர் சாசன அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஏற்கெனவே, திருநெல்வேலி மாவட்டம், கூந்தங்குளம் பறவைகள் காப்பகம், இராமநாதபுரம் மாவட்டம், மன்னார் வளைகுடா கடல்சார் உயிர்க்கோளகக் காப்பகம், ஈரோடு மாவட்டம், வெள்ளோடு பறவைகள் காப்பகம், செங்கல்பட்டு மாவட்டம், வேடந்தாங்கல் பறவைகள் காப்பகம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம், திருவாரூர் மாவட்டம், உதய மார்த்தாண்டபுரம் பறவைகள் காப்பகம், சென்னையில் பள்ளிக்கரணை சதுப்புநிலம், கடலூர் மாவட்டத்தில்

சிதம்பரத்தை அடுத்த பிச்சாவரம் சதுப்புநிலம் ஆகியவை இராம்சர் உடன்படிக்கையின்கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்புநிலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

சிதம்பரம் அருகே வங்கக்கடலையொட்டி அமைந்துள்ள பிச்சாவரம் உலகின் இரண்டாவது பெரிய அலையாத்தி காட்டுப்பகுதியாகும். இந்தக் காடு ஆண்டு முழுவதும் ஈரப்பதத்துடன் இருக்கும். இது 1357 ஹெக்டேர் நிலப்பரப்பு கொண்டது. இப்பகுதியில் சிறு சிறு தீவுகள் உள்ளன. இக்காடுகளில் 177 வகையான பறவைகள் வந்து செல்வதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் 1989–ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்ட பகுதியாகவும், பறவைகள் சரணாலயமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. சித்திரங்குடி பறவைகள் சரணாலயம் குளிர்காலத்தில் புலம்பெயர்ந்து வரும் பறவைகளுக்கு ஏற்ற இடமாகும்.

திருவாரூர் மாவட்டம் வடுவூர் பறவைகள் சரணாலயம் 112.64 ஹெக்டேர் பரப்பளவில் உள்ளது. இது ஒரு பெரிய நீர்ப்பாசன ஏரியாகும். புலம்பெயர்ந்த பறவைகளுக்கு இது சிறந்த வசிப்பிடமாக உள்ளது.

இயற்கை எழில்கொஞ்சும் சுற்றுலா தலங்களுக்குப் பெயர்பெற்ற கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள சுசீந்திரம், தேரூர் சதுப்புநில வளாகம் ஒரு முக்கியமான பறவைப்பகுதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது மத்திய ஆசியாவின் தெற்கு முனையில் அமைந்துள்ளது.

நம் தமிழ்நாட்டில் 20 ஆண்டுகளுக்கு முன்பு நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை மட்டுமே இராம்சர் பட்டியலில் இடம்பெற்றிருந்தது நினைவுகூரத்தக்கது. தற்போது வழங்கப்பட்டுள்ள நான்கு பகுதிகளோடு தமிழகத்தில் மொத்தம் 14 சதுப்புநிலக் காடுகள் இராம்சர் அங்கீகாரம் அளிக்கப்பட்டு பட்டியலில் இடம்பெற்றிருப்பது, தமிழ்நாட்டிற்கு கிடைத்தப் பெருமையாகும். ஏனெனில், நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் தமிழகத்தில்தான் சதுப்புநிலக்காடுகள் உள்ளன. தமிழகத்திற்கு அடுத்து, உத்தர பிரதேச மாநிலத்தில் 10 சதுப்புநிலக்காடுகள் உள்ளன. புதிதாக இணைக்கப்பட்டுள்ள 11 சதுப்புநிலக் காடுகளில் ஒடிசாவில் மூன்றும், ஜம்மு–காஷ்மீரில் இரண்டும், மத்திய பிரதேசத்தில் ஒன்றும், மகாராஷ்டிரத்தில் ஒன்றும் அடங்கும்.

இந்தியாவில் முன்பிருந்த சதுப்புநிலங்களில் 50% மட்டுமே தற்போதுள்ளது. இவையும் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 4,000 சகிமீ பரப்பளவு குறைந்து வருகின்றன. இதன்மூலம் மொத்த சதுப்புநிலங்களில் ஆண்டுக்கு 3% குறைந்து வருகிறது என ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் 1982 முதல் 2013 வரை 26 இடங்கள்தான் ராம்சர் பட்டியலில் இடம்பெற்றிருந்தன. 2014–ஆண்டு முதல் 2022 வரை 49 இடங்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு தற்போது நாட்டில் 13,26,677 ஹெக்டேர் பரப்பில் சதுப்புநிலங்கள் இருப்பது இந்திய திருநாட்டு மக்களுக்கு உலகளவில் கிடைத்திருக்கும் மாபெரும் அங்கீகாரமாகும்.

சதுப்புநிலங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அவற்றை பாதுகாப்பட்ட பிரதேசமாக அறிவிக்க வேண்டும்; அப்பகுதிகளில் நகரக் கழிவுகளைக் கொட்டுவதை தடை செய்ய வேண்டும்; சதுப்புநிலப்பகுதிகள் நிலத்தில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் சொந்தமானதால் அங்கு தொழிற்சாலைகளை அமைக்க அனுமதிக்கக் கூடாது; ஈர நிலப்பகுதிகளில் தற்போது உள்ள ஆக்கிரப்புகளை அகற்ற வேண்டும்.

சதுப்புநிலங்கள்தான் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் ஊற்றுக்கண்களாகவும் உள்ளன. சதுப்பு நிலங்களில் காணப்படும் அலையாத்திக்காடுகள் மண்ணரிப்பைத் தடுப்பதுடன், சுனாமி, புயல், வெள்ளப்பெருக்கு போன்றவற்றையும் தடுக்கும் ஆற்றல் கொண்டவை. மேலும், நீரைத் தூய்மையாக்கும்; பல்லுயிர்களின் புகலிடமாக விளங்குகின்றன. சதுப்புநிலங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் பிப்.2–ஆம் தேதி சர்வதேச சதுப்புநில நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. ஈரநிலமும், நீரும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவொண்ணாதவை. உயிரினங்களின் வாழ்விற்கு இவை இன்றியமையாதவை.

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் புகலிடமாகவும், நாட்டின் வளத்திற்கு ஆதாரமாகவும், நீரிலுள்ள மாசை நீக்கி தூய்மையான நீராக மாற்றவும், புவி வெப்பமடையாமல் காக்கவும் உதவும் ஈரநிலங்களான சதுப்பு நிலங்களைக் காப்போம்!

1. புதிய கடற்படைக் கொடியில் தேசிய இலச்சினையானது எந்த வடிவத்தினுள் உள்ளது?

அ. பச்சை அறுங்கோணம்

ஆ. நீல எண்கோணம் ☑

இ. ஆரஞ்சு அறுங்கோணம்

ஈ. வெள்ளை எண்கோணம்

✓ கொச்சியில் அமைந்துள்ள கொச்சி கப்பல்கட்டும் தளத்தில் புதிய கடற்படைக் கொடியை பிரதமர் மோடி வெளியிட்டார். இந்தியக்கொடியானது இக்கொடியின் மேல் இடதுபுறத்தில் வைக்கப்பட்டுள்ளது; அதே நேரத்தில் தேசிய இலச்சினை உள்ளடக்கிய நீல எண்கோண வடிவம் வலதுபுறத்தில் ஒரு நங்கூரத்தின் மேல் அமர்த்தப்பட்டுள்ளது. இது வலிவுறுதியை எடுத்துக்கூறும் விதமாக உள்ளது. எண்கோண வடிவம் எட்டுத்திசைகளைக் குறிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; அது பல திசைகள் மற்றும் இந்திய கடற்படையின் எல்லையை எடுத்துக்கூறும் விதமாக உள்ளது. அதைச்சுற்றியுள்ள இரட்டை தங்கநிற கரைகோடுகள் சத்ரபதி சிவாஜியின் கப்பற்படையைக் குறிக்கிறது.

2. பன்னாட்டு செலாவணி நிதியமானது (IMF) எந்த நாட்டிற்கு அதன் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க $2.9 பில்லியன் டாலர் அளவுக்குக் கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது?

அ. ஈரான்

ஆ. ஆப்கானிஸ்தான்

இ. இலங்கை ☑

ஈ. வெனிசுலா

✓ பன்னாட்டு செலாவணி நிதியமானது (IMF) இலங்கைத்தீவுக்கு $2.9 பில்லியன் டாலர் அளவுக்குக் கடனுதவி வழங்க ஒப்புதலளித்துள்ளது. கடந்த 1948ஆம் ஆண்டில் அந்நாடு விடுதலை அடைந்ததிலிருந்து தற்போதுதான் மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. நாட்டின் நிதியமைச்சராகவும் இருக்கும் இலங்கை அதிபர் விக்ரம சிங்கே தனது முதல் வரவுசெலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார்; அது வருவாயை அதிகரிப்பதையும் பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது.

3. ஸ்மார்ட் தீர்வுகள் சவால் மற்றும் உள்ளடக்கிய நகரங்கள் விருதுகளை வழங்கும் நடுவண் அமைச்சகம் எது?

அ. MSME அமைச்சகம்

ஆ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

இ. வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

ஈ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

Ministry of Housing and Urban Affairs
Government of India

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, 2022ஆம் ஆண்டுக்கான, 'Smart Solutions Challenge & Inclusive Cities' விருதுகள் வழங்கினார். இந்த விருதுகள் 2022 ஏப்ரலில் நிறுவப்பட்டன. இந்த விருதுகள் என்பது மாற்றுத்திறனாளிகள், பெண்கள் மற்றும் முதியவர்கள் எதிர்கொள்ளும் நகர அளவிலான அணுகல் மற்றும் உள்ளடக்கிய சவால்களை எதிர்கொள்வதற்காக தேசிய நகர்ப்புற விவகாரங்கள் நிறுவனம் மற்றும் இந்தியாவில் உள்ள ஐநா அவை ஆகியவற்றின் ஒரு கூட்டிணைந்த முனைவாகும்.

4. தேஜாஸ் மார்க்–2 போர் விமானங்களை தயாரிக்கின்ற நிறுவனம் எது?

அ. DRDO ஆ. BEL

இ. HAL ☑ ஈ. BDL

✓ பாதுகாப்புக்கான அமைச்சரவைக்குழு தேஜாஸ் மார்க்–2 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. தேஜாஸ் மார்க்–2 போர் விமானத்தை வடிவமைத்து மேம்படுத்த ₹6,500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் (HAL) நிறுவனத்தால் தயாரிக்கப்படும். உள்நாட்டு தேஜாஸ் இலகுரக போர் விமானத்தின் அதி நவீன பதிப்பு, மென்மேலும் மேம்படுத்தப்பட்டு புதிய வடிவம் பெறும். தேஜாஸ் 2.0 அதிக ஆற்றல்வாய்ந்த எஞ்சின்கள் மற்றும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஆக்டிவ் எலக்ட்ரானிக் ஸ்கேன்டு அரே (AESA) ரேடார் ஆகியவற்றைக் தன்னகத்தே கொண்டிருக்கும்.

5. EV மின்கலப் பாதுகாப்புத் தரநிலைகள் குறித்து சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தலைவர் யார்?

அ. நந்தன் நிலேகனி

ஆ. இரமேஷ் சந்த்

இ. பரமேஸ்வரன்

ஈ. டாடா நரசிங்க இராவ் ☑

✓ சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் டாடா நரசிங்க ராவ் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை அமைத்தது. அவர் ஹைதராபாத்தில் உள்ள துகள் உலோகவியல் மற்றும் புதிய பொருட்களுக்கான பன்னாட்டு மேம்பட்ட ஆய்வுமையத்தின் இயக்குநராக உள்ளார். வல்லுநர் குழு அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில், மின்கலங்கள் தொடர்பான கூடுதல் பாதுகாப்புத்தேவைகள், ஆன்–போர்டு சார்ஜர், பேட்டரி பேக்கின் வடிவமைப்பு, மின்கலத்தின் உள்ளே குறுக்குச்சுற்று காரணமாக வெப்பப்பரவலால் ஏற்படும் தீக்குத் தீர்வுகாணுதல் உள்ளிட்ட திருத்தங்களை அவ்வமைச்சகம் வெளியிட்டுள்ளது.

6. 'மிஷன் ஸ்வவலம்பன்' என்பது கீழ்க்காணும் எந்த நிறுவனத்தின் முதன்மை முனைவாகும்?

அ. NITI ஆயோக்

ஆ. நபார்டு

இ. SIDBI ☑

ஈ. PFRDA

✓ இந்திய சிறு தொழில்கள் வளர்ச்சி வங்கி (SIDBI) 6 மாநிலங்களின் 10 மாவட்டங்களில் 300 ஸ்வவலம்பன் சிலை பள்ளிகளை அமைப்பதற்கான ஐந்தாம் கட்டப்பணிகளைத் தொடங்கியுள்ளது. இது அதன் முதன்மை முயற்சியான ஸ்வவலம்பன் திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்டுள்ளது. இது சத்தீஸ்கர், ஹரியானா, கோவா, புதுச்சேரி, ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவற்றை உள்ளடக்கும். தொழில்முனைவோர் கலாச்சாரத்தை (உத்யம் சே ஆசாதி) பின்பற்றி மகளிரைச் சார்ந்திருப்பவர்களாக அல்லாமல் சுதந்திரமானவர்களாக இது மாற்றும்.

7. '2022 – பீமா மந்தன்' என்ற ஹேக்கத்தான் போட்டியைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ. PFRDA

ஆ. IRDAI ☑

இ. GIC

ஈ. NITI ஆயோக்

✓ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களைத் தன்னியக்க இறப்புக் கோரிக்கை (automated death claim) தீர்வுக்கான புதுமையான தீர்வுகளை உருவாக்குவதற்கு, காப்பீடு தொடர்பான பல்வேறு பிற துறைகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. '2022 – பீமா மந்தன்' என்ற அதன் முதல் ஹேக்கத்தானின் ஒருபகுதியாக, 'காப்பீட்டில் புதுமை' என்ற கருப்பொருளுடன் இது தொடங்கப்பட்டுள்ளது.

8. NaBFIDஇன் மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

அ. வைரல் ஆச்சார்யா

ஆ. K V காமத்

இ. உர்ஜித் படேல்

ஈ. இராஜ்கிரண் இராய் ஜி ☑

✓ இராஜ்கிரண் இராய் ஜி என்பவர் நிதியுதவி உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசிய வங்கியின் (NaBFID) மேலாண்மை இயக்குநராக நியமிக்கப்பட்டார்; அவர் 5 ஆண்டு காலத்திற்கு அப்பதவியில் இருப்பார். கடந்த 2021ஆம் ஆண்டில், இந்திய அரசு K V காமத்தை மேம்பாட்டு நிதி நிறுவனத்தின் தலைவராக நியமித்தது. உட்கட்டமைப்புத் துறையில் முதலீடுகளைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் ₹20,000 கோடியை NaBFID–க்கு செலுத்தியுள்ளது.

9. உடான் (உதே தேஷ் கா ஆம் நாக்ரிக்) என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமாகும்?

அ. வெளியுறவு அமைச்சகம்

ஆ. உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகம் ☑

இ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

✓ உள்நாட்டு வான் போக்குவரத்து அமைச்சகத்தின் உடான் திட்டம் வெற்றிகரமாக ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் விமான சேவையை கடந்த 2017 ஏப்.27 அன்று பிரதமர் தொடங்கி வைத்தார். சாதாரண மக்களும் விமானப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் கடந்த 2016 அக்.21 அன்று இது தொடங்கப்பட்டது. அதன்படி, இரண்டாவது மற்றும் 3ஆவது தர நகரங்கள் விமானப்போக்குவரத்துடன் இணைக்கப்பட்டன. கடந்த 2014ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் செயல்பட்டு வந்த நிலையில், உடான் திட்டத்தின்மூலம் தற்போது 141ஆக அது அதிகரித்துள்ளது. உடான் திட்டத்தின் கீழ் செயல்படாத 68 விமான நிலையங்கள் இணைக்கப்பட்டன. 425 புதிய வழித்தடங்கள் நாடு முழுவதும் கண்டறியப்பட்டன.

10. 2022–இல் வடகிழக்கு ஒலிம்பிக்கின் 2ஆவது பதிப்பை நடத்துகிற மாநிலம் எது?

அ. அஸ்ஸாம்

ஆ. மேகாலயா ☑

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. சிக்கிம்

✓ மேகாலயாவில் இரண்டாவது வடகிழக்கு ஒலிம்பிக் போட்டிகள் அக்.3 முதல் நவ.6 வரை ஷில்லாங்கில் நடைபெற உள்ளது. கடந்த 2018ஆம் ஆண்டின்போது மணிப்பூரில் பன்னிரண்டு பிரிவுகளுடன் முதல் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. மேகாலயா மாநிலம் தனது ஐம்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில் இந்த ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தப் பதிப்பில், எட்டு வடகிழக்கு மாநிலங்களைச் சார்ந்த 4,000 பங்கேற்பாளர்கள் 18 பிரிவுகளில் போட்டியிடுவார்கள்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவின் முதலாவது, 'இரவு வான் சரணாலயம்' லடாக்கில் அமைக்கப்படவுள்ளது

நடுவணரசின் அறிவியல் & தொழில்நுட்பத்துறை, ஒரு தனித்துவமான மற்றும் முதல்–வகையான முயற்சியாக, லடாக்கில் இந்தியாவின் முதல், 'இரவு வான சரணாலயம்' அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது; இது அடுத்த மூன்று மாதத்திற்குள் முடிக்கப்படும். உத்தேச இரவு வான் சரணாலயம், சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒரு பகுதியாக லடாக்கிலுள்ள ஹான்லேயில் அமைக்கப்படும். இது இந்தியாவில் வானியல் சுற்றுலாவை அதிகரிக்கும். மேலும் இது ஆப்டிகல், அகச்சிவப்புக்கதிர் மற்றும் காமா–கதிர் தொலைநோக்கிகளுக்கான உலகின் மிகவுயர்ந்த தளங்களில் ஒன்றாக இருக்கும்.

---

2. 'INS விக்ராந்த்' சிறப்பம்சங்கள் என்னென்ன?

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் விமானந்தாங்கி போர்க்கப்பலான INS விக்ராந்த்தில் பல்வேறு சிறப்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன. உள்நாட்டிலேயே கட்டப்பட்ட முதல் விமானந்தாங்கிப் போர்க்கப்பலான INS விக்ராந்த் செப்.2ஆம் தேதி இந்தியக் கடற்படையில் இணையும் எனத்தகவல் வெளியாகியுள்ளது.

INS விக்ராந்த் விமானந்தாங்கிக் கப்பலானது ₹20,000 கோடி செலவில் கொச்சி கப்பல்கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இதன்மூலமாக விமானந்தாங்கிக்கப்பலை சொந்தமாகக் கட்டும் திறன்கொண்ட வெகுசில நாடுகளுடன் இந்தியாவும் இணைந்தது. 1,700 வீரர்கள் பயணிக்கும்படியாக உருவாகியுள்ள இக்கப்பலிலிருந்து மிக்–29கே போர் விமானங்கள், கமோவ் – 31 ஹெலிகாப்டர்கள், MH–60R ஹெலிகாப்டர்கள் ஆகியவற்றை இயக்கவும் தரையிறக்கவும் முடியும். அதிகபட்சமாக சுமார் 28 நாட் வேகத்தில் கப்பலை இயக்க முடியும்.

இந்தக் கப்பலில், இரண்டு அறுவை சிகிச்சை அறைகள், 16 படுக்கைகள், பரிசோதனை மையங்கள், சிடி ஸ்கேன் வசதி என மினி மருத்துவமனையே இடம்பெற்றுள்ளது. மருத்துவப்பணிக்காக மட்டும் 5 மருத்துவ அதிகாரிகள் உள்பட 21 மருத்துவப் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

---

3. உலகின் 5–ஆவது பெரிய பொருளாதார நாடானது இந்தியா

பிரிட்டனை பின்னுக்குத்தள்ளி உலகின் 5–ஆவது மிகப்பெரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. பன்னாட்டு செலாவணி நிதியத்தின் (IMF) தரவுகளின் அடிப்படையில் 'புளூம்பெர்க்' ஊடக நிறுவனம் இதனைக் கூறியுள்ளது.

கரோனா தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட உலகப்பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வந்த நிலையில், உக்ரைன்–ரஷியா இடையேயான போர் மீண்டும் நிலைமையை மாற்றியது. உணவுப்பற்றாக்குறை, எரிபொருள் விலை உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை உலக நாடுகள் சந்தித்து வருகின்றன.

முக்கியமாக, பிரிட்டனில் அந்தப் பிரச்னை அதிகரித்துள்ளது. பணவீக்கம் அந்நாட்டில் வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. அதைக் கட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் வட்டி விகிதங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், பிரிட்டனில் வாழ்க்கை நடத்துவதற்கான செலவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில், உலக அளவில் பெரும் பொருளாதார மதிப்பைக்கொண்ட நாடுகளின் பட்டியலில் பிரிட்டனைப் பின்னுக்குத்தள்ளி இந்தியா 5–ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் வரையிலான கணக்கீட்டின்படி, இந்தியாவின் பொருளாதார மதிப்பு 85,470 கோடி அமெரிக்க டாலராக இருந்தது. அதே காலகட்டத்தில் பிரிட்டனின் பொருளாதார மதிப்பு 81,600 கோடி அமெரிக்க டாலராக இருந்தது.

2021–ஆம் ஆண்டின் கடைசி 3 மாதங்களில் இந்தியாவின் பொருளாதாரம் மிகப்பெரிய அளவில் வளர்ந்ததே இதற்கு முக்கிய காரணம் என பன்னாட்டு செலாவணி நிதியம் (IMF) தெரிவித்துள்ளது. அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு சரிவைச் சந்தித்துள்ள போதிலும், பவுண்ட் ஸ்டெர்லிங் மதிப்புடன் ஒப்பிடுகையில் வலுவடைந்தே உள்ளது.

நடப்பு 2022–23ஆம் நிதியாண்டின் ஏப்ரல் – ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் இந்திய பொருளாதாரம் 13.5% வளர்ச்சி கண்டிருந்தது. நிகழ் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் சுமார் 7% வளர்ச்சி காணும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. உலகின் முக்கிய நாடுகளில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரமாக இந்தியா தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

உலக அளவில் மிகப்பெரும் பொருளாதார மதிப்பைக் கொண்ட நாடாக அமெரிக்கா விளங்கி வருகிறது. அதற்கடுத்த இடங்களில் சீனா, ஜப்பான், ஜெர்மனி ஆகியவை உள்ளன. 10 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தப்பட்டியலில் இந்தியா 11–ஆவது இடத்தில் இருந்தது. தற்போது 5–ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அடுத்த சில ஆண்டுகளில் 6ஆவது இடத்தில் உள்ள பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான பொருளாதார மதிப்பு இடைவெளி மிகப்பெரிய அளவில் அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பெரும் 10 பொருளாதார நாடுகள்

1. அமெரிக்கா
2. சீனா
3. ஜப்பான்
4. ஜெர்மனி
5. இந்தியா
6. பிரிட்டன்
7. பிரான்ஸ்
8. இத்தாலி
9. பிரேஸில்
10. கனடா

---

4. ஓய்வு பெற்றார் செரீனா வில்லியம்ஸ்

27 ஆண்டுக்கால டென்னிஸ் வாழ்க்கையிலிருந்து ஓய்வுபெறுவதாக கண்ணீருடன் அறிவித்துள்ளார் ஜாம்பவான் செரீனா வில்லியம்ஸ். மகளிர் ஒற்றையர் பிரிவில் முடிசூடா இராணியாக திகழ்ந்த அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மொத்தம் 23 கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டங்களை கைப்பற்றியுள்ளார். உலகின் நம்பர்.1 வீராங்கனையாகவும் நீண்டகாலம் இருந்த பெருமையும் அவர் வசம் உள்ளது.

இந்நிலையில் நியூயார்க்கில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்ற யுஎஸ் ஓபன் போட்டி மூன்றாவது சுற்றில் ஆஸி. வீராங்கனை அஜ்லா டாம்ஜனோவிக்கிடம் 1–2 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்த செரீனா டென்னிஸில் இருந்து ஓய்வுபெறுவதாக மைதானத்தில் கண்ணீருடன் அறிவித்தார்.

---

1. IMFஇன் அண்மைய புள்ளிவிவரங்களின்படி (2022 செப்டம்பர்), உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதாரமாக உள்ள நாடு எது?

அ. இங்கிலாந்து

ஆ. இந்தியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. ஆஸ்திரேலியா

✓ பன்னாட்டு செலாவணி நிதியத்தின் (IMF) புள்ளிவிவரங்களின்படி, கடந்த 2021ஆம் ஆண்டின் இறுதிக்காலாண்டில், இங்கிலாந்தை (UK) விஞ்சி இந்தியா உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதாரமாக மாறியது. அமெரிக்கா, சீனா, ஜப்பான் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் முதல் 4 இடங்களில் உள்ளன. இருப்பினும், தனிநபர் வருமானத்தின் அடிப்படையில், ஒரு நாட்டில் ஒரு நபர் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறார் என்பதைக் கணக்கிடும் வகையில், இந்தியா 190 நாடுகளில் 122ஆவது இடத்தில் உள்ளது.

2. இந்தியாவின் முதல், 'இரவு வான் சரணாலயம்' அமைக்கப்படவுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. ஹிமாச்சல பிரதேசம்

ஆ. புது தில்லி

இ. லடாக் ☑

ஈ. இராஜஸ்தான்

✓ நடுவணரசின் அறிவியல் & தொழில்நுட்பத்துறை, ஒரு தனித்துவமான மற்றும் முதல்–வகையான முனைவாக, லடாக்கில் இந்தியாவின் முதல், 'இரவு வான் சரணாலயம்' அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது; இது அடுத்த மூன்று மாதத்திற்குள் முடிக்கப்படும். இவ்வுத்தேச, 'இரவு வான் சரணாலயம்', சாங்தாங் வனவுயிரிகள் சரணாலயத்தின் ஒரு பகுதியாக லடாக்கில் உள்ள ஹான்லேயில் அமைக்கப்படும். இது இந்தியாவில் வானியல் சுற்றுலாவை மேம்படுத்தும். இந்த 'இரவு வான் சரணாலயம்' தொடங்குவதற்கு யூனியன் பிரதேச நிர்வாகம், லடாக், தன்னாட்சி மலையக மேம்பாட்டு கவுன்சில், லே மற்றும் இந்திய வானியற்பியல் நிறுவனம் இடையே முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கையெழுத்தானது.

3. கழிவு மேலாண்மை விதிகளை மீறியதற்காக கீழ்க்காணும் எந்த மாநில அரசுக்கு ₹3500 கோடி அபராதத்தை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் விதித்தது?

அ. புது தில்லி

ஆ. மேற்கு வங்காளம் ☑

இ. உத்தர பிரதேசம்

ஈ. அஸ்ஸாம்

National Green Tribunal

✓ திடக்கழிவு மற்றும் திரவக்கழிவுகளை மேலாண்மை செய்வதற்கான விதிமுறைகளை மீறியதற்காக, 'இழப்பீடு' தொகையாக ₹3,500 கோடியை வழங்குமாறு மேற்கு வங்க மாநில அரசை தேசிய பசுமைத் தீர்ப்பாயம் (NGT) கேட்டுக்கொண்டுள்ளது. மேற்கு வங்க அரசுக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை மேல்முறையீடு செய்யவும் உச்சநீதிமன்றத்தை நாடவும் வாய்ப்பு உள்ளது. மாநிலத்தில் திடக்கழிவு மேலாண்மைக்கென அர்ப்பணிக்கப்பட்ட தொகையை இரண்டு மாதங்களுக்குள் வைப்பு வைக்குமாறும், தலைமைச் செயலாளரின் அறிவுறுத்தல்களின்படி அது செயல்பட வேண்டும் என்றும் மேற்கு வங்க மாநில அவ்வமர்வு கேட்டுக்கொண்டுள்ளது.

4. அண்மையில் நடைபெற்ற 30ஆவது தென் மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெற்ற இடம் எது?

அ. திருவனந்தபுரம் ☑

ஆ. சென்னை

இ. பெங்களூரு

ஈ. ஹைதராபாத்

✓ நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் திருவனந்தபுரத்தில் 30ஆவது தென் மண்டல கவுன்சில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 26 பிரச்னைகள் விவாதிக்கப்பட்டு, 9 பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்பட்டது, 17 பிரச்னைகள் கூடுதல் பரிசீலனைக்கு ஒதுக்கப்பட்டன. பரஸ்பர ஒப்பந்தத்தின்மூலம் மத்திய, மாநிலங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான மோதல்களை சுமுகமாகத் தீர்த்துவைப்பது, மாநிலங்களுக்கிடையே பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவது, அனைத்து மாநிலங்களுக்கும் ஆலோசனைக்காக ஒரு மன்றத்தை உருவாக்குவது ஆகியவை மண்டல கவுன்சில் கூட்டத்தின் முதன்மை நோக்கங்கள் ஆகும்.

5. தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் செயல் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?

அ. நீதியரசர் இரஞ்சன் கோகோய்

ஆ. நீதியரசர் D Y சந்திரசூட் ☑

இ. நீதியரசர் N V இரமணா

ஈ. நீதியரசர் U U லலித்

✓ இந்திய உச்சநீதிமன்றத்தின் இரண்டாவது மிகமூத்த நீதியரசரான நீதியரசர் DY சந்திரசூட், தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் செயல்தலைவராக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 1987 சட்டசேவைகள் அதிகாரச்சட்டம், 1987இன்கீழ் NALSAஇன் செயல் தலைவராக நீதியரசர் சந்திரசூட்டை நியமித்தார். இந்தியத்தலைமை நீதியரசர் NALSAஇன் தலைமைக் காப்பாளர் ஆவார்.

6. FSIBஆல் NABARDஇன் தலைவராக பரிந்துரைக்கப்பட்டவர் யார்?

அ. சாரதா குமார் ஹோதா

ஆ. முகமது முஸ்தபா ☑

இ. K V காமத்

ஈ. சிவசுப்ரமணியன் இராமன்

✓ வேளாண்மை & கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கியின் (NABARD) தலைவராக முகமது முஸ்தபாவை நிதிச்சேவை நிறுவனங்கள் பணியகம் (FSIB) பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரையின் மீதான இறுதி முடிவு பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையின் நியமனக்குழுவால் எடுக்கப்படும். NABARD என்பது இந்தியாவில் உள்ள பிராந்திய கிராமப்புற வங்கிகள் மற்றும் தலைமை கூட்டுறவு வங்கிகளின் ஒட்டுமொத்த ஒழுங்குமுறைக்கான ஒரு தலைமை ஒழுங்குமுறை அமைப்பாகும்.

7. மாதவிடாய் காலப் பொருட்களை அனைவருக்கும் இலவசமாக வழங்கிய உலகின் முதல் நாடு எது?

அ. நியூசிலாந்து

ஆ. ஸ்காட்லாந்து ☑

இ. ஜெர்மனி

ஈ. பின்லாந்து

✓ மாதவிடாய் காலப் பொருட்களை அனைவருக்கும் இலவசமாக வழங்கும் உலகின் முதல் நாடாக ஸ்காட்லாந்து மாறியுள்ளது. மாதவிடாய் காலப் பொருட்கள் சட்டத்தின்படி, கல்வி நிறுவனங்கள்மூலம் அப்பொருட்கள் தரப்படும். தேவைப்படுவோர்க்கு பஞ்சுத்தக்கை மற்றும் அணையாடைகள்போன்ற இலவசப் பொருட்களை வழங்க வேண்டிய சட்டப்பூர்வ கடமை தற்போது உள்ளூர் அதிகாரிகளின் வசமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

8. 'நமஸ்தே' என்ற நடுவண் துறை திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. வெளியுறவு அமைச்சகம்

ஆ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

இ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

✓ 'நமஸ்தே' என்பது சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் நடுவண் துறைத்திட்டமாகும்; இத்திட்டம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் கூட்டு முனைவாகும். இது, நகர்ப்புற இந்தியாவில் உள்ள தூய்மைத் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் கண்ணியத்தையும் திறன் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் கிடைப்பின்மூலம் உறுதிப்படுத்த எண்ணுகிறது.

9. நாட்டின் முழு, 'நடைமுறைக் கல்வியறிவு' மாவட்டமாக மாறிய மண்டலா அமைந்துள்ள மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. குஜராத்

இ. மத்திய பிரதேசம் ☑

ஈ. தெலுங்கானா

✓ மத்திய பிரதேச மாநிலத்தில் பழங்குடியினர் அதிகம் வாழும் மண்டலா பகுதி நாட்டிலேயே முதல் முழுமையான 'நடைமுறைக் கல்வியறிவு' மாவட்டமாக மாறியுள்ளது. ஒரு நபர் தனது சொந்தப்பெயரை எழுதவும், ஹிந்தி மொழியில் எண்ணவும் படிக்கவும் எழுதவும் முடியும்போது அவர், 'நடைமுறைக் கல்வியறிவு' கொண்டவர் என்று அழைக்கப்படு –கிறார். கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தப் பகுதியில் உள்ள மக்களிடையே கல்வி கற்பதன் அவசியம் குறித்த பேரளவில் ஒரு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

10. 'சிப் 4' கூட்டத்தில், அமெரிக்காவுடன் இணைந்து எந்தெந்த நாடுகள் பங்கேற்றன?



அ. தைவான், தென் கொரியா மற்றும் ஜப்பான் ☑

ஆ. சீனா, தைவான் மற்றும் தென் கொரியா

இ. தாய்லாந்து, தைவான் மற்றும் தென் கொரியா

ஈ. ஆஸ்திரேலியா, சீனா மற்றும் தைவான்

✓ 'சிப் 4' சந்திப்பு என்பது அமெரிக்கா, தைவான், தென் கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நான்கு சில்லு உற்பத்தி நாடுகளின் கூட்டமாகும். இருப்பினும், 'சிப் 4' சந்திப்பு குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று தைவான் அறிவித்தது. தைவான் ஒரு மிகப்பெரிய குறைக்கடத்தி உற்பத்தியாளராகும். மேலும், உலகின் மிகப்பெரிய ஒப்பந்த சில்லு தயாரிப்பாளரின் தாயகமாகும் அது. இந்தக் குழுவானது அமெரிக்க தலைமையிலான முக்கிய நுண்சில்லு உற்பத்தியாளர்களின் குழுவாகக் கூடியதாக விவரிக்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்தியாவின் வெளிநாட்டுக்கடன் 2021-22 குறித்த 28ஆவது நிலைமை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

நடுவண் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் வெளிநாட்டு கடன் நிர்வாகப்பிரிவு இந்தியாவின் வெளிநாட்டுக்கடன் 2021-22 குறித்த 28ஆவது நிலைமை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

2021 மார்ச் இறுதியில், $573.7 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக்கடன், 2022 மார்ச் இறுதியில் 8.2 சதவீதம் அதிகரித்து $620.7 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகியுள்ளது.

உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தில் வெளிநாட்டுக்கடன் அளவு ஓராண்டுக்கு முன் 21.2% என்பதிலிருந்து கணிசமாக குறைந்து 2022 மார்ச் இறுதியில், 19.9% ஆகியுள்ளது. அன்னிய செலாவணி கையிருப்பு, விகிதத்தில் ஓராண்டுக்கு முன் 100.6% என்பதைவிட, 2022 மார்ச் இறுதியில் 97.8 சதவீதம் என வெளிநாட்டுக்கடன் லேசாக குறைந்துள்ளது. நீண்டகால கடன் அளவு $499. 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும், குறுகிய காலக்கடன் அளவு $121.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டு மொத்தக்கடனில் 90% வணிகக் கடன்கள், வெளிநாடுவாழ் இந்தியர்களின் வைப்புத்தொகைகள் குறைந்தகால வர்த்தகக்கடன், பலவகை கடன்கள் ஆகியவையாகும்.

---

2. மெட்ராஸ் உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் நியமனம்

மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் முனீஸ்வர் நாத் பண்டாரி வரும் செப்.13ஆம் தேதியன்று பணி ஓய்வுபெறவுள்ளதால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 223ஆவது பிரிவின்படி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக, மெட்ராஸ் உயர்நீதிமன்ற மூத்த நீதிபதி எம் துரைசாமியை நியமித்து குடியரசுத்தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

---

3. மாணவிகளுக்கு ₹1,000 உதவித்தொகை: 'புதுமைப்பெண்' திட்டம் இன்று தொடக்கம்

தமிழ்நாட்டில் உள்ள அரசுப்பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ₹1,000 உதவித் தொகை வழங்கும், 'புதுமைப்பெண்' திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் திங்கள்கிழமை தொடக்கி வைக்கவுள்ளார். இதில் சிறப்பு அழைப்பாளராக தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவால் பங்கேற்கிறார்.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே இருந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்டம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் என மாற்றியமைக்கப்பட்டது. இதுதொடர்பான அறிவிப்பை, தமிழ்நாடு அரசின் 2022-2023ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் முதல்வர் முக ஸ்டாலின் கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவித்தார். அதன்படி, அரசுப்பள்ளிகளில் 6 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை பயின்ற மாணவிகளுக்கு, அவர்கள் உயர்கல்வி அல்லது பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு படித்து முடிக்கும் வரை மாதம் ₹1,000 நேரடியாக வங்கிக்கணக்கில் செலுத்தப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. இந்தத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு ₹698 கோடி ஒதுக்கியுள்ளது.

'புதுமைப்பெண்' திட்டம் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டம் திங்கள்கிழமை முதல் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. மாதந்தோறும் ₹1,000 உதவித்தொகை பெற இதுவரை சுமார் நான்கு இலட்சம் மாணவிகள் தமிழ்நாட்டில் விண்ணப்பித்துள்ளனர். இதில் முதற்கட்டமாக ஒரு இலட்சம் மாணவிகளின் வங்கிக்கணக்குக்கு ₹1,000 உதவித் தொகை செலுத்தப்படவுள்ளது.

---

4. 05-09-2022 – 'கப்பலோட்டிய தமிழன்' வ. உ. சிதம்பரனாரின் 151ஆவது பிறந்தநாள்.

---

1. லிஸ் டிரஸ் என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்?

அ. பிரான்ஸ்

ஆ. ஆஸ்திரேலியா

இ. ஐக்கிய இராச்சியம் (UK) ☑

ஈ. ஜெர்மனி

✓ ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமராக பழைமைவாத கட்சியின் தலைவர் லிஸ் டிரஸ் நியமிக்கப்பட்டார். ஐக்கிய இராச்சியத்தின் பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் கடந்த ஜூலை மாதம் பதவி விலகியதை அடுத்து, ஆளும் பழைமைவாத கட்சியின் உட்கட்சித் தலைமைப் போட்டியில், 47 வயதான லிஸ் டிரஸ் தனக்கு எதிராக போட்டியிட்ட ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக்கை தோற்கடித்தார். தெரசா மே மற்றும் மார்கரெட் தாட்சரைத் தொடர்ந்து இங்கிலாந்தின் மூன்றாவது பெண் பிரதமராக லிஸ் டிரஸ் உள்ளார்.

2. ஆமதாபாத் 36ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான சின்னத்தின் பெயர் என்ன?

அ. ஷெர்

ஆ. சவாஜ் ☑

இ. விகாஸ்

ஈ. லியோ

✓ ஆமதாபாத்தில் முப்பத்தாறாவது தேசிய விளையாட்டுப்போட்டிக்கான சின்னம் மற்றும் கீதத்தை நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். இந்தச் சின்னத்திற்கு குஜராத்தியில் 'குட்டி' என்று பொருள்படும், 'சவாஜ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. அதன் கீதத்தின் கருப்பொருள், "ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்" என்ற அடிப்படையில் அமைந்து உள்ளது. தேசிய விளையாட்டுப்போட்டிகள், குஜராத் மாநிலத்தில் உள்ள ஆறு நகரங்களில் செப்.29 முதல் அக்.12 வரை நடத்தப்படும்.

3. 'மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்களின் மாநாட்டை' நடத்திய மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. குஜராத் ☑

இ. பீகார்

ஈ. மத்திய பிரதேசம்

✓ மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப (S&T) அமைச்சர்களின் குஜராத் அறிவியல் மாநாட்டை இந்தியப் பிரதமர் மோடி ஆமதாபாத்தில் உள்ள அறிவியல் நகரத்தில் தொடங்கிவைக்கவுள்ளார். இந்த மாநாட்டில், "2030–க்குள் R&D–இல் தனியார்துறை முதலீட்டை இரட்டிப்பாக்குதல்" என்ற கருப்பொருளில் விவாதங்கள் இடம்பெறும். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் இந்தத் தேசிய STI கொள்கையின்படி தனிப்பட்ட STI கொள்கையை வைத்திருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படும்.

4. ஊசியில்லாத, சுவாசிக்கும் வகையிலான COVID–19 தடுப்பூசியை அங்கீகரிக்கும் முதல் நாடு எது?

அ. அமெரிக்கா

CanSinoBIO

ஆ. சீனா ☑

இ. ரஷ்யா

ஈ. இஸ்ரேல்

✓ தியாஞ்சினைச்சார்ந்த CanSino பயோலாஜிக்ஸ் தயாரித்த COVID–19 தடுப்பூசியின் ஊசியில்லாத, சுவாசிப்பதன்மூலம் செலுத்தப்படும் பதிப்பை அங்கீகரித்த முதல் நாடு சீனா ஆகும். பூஸ்டர் தடுப்பூசியாக அவசரகால பயன்பாட்டிற்காக CanSino–இன் Ad5–nCoV–ஐ சீனா அங்கீகரித்துள்ளது. சுவாசிப்பதன்மூலம் செலுத்தப்படும் இந்தத்தடுப்பு மருந்து செல்லுலார் நோயெதிர்ப்பாற்றலைத் தூண்டுகிறது மற்றும் மியூகோசல் நோயெதிர்ப்பாற்றலையும் இது தூண்டும்.

5. ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரெசு, கீழ்க்காணும் எந்நாட்டின் முன்னாள் அதிபரை ஆப்கானிஸ்தான் நாட்டுக்கான தனது புதிய சிறப்புத்தூதராக நியமித்தார்?

அ. கிர்கிஸ்தான் ☑

ஆ. பாகிஸ்தான்

இ. கஜகஸ்தான்

ஈ. தாய்லாந்து

✓ ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச்செயலர் அன்டோனியோ குட்டரெஸ், கிர்கிஸ்தான் நாட்டின் முன்னாள் அதிபரை ஆப்கானிஸ்தானுக்கான தனது புதிய சிறப்புத்தூதராக நியமித்தார். கிர்கிஸ்தானின் வெளியுறவு அமைச்சராகவும் பணியாற்றிய ரோசா ஒடுன்பயேவா, இந்த ஆண்டு ஜூன் மாதம் பதவி விலகிய டெபோரா லியோன்ஸுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

6. 'உறியடி'யை அதிகாரப்பூர்வ விளையாட்டாக அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. உத்தர பிரதேசம்

இ. மத்திய பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா ☑

✓ மகாராஷ்டிர மாநிலத்தில், 'தாஹி–ஹண்டி' எனப்படும் 'உறியடி' அதிகாரப்பூர்வ விளையாட்டாக அங்கீகரிக்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் ஏக்நாத் ஷிண்டே அறிவித்தார். இவ்விளையாட்டில் பங்கேற்போர், 'கோவிந்தாக்கள்' என்னும் விளையாட்டுப்பிரிவின்கீழ் பணிவாய்ப்புகளைப் பெறுவார்கள்; மேலும், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் ₹10 இலட்சம் ஆயுள்காப்பீட்டுத்தொகையும் அவர்கள் பகுதியளவு ஊனமுற்றவர்களாக இருந்தால் ₹5 லட்சம் காப்பீடும் அரசு வழங்கும். 'கோபாலகலா' என்றும் அழைக்கப்படும் 'தாஹி–ஹண்டி' என்பது கிருஷ்ண ஜெயந்தி விழாவின் போது நடைபெறும் ஒரு சடங்கு விழாவாகும்.

7. 4 இந்திய பாட்மிண்டன் நட்சத்திரங்களை தனது தூதுவர்களாக நியமித்துள்ள நிதிச்சேவை நிறுவனம் எது?

அ. பேபால்

ஆ. மாஸ்டர்கார்டு ☑

இ. விசா

ஈ. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்

mastercard

✓ இந்திய பாட்மிண்டன் நட்சத்திரங்களான இலக்ஷ்யா சென், கிடாம்பி ஸ்ரீகாந்த், சாத்விக் சாய்ராஜ் இரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோரை இந்தியாவில் தனது விளம்பரத் தூதுவர்களாக நியமித்து மாஸ்டர்கார்டு அறிவித்துள்ளது. 2022 – தாமஸ் கோப்பை மற்றும் 2022 – பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுகளில் வெற்றி பெற்ற இவர்கள் இந்தியாவில் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பாதுகாப்பு மற்றும் வசதி குறித்து விழிப்புணர்வைப் பரப்புவார்கள்.

8. 'மேடம் சார்' என்ற சுயசரிதையை எழுதியவர் யார்?

அ. மஞ்சரி ஜருஹர் ☑ ஆ. கிரண் பேடி

இ. காஞ்சன் சௌத்ரி ஈ. R ஸ்ரீலேகா

✓ இந்தியாவின் முதல் ஐந்து பெண் காவல்துறை அதிகாரிகளுள் ஒருவரான மஞ்சரி ஜருஹறின் சுயசரிதை, "மேடம் சார்" ஆகும். சிறந்த சேவைக்காக இந்திய அரசின் காவல்துறை பதக்கத்தைப் பெற்றவர் அவர். கடந்த 1976–இல் இகாப–உக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பீகார் மாநிலத்தின் முதல் பெண் காவல்துறை அதிகாரியும் ஆவார். அவர், CISF இன் சிறப்பு தலைமை இயக்குநராக இருந்து ஓய்வுபெற்றார். தற்போது டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தின் (TCS) ஆலோசகராக உள்ளார்.

9. 2023இல் வரும் 17ஆவது வெளிநாடுவாழ் இந்தியர் நாள் கொண்டாட்டங்கள் நடைபெறும் இடம் எது?

அ. மதுரை

ஆ. சென்னை

இ. மும்பை

ஈ. இந்தூர் ☑

✓ 2023இல் வரும் 17ஆவது, 'வெளிநாடுவாழ் இந்தியர் நாள்' அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இந்தூரில் நடைபெறும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்தியாவின் வளர்ச்சியில் வெளிநாடுவாழ் இந்தியர்களின் பங்களிப்பைக்குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி.9ஆம் தேதி அன்று வெளிநாடுவாழ் இந்தியர் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த 1915ஆம் ஆண்டு இதே நாளில் 'மகாத்மா' காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியதையும் இந்நாள் நினைவுபடுத்துகிறது.

10. இந்தியாவில், 'அக்ஷய் உர்ஜா திவாஸ்' கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.15

ஆ. ஆகஸ்ட்.20 ☑

இ. செப்டம்பர்.15

ஈ. அக்டோபர்.15

✓ இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் வளர்ச்சி மற்றும் அதன் திறன்மிகு பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆக.20ஆம் தேதி, 'அக்ஷய் உர்ஜா திவாஸாக' அனுசரிக்கப்படுகிறது. இந்த நாள், இந்தியாவின் முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் பிறந்தநாளையும் நினைவுகூருகிறது. இந்த நாளை முதன்முதலில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், கடந்த 2004இல் கொண்டாடுவதாக அறிவித்தார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி நியமனம்

சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்டத் துறை அமைச்சகம் தெரிவித்தது. கடந்த பிப்ரவரி.10–ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக முனீஸ்வர்நாத் பண்டாரி நியமிக்கப்பட்டார். அவர் செப்.12 அன்று ஓய்வு பெறுகிறார். இதையடுத்து உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய சட்டத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. அவர் செப்.13–ஆம் தேதி பொறுப்பேற்பார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயது 65; உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறும் வயது 62 என்பது குறிப்பிடத்தக்கது.

2. பிரிட்டன் பிரதமராகிறார் லிஸ் டிரஸ்

பிரிட்டனை ஆளும் கன்சர்வேடிவ் கட்சியின் அடுத்த தலைவராக வெளியுறவு அமைச்சர் லிஸ் டிரஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்திய வம்சாவளியும் முன்னாள் நிதியமைச்சருமான ரிஷி சுனக்கைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ள லிஸ் டிரஸ், அந்நாட்டின் அடுத்த பிரதமராகவும் பொறுப்பேற்கவுள்ளார்.

பிரிட்டன் பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சனுக்கு உள்கட்சியிலேயே அதிக எதிர்ப்பு எழுந்ததையடுத்து, அவர் அப் பதவியை இராஜிநாமா செய்தார். அதைத்தொடர்ந்து, கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க பல்வேறு கட்டங்களாகத் தேர்தல் நடத்தப்பட்டது. இறுதியில் லிஸ் டிரஸுக்கும் ரிஷி சுனக்குக்கும் இடையே நேரடிப் போட்டி நிலவியது. இறுதிக்கட்டமாக கன்சர்வேடிவ் கட்சியைச் சேர்ந்த 1,72,437 நிர்வாகிகள் இணையவழியிலும் தபால் மூலமாகவும் வாக்களித்தனர். தேர்தல் முடிவுகள் திங்கள்கிழமை அறிவிக்கப்பட்டன. அதில், 81,326 வாக்குகளைப் பெற்று லிஸ் டிரஸ் வெற்றிபெற்றார். ரிஷி சுனக்குக்கு 60,399 வாக்குகள் கிடைத்தன. 654 வாக்குகள் செல்லாததாக அறிவிக்கப்பட்டன.

இதன்மூலமாக கன்சர்வேடிவ் கட்சியின் புதிய தலைவராக 47 வயதான லிஸ் டிரஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரிட்டனின் புதிய பிரதமராகவும் அவர் பொறுப்பேற்கவுள்ளார். அப்பதவியை வகிக்கவுள்ள 3–ஆவது பெண் என்ற பெருமையையும் லிஸ் டிரஸ் பெற்றுள்ளார். ஏற்கெனவே மார்கரெட் தாட்சர், தெரசா மே ஆகியோர் பிரிட்டன் பிரதமராகப் பதவி வகித்துள்ளனர்.

---

3. தில்லி இராஜபாதை, 'கடமைப்பாதையாக' பெயர்மாற்றம்

புது தில்லியில் உள்ள வரலாற்றுச்சிறப்புமிக்க இராஜபாதையின் பெயரை 'கர்த்தவ்ய பாதை' (கடமைப்பாதை) எனப் பெயர்மாற்றம் செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளதாக திங்கள்கிழமை அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய நாடாளுமன்ற வளாகம், குடியரசுத்துணைத்தலைவர் மாளிகை உள்ளிட்ட சென்ட்ரல் விஸ்டா திட்டத்தின்கீழ் கட்டடப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதன்கீழ், இந்தியா கேட் அடங்கிய புதுப்பிக்கப்பட்ட இராஜபாதையை செப்.8–ஆம் தேதி பிரதமர் மோடி திறந்துவைக்கிறார். இப்பாதையில் புதிய நாடாளுமன்ற கட்டடம், நடுவணரசின் தலைமைச்செயலக அலுவலகங்கள், குடியரசு துணைத்தலைவரின் புதிய இல்லம், பிரதமரின் புதிய இல்லம் மற்றும் அலுவலகம் ஆகியவை அமைந்துள்ளன.

தற்போது இந்தியா கேட் அருகே அமைந்துள்ள நேதாஜி சுபாஷ்சந்திர போஸின் சிலையிலிருந்து குடியரசுத்தலைவர் மாளிகை வரை அமைந்துள்ள சாலை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், 'மன்னரின் பாதை' என அழைக்கப்பட்டது. சுதந்திரத்துக்குப் பிறகு இது இராஜபாதையாக பெயர்மாற்றம் பெற்றது. இப்போது இந்தச் சாலையின் பெயரை 'கர்த்தவ்ய பாதை' (கடமைப்பாதை) எனப் பெயர்மாற்றம் செய்ய புது தில்லி மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

முன்னதாக, கடந்த 2015–ஆம் ஆண்டில், பிரதமர் இல்லம் அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் சாலை லோக் கல்யாண் சாலை எனவும், ஔரங்கசீப் சாலை ஏ பி ஜெ அப்துல் கலாம் சாலை எனவும், 2017–இல் டல்ஹௌசி சாலை தாரா ஷிகோ சாலை எனவும் 2018–இல் தீன்மூர்த்தி சௌக் என்பது தீன்மூர்த்தி ஹைஃபா சௌக் எனவும் பெயர்மாற்றம் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. UNESCO உலகளாவிய கற்றல் நகரங்களில் இணைந்துள்ள நகரங்கள் யாவை?

அ. வாரங்கல், திருச்சூர் மற்றும் நிலம்பூர் ☑

ஆ. மைசூரு, வாரணாசி மற்றும் ஜெய்ப்பூர்

இ. கொச்சி, மைசூரு மற்றும் வாரணாசி

ஈ. காஞ்சிபுரம், தோலவிரா மற்றும் மைசூரு

✓ தெலுங்கானா மாநிலத்திலிருந்து வாரங்கல் மற்றும் கேரள மாநிலத்திலிருந்து திருச்சூர் மற்றும் நிலம்பூர் UNESCO உலகளாவிய கற்றல் நகரங்களில் சேர்ந்துள்ளன. 44 நாடுகளைச் சேர்ந்த 77 நகரங்கள் சமீபத்தில் இப்பட்டியலில் இணைந்தன; இதில் உலகம் முழுவதிலுமிருந்து 294 நகரங்கள் அடங்கும். கற்றலை மேம்படுத்துவதற்கான அந்த நகரங்களின் சிறந்த முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக அந்த நகரங்கள் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

2. எந்த நகரத்தில் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொகுதியை அமைக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது?

அ. சென்னை

ஆ. புனே ☑

இ. புது தில்லி

ஈ. பெங்களூரு



✓ புனேயில் ₹500 கோடி மதிப்பீட்டில் மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொகுதியை அமைக்க அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்தத் திட்டம், ₹2000 கோடி வரை முதலீடுகளை ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின்னணுப் பொருட்கள் உற்பத்தித் தொகுதி ஆனது சுமார் 297 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்படவுள்ளது.

3. 'இந்திராகாந்தி ஷெஹரி ரோஜ்கர் உத்தரவாத யோஜனா' என்பது கீழ்க்காணும் எந்த மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் முனைவாகும்?

அ. சத்தீஸ்கர்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. பஞ்சாப்

ஈ. புது தில்லி

✓ 'இந்திராகாந்தி ஷெஹரி ரோஜ்கர் உத்தரவாத யோஜனா' என்ற பெயரிடப்பட்ட நகர்ப்புற ஏழைகளுக்கான நாட்டின் முதல் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை இராஜஸ்தான் மாநிலம் தொடங்கவுள்ளது. ₹800 கோடி மதிப்பீட்டில் செப்.9 அன்று இந்தத் திட்டம் தொடங்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் நகர்ப்புற ஏழைகளுக்கு, குறிப்பாக COVID-19 தொற்றுகாலத்தின்போது வேலையிழந்தோர்க்கு 100 நாட்கள் உத்தரவாதமான வேலைவாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

4. பெங்களூரு விண்வெளிக்கண்காட்சியின்போது, விண்வெளி தொழில்நுட்பத்திற்காக கீழ்க்காணும் எந்த நாட்டின் விண்வெளி நிறுவனத்துடன் ISRO கூட்டிணைந்தது?

அ. அமெரிக்கா

ஆ. ஜப்பான்

இ. ஆஸ்திரேலியா ☑

ஈ. பிரான்ஸ்

✓ பெங்களூருவில் நடைபெற்ற விண்வெளிக் கண்காட்சியின்போது இந்திய மற்றும் ஆஸ்திரேலிய விண்வெளி துளிர் நிறுவனங்களுக்கு இடையே 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) மற்றும் ஆஸ்திரேலிய விண்வெளி முகமை (ASA) ஆகியவை இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே விண்வெளித் தொழில்நுட்பம் சார்ந்த சந்தைகளை உருவாக்க முடிவுசெய்துள்ளன. ASA என்பது ஆஸியின் வணிகரீதியிலான விண்வெளித் துறையின் வளர்ச்சிக்கு பொறுப்பான ஒரு நிறுவனமாகும்.

5. அண்மையில் தொடங்கப்பட்ட, 'PM SHRI' யோஜனா என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ. மின்னணுவியல்

ஆ. ஏற்றுமதி

இ. கல்வி ☑

ஈ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

✓ ரைசிங் இந்தியா (PM–SHRI) யோஜனாவுக்கான பிரதம மந்திரி பள்ளிகளை பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். இந்தத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதுமுள்ள 14,500 பள்ளிகள் PM–SHRI பள்ளிகளாக தரமுயர்த்தப்படும். அப்பள்ளிகள் கல்வியைப் போதிப்பதற்கான நவீன முறைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும். 'PM SHRI' பள்ளிகள், தேசிய கல்விக்கொள்கை – 2020இன் அனைத்து கூறுகளையும் வெளிப்படுத்தும்.

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குக்ரைல் வனப்பகுதி அமைந்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?

அ. கேரளா

ஆ. உத்தர பிரதேசம் ☑

இ. மத்திய பிரதேசம்

ஈ. மகாராஷ்டிரா

✓ லக்னௌ மாவட்டம் குக்ரைல் வனப்பகுதியில் இரவுநேர வனப்பயணத்தைத் தொடங்க உத்தர பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், வனப்பகுதியில் உள்ள 2,027 ஹெக்டேர் வனப்பகுதியில் விலங்கியல் பூங்கா மற்றும் இரவுநேர வனப்பயணத்தை அரசு அமைக்கும். சூழல் சுற்றுலாவை மேம்படுத்தவும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உத்தர பிரதேச மாநில அரசு அதன் 'ஒரு மாவட்டம், ஒரு தளம்' திட்டத்தின்கீழ் மாநிலத்தின் 56 மாவட்டங்களில் 56 சூழல் சுற்றுலா தளங்களை அடையாளம் கண்டுள்ளது.

7. எல்லைப்புறச்சாலைகள் அமைப்பானது (BRO) எஃகுக் கழிவுப்பொருட்களைக்கொண்டு சோதனை முறையிலான சாலையை கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் அமைக்கவுள்ளது?

அ. அஸ்ஸாம்

ஆ. மேற்கு வங்கம்

இ. பீகார்

ஈ. அருணாச்சல பிரதேசம் ☑

✓ எல்லைப்புறச்சாலைகள் அமைப்பானது (BRO) அருணாச்சல பிரதேசத்தில் எஃகுக்கழிவுப்பொருட்களைக்கொண்டு சோதனை முறையிலான சாலையை அமைக்க திட்டமிட்டுள்ளது. கனமழை மற்றும் கடினமான வானிலை நிலைகளைத் தாங்கும் இந்த எஃகுக் கழிவு அடிப்படையிலான சாலை, BROஇன் முழுமுதல் திட்டமாகும். இந்தச் சாலைத்திட்டம், வடகிழக்கு இந்தியாவிலுள்ள உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இணைக்க உதவும்.

8. குஜராத் மாநிலத்தின் ஹசிராவில் புதிய பசுமை ஹைட்ரஜன் ஆலையைத் தொடங்கியுள்ள நிறுவனம் எது?

அ. ONGC ஆ. BHEL

இ. L&T ☑ ஈ. BPCL

✓ பொறியியல் நிறுவனமான லார்சன்&டூப்ரோ (L&T) குஜராத் மாநிலத்தின் ஹசிராவில் ஒரு புதிய பசுமை ஹைட்ரஜன் ஆலையைத் தொடங்கியது. இந்நிறுவனம் பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்காக இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (IOC) மற்றும் 'ரெனியூ பவர்' உடனான கூட்டு முனைவில் ஒப்பமிட்டது. இந்த ஆலை தினசரி 45 கிலோ பசுமை ஹைட்ரஜனை உற்பத்தி செய்யும்; அது நிறுவனத்தின் ஹசிரா உற்பத்தி வளாகத்தில் நுகர்வுக்கு பயன்படுத்தப்படும்.

9. 'மகாத்மா' காந்தியடிகளின் மார்பளவுச்சிலையை கீழ்க்காணும் எந்த நாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் திறந்து வைத்தார்?

அ. பராகுவே ☑

ஆ. ஈரான்

இ. ஓமன்

ஈ. கத்தார்

✓ இந்தியாவின் நடுவண் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், 'மகாத்மா' காந்தியடிகளின் மார்பளவுச்சிலையை பராகுவேயில் திறந்துவைத்தார். இருநூற்றாண்டுகளுக்கு முன்னர் தென்னமெரிக்க நாட்டில் விடுதலை இயக்கம் தொடங்கப்பட்ட, 'காசா டி லா இன்டிபென்டென்சியா' என்ற இடத்தையும் அவர் பார்வையிட்டார்.

10. ஷாஹீத் பகத் சிங்கின் பெயர்சூட்டப்படவுள்ள இந்திய வானூர்தி நிலையம் எது?

அ. சண்டிகர் பன்னாட்டு வானூர்தி நிலையம் ☑

ஆ. புது தில்லி பன்னாட்டு வானூர்தி நிலையம்

இ. கொச்சி பன்னாட்டு வானூர்தி நிலையம்

ஈ. மும்பை பன்னாட்டு வானூர்தி நிலையம்

✓ சண்டிகர் பன்னாட்டு வானூர்தி நிலையத்திற்கு ஷாஹீத்–இ–ஆசம் பகத் சிங்கின் பெயரைச் சூட்ட பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்கள் ஒப்புக்கொண்டுள்ளன. பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் பெயரை மாற்றுவது தொடர்பாக இருமாநிலங்களுக்கும் பல தசாப்தங்களாக மோதல் இருந்து வந்தது. முன்னதாக, பஞ்சாப் விதான் சபா இந்த வானூர்தி நிலையத்திற்கு, 'ஷாஹீத்–இ–ஆசம் சர்தார் பகத் சிங் பன்னாட்டு வானூர்தி நிலையம், மொஹாலி' எனப் பெயரிட தீர்மானம் நிறைவேற்றியது. ஹரியானா விதான் சபாவில், 'சண்டிகர்' என்ற பெயரைப் பயன்படுத்தி முனையத்தின் பெயரை மாற்றுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. மீண்டும் 'சிவிங்கிப்புலி' திட்டம்: செப்.17இல் பிரதமர் தொடக்கம்

இந்திய காடுகளில் மீண்டும் 'சிவிங்கிப்புலி'யை (சீட்டா) அறிமுகப்படுத்தும் திட்டத்தை, மத்திய பிரதேசத்தின் குனோ தேசிய பூங்காவில் பிரதமர் நரேந்திர மோடி செப்.17இல் தொடக்கிவைக்கவுள்ளதாக அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் செளஹான் தெரிவித்தார்.

உலகிலேயே மிகவேகமாக ஓடக்கூடிய உயிரினமான சிவிங்கிப்புலிகள், ஒருகாலத்தில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டது. ஆனால், நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்ட அரசர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உள்ளிட்டோர் பொழுதுபோக்குக்காக அவற்றை பெருமளவில் வேட்டையாடியதால், சிவிங்கிப் புலிகளின் இனமே இந்தியாவில் அழிந்துபோனது. நாட்டில் கடைசியாகக் காணப்பட்ட சிவிங்கிப்புலி, இன்றைய சத்தீஸ்கர் பகுதியில் கடந்த 1947–இல் கண்டறியப்பட்டது. இந்தியாவில் இந்த இனம் முற்றிலும் அழிந்துவிட்டதாக கடந்த 1952–இல் அறிவிக்கப்பட்டது. தற்போது உலகம் முழுவதும் சுமார் 7,000 சிவிங்கிப்புலிகளே உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை ஆப்பிரிக்க காடுகளில் உள்ளன.

2. ரஷியாவில் இந்தியா பங்கேற்கும் 'வாஸ்டாக்' இராணுவ கூட்டுப்பயிற்சி

ரஷியாவில் இந்தியா பங்கேற்கும் 'வாஸ்டாக்' இராணுவ கூட்டுப்பயிற்சி தொடங்கியது. ரஷியாவின் தொலைதூர கிழக்குப் பகுதியிலும், ஜப்பான் கடற்பகுதியிலும் நடைபெறும் இந்தப்பயிற்சி, செப்.7 அன்று நிறைவடைகிறது. இதில் இந்தியா, சீனா, லாவோஸ், மங்கோலியா உள்ளிட்ட 13 நாடுகள் பங்கேற்றுள்ளன. 50,000–க்கும் மேற்பட்ட வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். 140 போர்விமானங்கள், 60 போர்க்கப்பல்கள், ஆயிரக்கணக்கான ஆயுதங்கள் பயிற்சியில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சியில் சீன முப்படைகள் சார்பில் 2,000–க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றுள்ளனர். அந்நாட்டின் 300 இராணுவ வாகனங்கள், 21 போர்விமானங்கள், 3 போர்க்கப்பல்கள் உள்ளிட்டவையும் பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

---

3. யுனெஸ்கோ கல்வி நகரங்கள் பட்டியலில் திருச்சூர்!

பலதரப்பட்ட மக்களிடையே கல்வியைக் கொண்டுசேர்ப்பதில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக கேரளத்தின் திருச்சூர், நிலம்பூர் ஆகிய நகரங்களும் தெலங்கானாவின் வரங்கல் நகரமும் யுனெஸ்கோவின், 'கல்வி நகரங்கள்' பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

சர்வதேச அளவில் மக்களுக்கு சிறப்பான கல்வி வசதிகளை அளித்து வரும் நகரங்களை யுனெஸ்கோ கௌரவித்து வருகிறது. சமூகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் கல்வி சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் யுனெஸ்கோ சர்வதேச கல்வி நகரங்கள் பட்டியலை ஏற்படுத்தியுள்ளது. அந்தப் பட்டியலில் 44 நாடுகளைச் சேர்ந்த 77 நகரங்கள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இருந்து 3 நகரங்கள் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட மக்களுக்கு சிறப்பான கல்வி சேவைகளை வழங்கி வருவதற்காக திருச்சூர், நிலம்பூர், வரங்கல் ஆகிய நகரங்கள் யுனெஸ்கோவின் பட்டியலில் இணைந்துள்ளன. மக்களுக்கு கல்வி சேவைகளைக் கொண்டுசெல்லும் சிறப்பான நகரங்களைக் கண்டு மற்ற நகரங்கள் ஊக்கம்பெற இந்நடவடிக்கை உதவுவதாக யுனெஸ்கோ தெரிவித்துள்ளது. வரங்கலில் உள்ள இராமப்பா கோயிலை உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றாக யுனெஸ்கோ கடந்த ஆண்டு அறிவித்தது. தற்போது வரங்கல் நகரம் கல்வி நகரங்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் தலைநகரம் கீவ், தென்னாப்பிரிக்காவின் டர்பன், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா ஆகிய நகரங்களும் யுனெஸ்கோ கல்வி நகரங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. அப்பட்டியலில் தற்போது 76 நாடுகளைச் சேர்ந்த 294 நகரங்கள் இடம்பெற்றுள்ளன. பட்டியலில் இணைக்கப்படும் நகரங்கள் ஐநாவின் நீடித்த வளர்ச்சிக்கான கல்வி சார்ந்த இலக்குகளை அடைவதற்கு யுனெஸ்கோ உதவ உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. எந்த மாநிலத்திற்கான புதிய கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்திற்கு நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது?

அ. கேரளா

ஆ. கர்நாடகா ☑

இ. கோவா

ஈ. மகாராஷ்டிரா

✓ வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் சமீபத்தில் கர்நாடகாவுக்கான புதிய கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. கர்நாடகாவில் உள்ள கோல்ட்ஃபிஞ்ச் நகரத்தில் ₹3,800 கோடி மதிப்பிலான பல்வேறு பணிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். புதிய கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பின்படி இந்தத் திட்டத்தைத் தயாரித்து ஒப்புதல் பெற்ற தென்னிந்தியாவின் முதல் மாநிலம் மற்றும் நாட்டிலேயே இரண்டாவது மாநிலமாக கர்நாடகா உள்ளது.

2. 2022 மார்ச் நிலவரப்படி, நிதியமைச்சகத்தின் தரவுகளின்படி, இந்தியாவின் அயல்நாட்டுக்கடன் எவ்வளவு?

அ. $220 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

ஆ. $420 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

இ. $620 பில்லியன் அமெரிக்க டாலர்கள் ☑

ஈ. $820 பில்லியன் அமெரிக்க டாலர்கள்

✓ நடுவண் நிதியமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் வெளிநாட்டுக் கடன் நிர்வாகப்பிரிவு இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 2021–22 குறித்த 28ஆவது நிலைமை அறிக்கையை வெளியிட்டுள்ளது. 2021 மார்ச் இறுதியில், $573.7 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக்கடன், 2022 மார்ச் இறுதியில் 8.2 சதவீதம் அதிகரித்து $620.7 பில்லியன் அமெரிக்கன் டாலர் ஆகியுள்ளது. உள்நாட்டு மொத்த உற்பத்தி விகிதத்தில் வெளிநாட்டுக்கடன் அளவு ஓராண்டுக்கு முன் 21.2 சதவீதம் என்பதிலிருந்து கணிசமாக குறைந்து 2022 மார்ச் இறுதியில், 19.9 சதவீதம் ஆகியுள்ளது.

✓ அந்நிய செலாவணி கையிருப்பு, விகிதத்தில் ஓராண்டுக்கு முன் 100.6% என்பதைவிட, 2022 மார்ச் இறுதியில் 97.8 சதவீதம் என வெளிநாட்டுக்கடன் லேசாக குறைந்துள்ளது. நீண்டகால கடன் அளவு $499. 1 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும், குறுகிய காலக்கடன் அளவு $121.7 பில்லியன் அமெரிக்க டாலர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

3. இந்தியாவின் சலுகை நிதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மைத்ரீ சூப்பர் அனல்மின்திட்டத்தில் உற்பத்தியைத் தொடக்கிய நாடு எது?

அ. இலங்கை

ஆ. வங்காளதேசம் ☑

இ. நேபாளம்

ஈ. மியான்மர்

✓ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர் இணைந்து மைத்ரீ சூப்பர் அனல்மின் திட்டத்தின் அலகு–1–ஐ தொடக்கி வைத்தனர். இந்தத் திட்டம் இந்தியாவின் சலுகை நிதி திட்டத்தின்கீழ் கட்டமைக்கப்படுகிறது. இது வங்காளதேசத்தின் தேசிய கட்டமைப்பிற்கு 1320 மெகாவாட்களைக்கொண்டுசேர்க்கும். நீர்வளம், இரயில்வே, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், விண்வெளி தொழில்நுட்பம் உள்ளிட்ட 7 ஒப்பந்தங்கள் இவ்விரு நாட்டு பிரதமர்களிடையே பரிமாறிக்கொள்ளப்பட்டன.

4. இந்தியாவின் முதல் நாசியுள் செலுத்தப்படும் கொரோனா தடுப்பூசியான iNCOVACC–ஐ உருவாக்கிய நிறுவனம் எது?

அ. பயோகான்

ஆ. Dr ரெட்டி ஆய்வகம்

இ. பாரத் பயோடெக் ☑

ஈ. இந்திய சீரம் நிறுவனம்

✓ பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அவசரகால பயன்பாட்டிற்கான நாட்டின் முதல் நாசியுள் செலுத்தப்படும் COVID–19 தடுப்பூசிக்கு இந்திய தலைமை மருந்துக்கட்டுப்பாட்டு இயக்குநரகம் ஒப்புதல் அளித்துள்ளது. 'iNCOVACC' என்று பெயரிடப்பட்ட இத்தடுப்பூசி பாரத் பயோடெக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இது, சீனாவின், 'CanSino Biologics' தடுப்பூசிக்குப் பிறகு, ஓர் ஒழுங்குமுறை அனுமதியைப் பெற்ற உலகின் இரண்டாவது தடுப்பூசி ஆகும். 'iNCOVACC' என்பது சிம்பன்சி அடினோவைரஸ் வெக்டார்டு மறுசீரமைப்பு நாசியுள் செலுத்தக்கூடிய தடுப்பூசி ஆகும்.

5. முடக்கச் செயலிக்கு எதிரான சர்வதேச முனைவின் ஒருபகுதியான சைபர் பாதுகாப்புப் பயிற்சியை, இந்தியா, எந்த நாட்டுடன் இணைந்து நடத்தியது?

அ. ஜப்பான்

ஆ. பிரான்ஸ்

இ. இங்கிலாந்து ☑

ஈ. ஆஸ்திரேலியா



✓ இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகமும் (NSCS) இங்கிலாந்து (UK) அரசும் BAE அமைப்புகளுடன் இணைந்து இருபத்தாறு நாடுகளுக்கு இணையவெளிப் பாதுகாப்புப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்தின. தேசிய இணையவெளிப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் (NCSC) தலைமையில் இந்தியாவால் நடத்தப்படும் முடக்கச் செயலிக்கு எதிரான சர்வதேச மென்பொருள் முனைவு – நெகிழ்திறன்மிக்க பணிக்குழுவின் ஒருபகுதியாக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

6. 'தேசிய பெண் காவலர்கள் மாநாடு' நடைபெறும் இடம் எது?

அ. புது தில்லி

ஆ. லக்னோ ☑

இ. சிம்லா

ஈ. மைசூரு

✓ ஹிமாச்சல பிரதேச மாநில காவல்துறையுடன் இணைந்து சிம்லாவில் உள்துறை அமைச்சகமும் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணியகமும் (BPRD) இணைந்து இரண்டு நாள் நடைபெறும், 'தேசிய பெண் காவலர்கள் மாநாட்டை' ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் பெண் காவலர்களின் சாதனைகள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து விவாதிக்கப்படும். வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் மற்றும் குற்றங்களின் அடிப்படையில் பெண் காவலர்களின் புதிய பதவிகள் மற்றும் பொறுப்புகள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும்.

7. INS சுமேதாவின் பங்கேற்புடன் இந்தியா சமீபத்தில் எந்த நாட்டுடனான, 'கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை (MPX)' நிறைவு செய்தது?

அ. அமெரிக்கா **ஆ. ஆஸ்திரேலியா ☑**

இ. பிரான்ஸ் ஈ. ஜப்பான்

✓ இந்திய கடற்படைக்கும் இராயல் ஆஸ்திரேலிய கடற்படைக்கும் இடையிலான வலுவான தொடர்புகள் மற்றும் இயங்குநிலையை மறுவுறுதிப்படுத்தும் பயிற்சியில் HMAS அன்சாக்குடன் INS சுமேதா பங்கேற்றது. INS சுமேதா என்பது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கடற்படை கடல் ரோந்துக்கப்பல் ஆகும். 'விடுதலை அமுதப்பெருவிழா' கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக அனைத்து கண்டங்களிலும், 'மூவர்ணக்கொடி'யை ஏற்றி வைப்பது இந்திய கடற்படையின் முனைவின் ஒருபகுதியாகும்.

8. மிகநீண்ட வறட்சியை எதிர்கொண்டு வரும் இந்தியாவின் அண்டை நாடு எது?

அ. மியான்மர்

ஆ. சீனா ☑

இ. இலங்கை

ஈ. நேபாளம்

✓ ஒரு மாதத்திறக்கும் மேல் வீசிவரும் வெப்ப அலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு ஆகியவை சீனாவில் நீண்ட வறட்சியை அந்த நாட்டின் மிகநீளமான ஆறான யாங்சியில் ஏற்படுத்தியுள்ளது. டோங்டிங் போன்ற ஏரிகளும் கிளை ஆறுகளும் வறட்சியின் விளைவாக வற்றிப்போயுள்ளன. ஆற்றின் குறைந்த நீர்மட்டம் அப்பகுதியில் உள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி செய்யும் திறனையும் குறைத்துள்ளது.

9. 'உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்டு' என்ற பெயரில் இராணுவப் பயிற்சியை நடத்தும் நாடு எது?

அ. தென் கொரியா ☑

ஆ. ஜப்பான்

இ. சீனா

ஈ. ரஷ்யா

✓ தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து தென்கொரியாவில், 'உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்ட்' என்ற களப்பயிற்சியை மீண்டும் தொடங்குவதன்மூலம் தங்களின் மிகப்பெரிய இராணுவக் கூட்டணியை மறுவுறுதி செய்துள்ளன. இந்த ஆண்டு கோடைக்கால பயிற்சியானது தென் கொரிய அதிபர் யூன் சுக்–யோல் அவர்களால், 'Ulchi Freedom Shield' என அழைக்கப்பட்டது. ஒருங்கிணைந்த பயிற்சிகளை இயல்பாக்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

10. அண்மையில் தொடங்கப்பட்ட, 'சில்க் மார்க் கண்காட்சி' நடைபெற்று வரும் இடம் எது?

அ. புது தில்லி ☑

ஆ. சென்னை

இ. முசோரி

ஈ. காஞ்சிபுரம்

✓ நடுவண் ஜவுளித்துறை இணையமைச்சர் தர்ஷனா ஜர்தோஷ் புது தில்லியில் சில்க் மார்க் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார். ஜவுளி அமைச்சகத்தின் நடுவண் பட்டு வாரியத்தின்கீழ் உள்ள இந்திய சில்க் மார்க் அமைப்பு இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. சில்க் மார்க் என்பது தரம் உறுதி செய்யும் லேபிள் ஆகும்; இது தயாரிப்பு ஆனது தூய இயற்கைப் பட்டால் ஆனது என்பதை தீர்மானிக்க அரசாங்கத்தால் தொடங்கப்பட்டது ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் வழக்குரைஞராக இராம்சங்கர் இராஜா நியமனம்

உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் தரப்பில் வழக்குரைஞராக ஆஜராக இராஜபாளையத்தை சேர்ந்த இராம் சங்கர் இராஜா நியமிக்கப்பட்டுள்ளார். நடுவணரசின் சட்டம், நீதித்துறை மற்றும் சட்ட விவகாரங்கள் துறை அமைச்சகம் உச்சநீதிமன்றத்தில் நடுவணரசின் வழக்குரைஞராக இராம்சங்கர் இராஜாவை நியமித்து அரசாணை வெளியிட்டது. இதில் அவரது பதவிக்காலம் 3 ஆண்டுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

---

2. காலை சிற்றுண்டி திட்டம்: செப். 15–இல் மதுரையில் தொடக்கம்

காலை சிற்றுண்டி திட்டம் மதுரையில் வரும் 15–ஆம் தேதி தொடங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தை மதுரையில் உள்ள பள்ளிகளில் முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கிவைக்கிறார்.

தமிழகத்தில் மாநில அரசின் முழுமையான நிதியைக்கொண்டு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்காக ₹33.56 கோடி ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அன்று சென்னை– இன்று மதுரை: பள்ளியில் உணவளிக்கும் திட்டம் சென்னையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, முன்மொழியப்பட்டு மாநகராட்சி நிர்வாகத்தால் நிறைவேற்றப்பட்டது. அப்போதைய மாமன்றத்தின் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயர் தலைமையில் 1920–ஆம் ஆண்டு செப்.16–இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னை ஆயிரம் விளக்கு மாநகராட்சிப் பள்ளியில் மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்போது, நூறு ஆண்டுகளுக்குப் பிறகு அதே செப்டம்பர் மாதத்தில் காலை சிற்றுண்டி திட்டம், மதுரையில் தொடங்கப்படவுள்ளது.

---

1. அண்மையில் தொடங்கப்பட்ட, 'நி–க்ஷய் 2.0' என்ற இணையதளத்துடன் தொடர்புடைய நோய் எது?



அ. புற்றுநோய்

ஆ. காசநோய் ☑

இ. COVID-19

ஈ. இரத்த சோகை

✓ இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு பிரதமர் காசநோய் (TB) முக்த் பாரத் அபியான், 'நி–க்ஷய் 2.0' என்ற இணையதளத்தை தொடங்கவுள்ளார். நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் 2025ஆம் ஆண்டுக்குள் காசநோயை ஒழிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. 'நி–க்ஷய் 2.0' என்பது காசநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சமூக அளவிலான ஆதரவை வழங்கும் ஒரு டிஜிட்டல் தளமாகும். இது காசநோயாளிகளின் சிகிச்சை விளைவுகளை மேம்படுத்துவதற்கான கூடுதல் ஆதரவை வழங்குகிறது.

2. இளநிலை பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்காக மாணவிகளுக்கு மாதந்தோறும் நிதியுதவி வழங்கும், 'புதுமைப் பெண்' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. ஒடிஸா

இ. கர்நாடகா

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ தமிழ்நாடு அரசானது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டத்தை, 'புதுமைப்பெண் திட்டம்' என மாற்றியமைத்துள்ளது. இளங்கலைப்பட்டம், பட்டயப்படிப்பு, ஐடிஐ அல்லது வேறு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட படிப்பைத்தொடருவதற்காக, மாணவிகளுக்கு மாதந்தோறும் ₹1,000 உதவித்தொகையை இத்திட்டம் வழங்குகிறது. அரசுப்பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் இந்த நிதியுதவி பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

3. பிரதமர் கதி சக்தி திட்டத்திற்கு இரயில்வே நிலத்தை நீண்டகால குத்தகைக்கு விடுவதற்கான கொள்கையின்படி, நில குத்தகையானது எத்தனை ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது?

அ. 10

ஆ. 15

இ. 25

ஈ. 35 ☑

✓ பிரதமரின் கதிசக்தி கட்டமைப்பு அமலாக்கத்திற்காக இரயில்வேக்கு சொந்தமான நிலத்தை நீண்டகால குத்தகைக்கு அளிப்பதற்கான கொள்கைக்கு பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ இதன்மூலம், இரயில்வேயின் சரக்குப் போக்குவரத்து அதிகரித்து அதன்மூலம் தொழிற்துறையின் சரக்குப் போக்குவரத்திற்கான செலவும் குறையும்; இரயில்வேக்கு அதிக வருவாய் கிடைக்கும். இக்கொள்கையின்மூலம் 1.2 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். பிரதமரின் கதிசக்தி திட்டத்தின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் 300 சரக்குப் போக்குவரத்து முனையங்கள் அமைக்கப்படும். நிலத்தின் சந்தை மதிப்பில், ஆண்டுக்கு 1.5 சதவீத வட்டியில், 35 ஆண்டுகள் வரை சரக்குப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக ரயில்வே நிலங்கள் நீண்டகால குத்தகைக்கு அளிக்கப்படவுள்ளன.

4. செப்.9ஆம் தேதியை, 'இமயமலை வெற்றி நாள்' என்று கொண்டாடுகிற மாநிலம் எது?

அ. பீகார்

ஆ. அஸ்ஸாம்

இ. உத்தரகாண்ட் ☑

ஈ. சிக்கிம்

✓ இமயமலையின் சுற்றுச்சூழலையும் பிராந்தியத்தையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்.9ஆம் தேதி, 'இமயமலை வெற்றி நாள்' கொண்டாடப்படுகிறது. இது கடந்த, 2015ஆம் ஆண்டில், உத்தரகாண்டின் அப்போதைய முதல்வரால் அதிகாரப்பூர்வமாக இமயமலை நாளாக அறிவிக்கப்பட்டது. கடந்த 2014ஆம் ஆண்டில், அப்போதைய முதலமைச்சர் ஹரிஷ் இராவத், இமயமலை சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாப்பதற்கான செய்தியைப்பரப்புவதற்காக மாநிலம் முழுவதும் செப்.9ஆம் தேதியை 'இமயமலை வெற்றி நாள்' என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தார்.

5. மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிராக தனது தொழிற்முறை வாழ்வில் தொடர்ச்சியாக மூன்றாவது வெற்றியைப் பதிவு செய்த இந்திய செஸ் வீரர் யார்?

அ. குகேஷ் D

ஆ. பிரக்ஞானந்தா R ☑

இ. விதித் குஜராத்தி

ஈ. நிஹால் சரின்

✓ 17 வயதான இந்திய சதுரங்க வீரர் R பிரக்ஞானந்தா தனது தொழிற்முறை வாழ்வில் நார்வே செஸ் வீரர் மேக்னஸ் கார்ல்சனுக்கு எதிராக தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பதிவுசெய்தார். FTX கிரிப்டோ கோப்பையில் தனது இறுதிப்போட்டியில் ஐந்து முறை உலக செஸ் சாம்பியனான மேக்னஸ் கார்ல்சனை பிரக்ஞானந்தா வீழ்த்தினார். இருந்தாலும், 7 சுற்றுகள் முடிவில் மேக்னஸ் கார்ல்சன் 16 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தார். பிரக்ஞானந்தா 15 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தைப் பிடித்தார்.

6. புவிசார் குறியீடு பெற்ற, 'மிதிலா மக்கானா' பயிரிடப்படுகிற மாநிலம் எது?

அ. ஆந்திரப் பிரதேசம்

ஆ. பீகார் ☑

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்

✓ விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு அதிகபட்ச விலையைப்பெற உதவும் வகையில், அரசாங்கம் சமீபத்தில் 'மிதிலா மக்கானா'வுக்கு புவிசார் குறியீட்டை வழங்கியுள்ளது. இதன் தாவரவியல் பெயர், 'Euryale Ferox Salisb' ஆகும். இது ஒரு சிறப்பு வகை நீர்வாழ் தாமரைப்பொரி ஆகும். 'மிதிலா மக்கானா' பீகாரின் மிதிலா பகுதியிலும் நேபாளத்தின் சில பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. பாகல்பூரின் ஜர்தாலு மாம்பழம், கதர்னி தான் (அரிசி), நவாடாவின் மாகாய் பான் மற்றும் முசாபர்பூரின் ஷாஹி லிச்சிக்குப் பிறகு புவிசார் குறியீடு பெறும் பீகாரைச் சார்ந்த ஐந்தாவது பொருள் இதுவாகும்.

7. UN இணைய ஆளுகை கருத்துக்கள தலைமைத்துவ அரங்கிற்கு நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?

அ. அல்கேஷ் குமார் சர்மா ☑ ஆ. நந்தன் நிலேகனி

இ. K V காமத் ஈ. கிரிஸ் கோபாலகிருஷ்ணன்

✓ ஐநா பொதுச்செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், இந்திய மூத்த அதிகாரி அல்கேஷ் குமார் சர்மாவை இணைய ஆளுமை கருத்துக்களத்தின் தலைமைத்துவ குழுவில் சேர்த்துள்ளார். உலகெங்கிலும் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 புகழ்பெற்ற டிஜிட்டல் ஆளுமை நிபுணர்களில் அவரும் ஒருவர். அவர் ராஜஸ்தானை சேர்ந்த 1990 பேட்ச் ஐஏஎஸ் அதிகாரியும் அமைச்சரவை செயலகத்தில் முன்னாள் செயலாளராகவும் உள்ளார். அவர் இதற்கு முன்னர் UNDPஇல் நகர்ப்புற மேம்பாடு மற்றும் வறுமை ஒழிப்புக்கான தேசிய திட்ட இயக்குநராக பணியாற்றியுள்ளார்.

8. தேசிய குடும்பநல கணக்கெடுப்பு 2019–21'இன்படி, இந்தியாவில் பிறப்பின் போதான பாலின விகிதம் என்ன?

அ. 110

ஆ. 108 ☑

இ. 105

ஈ. 101

✓ பியூ ஆராய்ச்சி மையத்தின் சமீபத்திய ஆய்வின்படி, இந்தியாவில் பிறக்கும்போது நிலவும் பாலின விகிதம், ஒவ்வொரு 100 ஆண் குழந்தைகளுக்கும் பிறக்கும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை, சற்று சீராக உள்ளது. 2015–16இல் 100 பெண் குழந்தைகளுக்கு 109 ஆண் குழந்தைகளாக இருந்த பாலின விகிதம், 2019–21இல் 100 பெண் குழந்தைகளுக்கு 108 ஆண் குழந்தைகளாக குறைந்துள்ளது என்று தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 2019–21இன் தரவு காட்டுகிறது. இந்தியாவில், 'காணாமல் போகும்' பெண் குழந்தைகளின் சராசரி ஆண்டு எண்ணிக்கை 2010இல் இருந்த சுமார் 4.8 இலட்சத்திலிருந்து 2019இல் 4.1 இலட்சமாகக் குறைந்துள்ளது.

9. ஆசியாவின் மிகப்பெரிய அழுக்கப்பட்ட உயிரிவாயு ஆலை தொடங்கப்பட்டுள்ள மாநிலம்/UT எது?

அ. பஞ்சாப் ☑

ஆ. கேரளா

இ. சத்தீஸ்கர்

ஈ. ஆந்திர பிரதேசம்

✓ பஞ்சாபின் சங்ரூர் மாவட்டத்தில் உள்ள ஆசியாவின் மிகப்பெரிய அழுக்கப்பட்ட உயிரிவாயு ஆலையானது சமீபத்தில் அதன் வணிக ரீதியிலான உற்பத்தியைத் தொடங்கியது. இந்திய எண்ணெய் நிறுவன விற்பனை நிலையத்திற்கு இந்த உயிரி வாயு விநியோகம் செய்யப்படுகிறது. எரித்தலைத் தடுக்கும் நோக்கோடு பஞ்சாப் ஆற்றல் மேம்பாட்டு நிறுவனமானது 42 கூடுதல் அழுக்கப்பட்ட உயிரிவாயு திட்டங்களை நெல் வைக்கோல் மற்றும் பிற விவசாய மீதங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கவுள்ளது.

10. உலகளாவிய AI உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?

அ. ஆஸ்திரேலியா

ஆ. சவூதி அரேபியா ☑

இ. பிரான்ஸ்

ஈ. ஸ்பெயின்



✓ சவூதி அரேபியாவானது இந்த ஆண்டு (2022) செப்டம்பரில் உலகளாவிய AI உச்சிமாநாட்டின் இரண்டாவது பதிப்பை, "மனிதகுலத்தின் நன்மைக்கான செயற்கை நுண்ணறிவு" என்ற கருப்பொருளின்கீழ் ஏற்பாடு செய்ய உள்ளது. நடக்கவிருக்கும் இந்த நிகழ்வில் உலகெங்கிலும் உள்ள அரசு நிறுவனங்கள் மற்றும் முக்கிய தொழில்நுட்ப நிறுவனங்களின் வல்லுநர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நமக்கு முன்னிருக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பது மற்றும் AI தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துவதுபோன்ற பல்வேறு தலைப்புகளில் இதன் சமயம் விவாதம் நடைபெறும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நியூசிலாந்துக்கான புதிய இந்தியத் தூதர் நியமனம்

நியூசிலாந்து நாட்டுக்கான புதிய இந்தியத்தூதராக, வெளியுறவுப்பணி மூத்த அதிகாரி நீத்தா பூஷண் நியமனம் செய்யப்பட்டார். கடந்த 1994–ஆம் ஆண்டு பிரிவு இந்திய வெளியுறவுப்பணி அதிகாரியான இவர், தற்போது வெளியுறவு அமைச்சகத்தின் மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கான கூடுதல் செயலாளராக உள்ளார்.

நியூசிலாந்துக்கான இந்தியத்தூதராக இருந்த முக்தேஷ் பர்தேசிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, G20 கூட்டமைப்புக்–கான இந்திய செயலகத்தின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். இதையடுத்து, நியூசிலாந்துக்கான இந்தியத் தூதராக நீத்தா பூஷண் நியமிக்கப்பட்டுள்ளார். இவர், வங்கதேச தலைநகர் டாக்காவில் உள்ள இந்திய தூதரகத்தின் பத்திரிகை, கலாசாரம், தகவல் பிரிவு தலைவராகப் பணியாற்றியவர். இதேபோல், ஜெர்மனியில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரிவுக்கும் தலைமை தாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1. UNDPஇன் 2021ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சிக்குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 121

ஆ. 125

இ. 129

ஈ. 132 ☑

132

✓ 2021ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சிக்குறியீட்டில் (HDI) 191 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இந்தியா 132ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) அறிக்கையின்படி, ஆயுட்காலம் வீழ்ச்சியடைவதால், நாட்டின் செயல்திறன் அதன் முந்தைய நிலையிலிருந்து சற்றே சரிந்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டின் அறிக்கையில், 189 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இந்தியா 131ஆவது இடத்தில் இருந்தது.

2. அண்மையில், 'டைமண்ட் லீக் சாம்பியன்' ஆன இந்திய விளையாட்டு வீரர்/வீராங்கனை யார்?

அ. P V சிந்து

ஆ. நீரஜ் சோப்ரா ☑

இ. H S பிரணாய்

ஈ. ஹிமா தாஸ்

✓ நீரஜ் சோப்ரா 88.44 மீ தூரத்துக்கு ஈட்டியெறிந்து, இந்தியாவிலிருந்து 'டைமண்ட் கோப்பையை' வெல்லும் முதல் வீரர் என்ற வரலாற்றுச்சாதனையைப் படைத்தார். நீரஜ் சோப்ரா இதற்கு முன், 89.08 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து 'லொசேன் டைமண்ட்' லீக்கை வென்றிருந்தார். ஜூலை மாதம் நடந்த உலக சாம்பியன்ஷிப் போட்டியில், அவர், 89.30 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

3. 2022ஆம் ஆண்டிற்கான பார்ச்சூன் இந்தியாவின், 'இந்தியாவின் செல்வந்தர்கள்' பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்த வணிகர் யார்?

அ. முகேஷ் அம்பானி

ஆ. கௌதம் அதானி ☑

இ. சைரஸ் பூனாவாலா

ஈ. ஆதி கோத்ரெஜ்

✓ பார்ச்சூன் இந்தியாவின் 2022ஆம் ஆண்டிற்கான, 'இந்தியச் செல்வந்தர்கள்' பட்டியலின்படி, கௌதம் அதானி ₹10.29 டிரில்லியன் சொத்துக்களுடன் முதலிடத்தில் உள்ளார். இந்தியாவில் உள்ள 142 பில்லியனர்களின் சொத்து மதிப்பு $832 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (₹66.36 டிரில்லியன்) ஆகும். ஃபோர்ப்ஸ் பத்திரிக்கையின் நிகழ்நேர பில்லியனர்கள் பட்டியலின்படி, ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரரான கௌதம் அதானி அண்மையில் அமேசான் நிறுவனர் ஜெஃப் பெசோஸை விஞ்சி உலகின் மூன்றாவது பெருஞ்செல்வந்தர் ஆனார்.

4. 'குடியிருப்புப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்' என்ற பல்நோக்கு இணையதளத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ. மேற்கு வங்காளம்

ஆ. மேகாலயா ☑

இ. சிக்கிம்

ஈ. ஒடிஸா

✓ மேகாலயா மாநில அரசு, "மேகாலயா குடியிருப்பாளர்கள் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் சட்டம்" என்ற பல்நோக்கு இணையதளத்தை அறிமுகப்படுத்தியது. இந்த டிஜிட்டல் மயமாக்கல் செயல்முறையானது மேகாலயா முழுவதும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் மற்றும் உள்ளாட்சிகளை இந்த இணையதள அமைப்புடன் இணைக்கும். இது குடியிருப்பாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மேலும், பல்வேறு அரசாங்க சேவைகளை சிறப்பாக வழங்குவதற்காக உளவுத்துறையின் தகவல்களையும் இது பயன்படுத்துகிறது.

5. நாட்டின் முதல், 'கல்வி நகரத்தை' உருவாக்கவுள்ள மாநிலம்/UT எது?

அ. கேரளா

ஆ. கர்நாடகா

இ. பஞ்சாப்

ஈ. உத்தர பிரதேசம் ☑



✓ உத்தரபிரதேச மாநிலத்தில், 'கல்வி நகரத்தை' உருவாக்கவுள்ளதாக அம்மாநில அரசு அறிவிப்பு செய்துள்ளது. இந்த நடவடிக்கை இளையோர்க்கு உயர்தர கல்வியை வழங்குவதோடு, ஒரே இடத்தில் பலவிதமான தொழிற்முறை திறன்களுடன் அவர்களை சித்தப்படுத்துகிறது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தங்குமிடம் மற்றும் இதர வசதிகளையும் இந்தக் 'கல்வி நகரம்' வழங்கும்.

6. எந்த மாநிலம்/UTஇல், ஆசியாவின் மிகப்பெரிய தனியார் மருத்துவமனையை பிரதமர் திறந்து வைத்தார்?

அ. ஆந்திரப் பிரதேசம்

ஆ. ஹரியானா ☑

இ. கர்நாடகா

ஈ. மேற்கு வங்கம்

✓ ஹரியானா மாநிலம் பரிதாபாத்தில் அமைந்துள்ள அமிர்தா மருத்துவமனையை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இது மாதா அமிர்தானந்தமயி மடத்தின் நிதியுதவியுடன் ஆறாண்டு காலத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 81 சிறப்புத்துவங்களைக் கொண்ட இந்த மருத்துவமனை, இந்தியா மற்றும் ஆசியாவிலேயே மிகப்பெரிய தனியார் மருத்துவமனை என்ற சிறப்பை கொண்டுள்ளது. இது ஒரு பிரத்யேக ஏழு–அடுக்கு ஆராய்ச்சித்தொகுதி மற்றும் எட்டுச் சிறப்பு மையங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

7. 'சைலிட்டால்' என்ற சர்க்கரை மாற்றீட்டை உற்பத்தி செய்வதற்கான நொதித்தல் முறையை உருவாக்கியுள்ள நிறுவனம் எது?

அ. IISc பெங்களூரு

ஆ. ஐஐடி கௌகாத்தி ☑

இ. ஐஐடி மெட்ராஸ்

ஈ. NIT வரங்கல்

✓ ஐஐடி கௌகாத்தியைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் மீயொலி உதவியுடனான நொதித்தல் முறையை உருவாக்கி 'சைலிட்டால்' என்ற சர்க்கரை மாற்றீட்டை உருவாக்கியுள்ளனர். கரும்புகளை பிழிந்த பின் எஞ்சியிருக்கும் கரும்புச் சக்கையிலிருந்து இது உருவாக்கப்படுகிறது. இந்தத் தயாரிப்பு இரசாயன தொகுப்பு முறைகளின் வரம்புகள் மற்றும் பாரம்பரிய நொதித்தல் முறையுடன் தொடர்புடைய நேர தாமதங்களையும் சமாளிக்கிறது. இது நீரழிவு எதிர்ப்பு மற்றும் உடற்பருமன் எதிர்ப்பு விளைவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

8. தனது, 'பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் கொள்கை – 2022'ஐ வெளியிட்டுள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. மேற்கு வங்காளம்

இ. ஒடிஸா

ஈ. கர்நாடகா

✓ தமிழ்நாடு தனது, 'பாதணிகள் மற்றும் தோல் தயாரிப்புக்கொள்கை – 2022'ஐ பாதணி மற்றும் தோல் தொழிற்துறை மாநாட்டில் அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய தோல் தொழிற்துறை உற்பத்தியில் 26 சதவீதமும், ஏற்றுமதியில் 48 சதவீதமும் தமிழ்நாட்டின் பங்காகும். இக்கொள்கையானது பாதணி மற்றும் தோல் பொருட்கள் (FLP) உற்பத்திக்கான சிறப்புப் பொதியையும் FLP வடிவமைப்பு அரங்குகளுக்கான ஊக்கத்தொகையையும் வழங்கும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், இராணிப்பேட்டையில், ₹400 கோடி மதிப்பிலான பிரம்மாண்ட பாதணி உற்பத்திப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்.

9. சமீபத்தில் வெளியிடப்பட்ட, "New India: Selected Writings 2014–19" என்பது கீழ்க்காணும் எந்தத் தலைவருடைய கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும்?

அ. சுஷ்மா சுவராஜ்

ஆ. அருண் ஜெட்லி ☑

இ. மனோகர் பாரிக்கர்

ஈ. அடல் பிஹாரி வாஜ்பாய்

✓ இந்தியாவின் முன்னாள் துணைக்குடியரசுத்தலைவர் வெங்கையா, "New India: Selected Writings 2014–19" என்ற நூலை வெளியிட்டார். 2014 முதல் 2019 வரை இந்திய அரசின் நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சராக பணியாற்றிய அருண் ஜெட்லி எழுதிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்த நூல், அருண் ஜெட்லியின் மூன்றாவது நினைவு நாளின்போது வெளியிடப்பட்டது.

10. அகதிகளை வரவேற்கும் முனைவுகளை அங்கீகரிக்கும் வகையில், 2022ஆம் ஆண்டுக்கான UNESCOஇன் அமைதிப்பரிசைப் பெற்றவர் யார்?

அ. ஜோ பிடன்

ஆ. நரேந்திர மோடி

இ. ஏஞ்சலா மேர்க்கல் ☑

ஈ. வோலோடிமிர் ஜெலென்ஸ்கி

✓ ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மேர்க்கெல், நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான UNESCO அமைதிப்பரிசைப் பெற்றார். "அகதிகளை வரவேற்பதில் அவர் மேற்கொண்ட முனைவுகளை அங்கீகரிக்கும் வகையில்" அவருக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டில், 1.2 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரை, குறிப்பாக சிரியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் எரித்திரியாவைச் சேர்ந்தோரை வரவேற்கும், 'துணிச்சலான' முடிவிற்காக ஃபெலிக்ஸ் ஹூப்ஹவுட்–போய்க்னி–யுனெஸ்கோ அமைதிப்பரிசை அவர் பெற்றார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. டைமண்ட் லீக்: வரலாறு படைத்த நீரஜ் சோப்ரா

டைமண்ட் லீக் போட்டியில் ஈட்டியெறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தடகளப்பிரிவில் இந்திய ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றார். இறுதிச்சுற்றில் அவர் 87.58 மீ. தூரம் எறிந்து முதலிடம் பிடித்தார். அமெரிக்காவில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் ஈட்டியெறிதல் இறுதிச்சுற்றில் 88.13 மீ தூரத்துக்கு ஈட்டியை எறிந்து 2ஆம் இடம்பிடித்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார். உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் பதக்கம் வென்ற 2ஆவது இந்தியர் நீரஜ் சோப்ரா. 2003இல் பாரிஸில் அஞ்சு பாபி ஜார்ஜ் வெண்கலம் வென்றார். பிறகு இங்கிலாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் போட்டிகளில் நீரஜ் சோப்ரா காயம் காரணமாகப் பங்கேற்கவில்லை.

கடந்த மாத இறுதியில் ஸ்விட்சர்லாந்தின் லுசானேவில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியில் பங்கேற்றார் நீரஜ் சோப்ரா. இந்தப் போட்டியில் 89.08 மீ. தூரத்துக்கு ஈட்டியை எறிந்து முதலிடம் பெற்றார். இந்தப் போட்டியின் முடிவில் முதல் ஆறு இடங்களைப் பிடித்த வீரர்கள், ஜூரிச்சில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியின் இறுதிச்சுற்றில் பங்கேற்றார்கள். டைமண்ட் லீக் இறுதிச்சுற்றுக்குத் தகுதி பெற்றதுடன் 2023இல் ஹங்கேரியில் நடைபெறவுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிக்கும் தகுதியடைந்தார் நீரஜ் சோப்ரா.

இந்நிலையில் ஜூரிச்சில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியின் இறுதிச்சுற்றில் இந்திய ஈட்டியெறிதல் வீரர் நீரஜ் சோப்ரா முதலிடம் பெற்று சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். இந்தப்போட்டியில் 88.44 மீ தூரத்துக்கு ஈட்டியை எறிந்து முதலிடம் பெற்றார். டைமண்ட் லீக் போட்டியில் முதல்முறையாக சாம்பியன் ஆகியுள்ளார் 24 வயது நீரஜ் சோப்ரா. 2017இல் 7ஆவது இடமும் 2018இல் 4ஆவது இடமும் பெற்றார். முதலிடம் பெற்ற நீரஜ் சோப்ராவுக்கு ₹23.85 லட்சம் பரிசுத்தொகை கிடைத்துள்ளது. உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற ஆண்டர்சன் பீட்டர்ஸ் காயம் காரணமாக இப்போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

டைமண்ட் லீக் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார் நீரஜ் சோப்ரா. ஒலிம்பிக்ஸ், உலக சாம்பியன்ஷிப் போன்ற போட்டிகளுக்கு அடுத்ததாகப் பெரிய போட்டியாக டைமண்ட் லீக் கருதப்படுகிறது. கடந்த 13 மாதங்களில் ஒலிம்பிக்ஸில் தங்கம், உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளி, டைமண்ட் லீக் சாம்பியன் என மூன்று சாதனைகளை நீரஜ் சோப்ரா படைத்துள்ளார்.

1. 'EU–இந்தியா பசுமை ஹைட்ரோஜன் கருத்துக்களத்தை' ஏற்பாடு செய்த நடுவண் அமைச்சகம் எது?

அ. எரிசக்தி அமைச்சகம்

ஆ. புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் ☑

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

✓ முதலாவது EU–இந்தியா பசுமை ஹைட்ரஜன் கருத்துக்களமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தால் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது. இது இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு (CII) மற்றும் ஹைட்ரஜன் ஐரோப்பாவின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. ஹைட்ரஜன் மற்றும் பன்னாட்டு ஹைட்ரஜன் வர்த்தகம் தொடர்பான கூட்டுத்திட்டங்களைப்பற்றி விவாதிக்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றிய–இந்திய வணிகங்களை இந்த நிகழ்வு ஒன்றிணைத்தது.

2. நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் சீரான உரிமையியல் நடைமுறைத் தொகுப்பு (Uniform Civil Code) குழுவை அமைத்துள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. உத்தர பிரதேசம்

இ. உத்தரகாண்ட் ☑

ஈ. கர்நாடகா

✓ சீரான உரிமையியல் நடைமுறைத் தொகுப்பைத் தயாரிப்பதற்காக, ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி இரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் குழுவொன்றை உத்தரகாண்ட் மாநில அரசு அமைத்துள்ளது. இந்தக் குழு சமீபத்தில் மக்களிடமிருந்து கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற ஓர் இணையதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. உத்தரகாண்ட் மாநில மக்கள், இந்த இணையதளத்தில் உள்நுழைந்து தங்கள் ஆலோசனைகள், குறைகள் மற்றும் புகார்களைப் பகிர்ந்துகொள்ளலாம்.

3. Qimingxing–50 என்பது கீழ்க்காணும் எந்த நாட்டின் முதல் முழுவதும் சூரிய ஆற்றலில் இயங்கும் ஆளில்லா வான்வழி வாகனத்தின் பெயராகும்?

அ. ஜப்பான்

ஆ. இஸ்ரேல்

இ. சீனா ☑

ஈ. தென் கொரியா

✓ சீனா தனது முதல் முழுவதும் சூரிய ஆற்றலில் இயங்கும் ஆளில்லா வான்வழி வாகனத்தை (UAV) வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. 'Qimingxing–50' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த UAV பல மாதங்கள் பறக்கக்கூடியது ஆகும் மற்றும் தேவைப்பட்டால் செயற்கைக்கோளாக கூட செயல்படும். இது சூரிய ஆற்றலால் மட்டுமே இயக்கப்படும் முதல் பேரளவிலான UAV ஆகும். இந்தத் தொழில்நுட்பம் சீனாவின் தற்காப்புத் திறமையை ஊக்குவிக்கும் விதத்தில் உள்ளது. இது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் வானூர்தி பொறியியல் துறையிலும் பயன்படுத்தப்படலாம்.

4. இந்தியாவில் நிலையான கடலோர மேலாண்மை குறித்த முதல் தேசிய மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

அ. கோவா ஆ. மகாராஷ்டிரா

இ. ஒடிஸா ☑ ஈ. கேரளா

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், ஒடிஸா மாநிலத்தின் புவனேசுவரத்தில் இந்தியாவில் நிலையான கடலோர மேலாண்மை குறித்த முதல் தேசிய மாநாட்டை தொடங்கி

வைத்தார். இந்த மாநாடு இந்தியாவின் கடலோர சமூகங்களின் காலநிலை நெகிழ்தன்மையை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்தியது. கடலோர மற்றும் கடல்சார் பல்லுயிர், காலநிலை தணிப்பு மற்றும் தழுவல் மற்றும் கடலோர மாசுபாடு ஆகிய மூன்று ஒன்றோடொன்று தொடர்புடைய கருப்பொருள்களை மையமாகக்கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டது. இதில் இந்தியாவின் 13 கடலோர மாநிலங்களிலிருந்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

5. இந்தியாவின் மிக நீளமான இரப்பர் அணையான, 'கயாஜி அணை' திறக்கப்பட்ட மாநிலம்/UT எது?

அ. சிக்கிம்

ஆ. ஒடிஸா

இ. அருணாச்சல பிரதேசம்

ஈ. பீகார் ☑

✓ ஃபல்கு ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகநீளமான இரப்பர் அணையான, 'கயாஜி அணை'யை பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ் குமார் திறந்து வைத்தார். இது ஒரு பரந்த மணல் திட்டு ஆகும். பித்ரிபக்ஷ மேளாவின் போது வருகைதரும் பார்வையாளர்களின் வசதிக்காக ஸ்டீல் ஃபுட் ஓவர் பாலத்தையும் அவர் திறந்து வைத்தார். ஐஐடியின் (ரூர்க்கி) வழிகாட்டுதலுடன் ₹324 கோடி மதிப்பீட்டில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

6. உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பயணிகள் இரயில்களை அறிமுகப்படுத்திய நாடு எது?

அ. இந்தியா

ஆ. அமெரிக்கா

இ. சீனா

ஈ. ஜெர்மனி ☑

✓ மின்மயமாக்கப்படாத தடங்களில் இயக்கப்பட்ட 15 டீசல்பொறி இரயில்களுக்குப் பதிலாக, ஜெர்மனி உலகின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் பயணிகள் இரயிலை அறிமுகப்படுத்தியது. $92 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான இந்தத் திட்டத்தின்கீழ், 14 இரயில்கள் ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலங்களைப் பயன்படுத்தி தனக்கான எரிசக்தி முழுவதையும் தயாரிக்கின்றன. பிரெஞ்சு நிறுவனமான அல்ஸ்டாமால் தயாரிக்கப்பட்ட இந்த இரயில்கள் பிராந்திய இரயில் நிறுவனத்தால் இயக்கப்படுகின்றன.

7. இந்தியாவின் முதல் 3D முறையில் அச்சிடப்பட்ட அஞ்சல் அலுவலகம் அமைக்கப்படவுள்ள நகரம் எது?

அ. சென்னை

ஆ. பெங்களூரு ☑

இ. கொச்சின்

ஈ. ஹைதராபாத்

✓ இந்தியாவின் முதல் முப்பரிமாண (3D) முறையில் அச்சிடப்பட்ட அஞ்சல் அலுவலகமானது ஒருமாத காலத்திற்குள் பெங்களூரு நகரத்தில் அமையவுள்ளது. 3D முறையில் அச்சிடப்பட்ட இந்த அஞ்சல் அலுவலகம், கட்டுமானச்செலவை ¼ ஆகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகமானது இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் கட்டுமானத்தை லார்சன் & டூப்ரோ (L&T) நிறுவனம் மேற்கொள்ளும்.

8. இந்தியா தூய காற்று உச்சிமாநாட்டின் நான்காவது பதிப்பு நடைபெறும் இடம் எது?

அ. புது தில்லி ஆ. காந்தி நகர்

இ. பெங்களூரு ☑ ஈ. ஜெய்ப்பூர்

ICAS
India Clean Air Summit

✓ இந்தியா தூய காற்று உச்சிமாநாட்டின் (India Clean Air Summit) நான்காவது பதிப்பு பெங்களூருவில் தொடங்கியது. காற்று மாசுபாடு குறித்த ஆய்வுகளுக்கான மதியுரையக மையம் (CAPS) மற்றும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கொள்கை ஆய்வுமையம் ஆகியவற்றால் இந்த உச்சிமாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளைச்சேர்ந்த பல்வேறு வல்லுநர்கள் வளி மாசுபாடு மற்றும் காலநிலை மாற்றத்திற்குத் தீர்வுகாண்பதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையைப் பற்றி இதன்சமயம் விவாதிக்கவுள்ளனர்.

9. பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் (BPCL) எந்தத் துணை நிறுவனம் BPCLஉடன் இணைக்கப்பட்டுள்ளது?

அ. பாரத் எரிவாயு வளங்கள் நிறுவனம் ☑

ஆ. பாரத் பெட்ரோலிய வளங்கள் நிறுவனம்

இ. பெட்ரோநெட் LNG நிறுவனம்

ஈ. இந்திரபிரஸ்தா எரிவாயு நிறுவனம்

✓ பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் (BPCL) 100 சதவீத துணை நிறுவனமான பாரத் எரிவாயு வளங்கள் நிறுவனம் (BGRL) அதன் தாய் நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மத்திய பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகமானது இந்த நிறுவன இணைப்புக்கு ஒப்புதலளித்து ஆணை பிறப்பித்துள்ளது. இவ்விணைப்புத்திட்டமானது கடந்த ஆகஸ்ட் மாதம் 16ஆம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளது.

10. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, அர்ஜுன் எரிகைசி என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. கபடி

ஆ. டென்னிஸ்

இ. சதுரங்கம் ☑

ஈ. கூடைப்பந்து

✓ இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் அர்ஜுன் எரிகைசி, அபுதாபி மாஸ்டர்ஸ் செஸ் பட்டத்தை இரண்டு தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற்று வென்றுள்ளார். நிகழ்நேரத் தரவரிசையின்படி, அர்ஜுன் எரிகைசி அவர்கள் விஸ்வநாதன் ஆனந்த் (12ஆவது) மற்றும் D குகேஷ் (20ஆவது) ஆகியோருக்கு அடுத்தபடியாக 24ஆம் இடத்திலும், இந்தியர்களில் மூன்றாவது இடத்திலும் உள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. IIT மெட்ராஸ் IBM IBM நிறுவனத்தின் குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்து செயல்படுகிறது

இந்தியாவில் குவாண்டம் கம்ப்யூட்டிங்கில் திறன்மேம்பாடு மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்தும் நோக்கில், இந்திய தொழில்நுட்பக் கழகம் சென்னை (IIT மெட்ராஸ்) முதலாவது இந்தியக் கல்வி நிறுவனமாக IBM குவாண்டம் நெட்வொர்க்கில் இணைந்திருப்பதாக IBM அறிவித்துள்ளது.

IBM குவாண்டம் நெட்வொர்க்கில் அங்கம் வகிப்பவர் என்ற முறையில், IBM நிறுவனத்தின் அதிநவீன குவாண்டம் கம்ப்யூட்டிங் சிஸ்டம், IBM–ன் குவாண்டம் நிபுணத்துவம் ஆகியவற்றுக்கான கிளவுட் அடிப்படையிலான இணைப்பு IIT மெட்ராஸுக்கு கிடைக்கும். இதன்மூலம் நடைமுறைப் பயன்பாடுகளை ஆராயவும், வணிகம் & சமுதாயத்திற்கு இந்தத் தொழில்நுட்பத்தின் பரந்த நன்மைகளை உணரச் செய்யவும் முடியும்.

குவாண்டம் இயந்திரக்கற்றல், குவாண்டம் மேம்பாடு, நிதி தொடர்பான பயன்பாட்டு ஆராய்ச்சி உள்ளிட்ட ஆராய்ச்சிப் பணிகளில் முக்கிய வழிமுறைகளை முன்னெடுக்க IIT மெட்ராஸின் குவாண்டம், தகவல், தொடர்பு மற்றும் கம்ப்யூட்டிங் மையம் (Centre for Quantum Information, Communication and Computing–CQuICC) கவனம் செலுத்தும்.

குவாண்டம் வழிமுறைகள், குவாண்டம் இயந்திரக் கற்றல், குவாண்டம் பிழை திருத்துதல் மற்றும் பிழைகளைக் குறைத்தல், குவாண்டம் டோமோகிராபி, குவாண்டம் வேதியியல் போன்ற அம்சங்களில் IBM குவாண்டம் சேவையுடன், ஓபன் சோர்ஸ் முறையிலான கிஸ்கிட் (Qiskit) கட்டமைப்பையும் ஐஐடி மெட்ராஸ் பயன்படுத்திக் கொள்ளும். நாட்டில் குவாண்டம் கம்ப்யூட்டிங் சுற்றுச்சூழலை மேம்படுத்தி வளர்க்கும் பணியில் ஈடுபடும். குவாண்டம் கம்ப்யூட்டிங் பயன்பாடு தொடர்பான ஆராய்ச்சியை இந்தியாவிற்கு பொருத்தமாக உள்ள களங்களில் IIT மெட்ராஸ் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் வகையில் IBM ரிசர்ச் இந்தியா தனது ஆதரவை வழங்கும்.

---

2. 11–09–2022 – 'மகாகவி' பாரதியாரின் 101ஆவது நினைவுநாள்.

பாரதியார் நினைவு நாள் மகாகவி நாள்: தமிழ்நாடு அரசு

மகாகவி பாரதியாரின் நினைவு நாள் (செப்டம்பர்.11) 'மகாகவி' நாளாக கடைப்பிடிக்கப்பட்டது. 'மகாகவி' பாரதியார் கடந்த 1921–ஆம் ஆண்டு செப்டம்பர்.11–ஆம் தேதி மறைந்தார். அவரது மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில், பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர்.11–ஆம் தேதி, 'மகாகவி' நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்பதும் ஒன்றாகும்.

---

3. முதுபெரும் தொல்பொருள் ஆய்வாளர் பி பி லால் காலமானார்

இந்தியாவின் முதுபெரும் தொல்பொருள் ஆய்வாளர் பி பி லால், 10–09–2022 அன்று காலமானார். அவருக்கு வயது 101. கடந்த 1921ஆம் ஆண்டு உத்தரபிரதேச மாநிலம், ஜான்சி பகுதியில் பிறந்தவர் பிபி லால். 1968ஆம் ஆண்டு முதல் 1972ஆம் ஆண்டு வரை இந்திய தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராகப் பொறுப்பு வகித்தார். அந்தத் துறையின் இளவயது தலைமை இயக்குநர்களில் ஒருவராக இருந்தார். உத்தர பிரதேச மாநிலம், அயோத்தியில் தற்போது இராமர் கோயில் கட்டப்பட்டுவரும் இடத்தில், 1970ஆம் ஆண்டுகளில் அகழ்வாராயச்சி மேற்கொண்டபோது கோவில்போன்ற தூண்களைக் கண்டறிந்தார். ஹரப்பா நாகரிகம் மற்றும் மகாபாரதத்துடன் தொடர்புள்ள தொல் பொருள் தளங்களில் விரிவாகப் பணியாற்றினார். தொல்லியல் துறைக்கு அளித்த பங்களிப்புக்காக அவருக்கு கடந்த 2000ஆம் ஆண்டு 'பத்ம பூஷண்' விருதும், கடந்த ஆண்டு 'பத்ம விபூஷண்' விருதும் அளிக்கப்பட்டது.

---

4. யுஎஸ் ஓபன் சாம்பியன் ஸ்வியாடெக்

நியூயார்க்கில் நடந்த US ஓபன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் சாம்பியன் பட்டம் வென்ற போலந்தின் இகா ஸ்வியாடெக். உலகின் நம்பர் 1 வீராங்கனையான ஸ்வியாடெக் 6–2, 7–6 என்ற நேர்செட்களில் துனிசியாவின் ஆன்ஸ் ஜாபியுரை வீழ்த்தினார். இது அவரது மூன்றாவது கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

---

5. ஆசிய சாம்பியன் இலங்கை

பாகிஸ்தானை 23 இரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி T20 ஆசியக்கோப்பை சாம்பியன் பட்டத்தை ஆறாவது முறையாக கைப்பற்றியது இலங்கை. துபையில் நடைபெற்ற T20 ஆசியக்கோப்பை இறுதி ஆட்டத்தில் முதலில் ஆடிய இலங்கை அணி 170/6 இரன்களைக் குவித்தது. பானுகா ராஜபட்ச அபாரமாக ஆடி 71 ரன்களை விளாசினார். இரண்டாவதாக ஆடிய பாகிஸ்தான் அணி 147 இரன்களை மட்டுமே எடுத்து தோல்வியைத் தழுவியது. பிரமோத் 4, ஹஸரங்க 3 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

---

6. 'தாராகிரி' போர்க்கப்பல் வெள்ளோட்டம்

இந்திய கடற்படையின், 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மூன்றாவது போர்க்கப்பலான, 'தாராகிரி' மும்பையில் முதல்முறையாக கடலில் இறக்கப்பட்டது.

மும்பையில் உள்ள மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் சார்பில் ஒருங்கிணைந்த கட்டுமான முறையின்கீழ் இந்தக் கப்பல் கட்டப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, வரும் 2025–ஆம் ஆண்டு ஆகஸ்டில் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய கடற்படையின் 'புராஜெக்ட் 17ஏ' திட்டத்தின்கீழ் உள்நாட்டிலேயே 4 போர்க்கப்பல்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் மொத்த திட்டச் செலவு ₹25,700 கோடியாகும்.

இந்தத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட முதல் போர்க்கப்பலான, 'நீலகிரி' கடந்த 2019–ஆம் ஆண்டு செப்டம்பர்.28–ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தக் கப்பலின் கடல் பயணச்சோதனை வரும் 2024–ஆம் ஆண்டு முதல் பாதியில் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழான இரண்டாவது போர்க்கப்பல், 'உதயகிரி' கட்டி முடிக்கப்பட்டு, கடந்த மே 17–ஆம் தேதி அறிமுகம் செய்யப்பட்டது. இந்தக் கப்பலின் கடல் பயணச்சோதனை 2024–ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மூன்றாவதாக உருவாக்கப்பட்ட, 'தாராகிரி' தற்போது வெள்ளோட்டம் விடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழான நான்காவது மற்றும் கடைசி போர்க்கப்பலுக்கான அடித்தளம் கடந்த ஜூன் 28–ஆம் தேதி அமைக்கப்பட்டு, கப்பல் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது என்றும் மஸகான் கப்பல் கட்டும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

---

7. SCO மாநாடு: பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான் பயணம்

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான் செல்லவுள்ளார். இதுதொடர்பாக நடுவண் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

உஸ்பெகிஸ்தானில் உள்ள சமர்கண்ட் நகரத்தில் செப்.15, 16–ஆம் தேதிகளில் SCO தலைவர்களின் மாநாடு நடைபெறவுள்ளது. இதையொட்டி பிரதமர் மோடி செப்.15–ஆம் தேதி சமர்கண்ட் செல்கிறார். இந்த மாநாட்டில் SCO உறுப்புநாடுகளின் தலைவர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்கின்றனர்.

இந்த மாநாட்டின்போது கடந்த இருபது ஆண்டுகளாக SCO அமைப்பின் செயல்பாடு குறித்து தலைவர்கள் ஆய்வு மேற்கொள்வர் எனவும், எதிர்காலத்தில் பலதரப்பு ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து ஆலோசிப்பர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பிராந்திய மற்றும் உலகளவில் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படும் என கருதப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. 'தேசிய பாதுகாப்பு MSME மாநாடு மற்றும் கண்காட்சி'யை நடத்துகிற இந்திய நகரம் எது?

அ. காந்தி நகர்

ஆ. பெங்களூரு

இ. கோட்டா ☑

ஈ. விசாகப்பட்டினம்

✓ இரண்டு நாள் நடைபெறும் தேசிய பாதுகாப்பு MSME மாநாடு மற்றும் கண்காட்சியானது சமீபத்தில் இராஜஸ்தானின் கோட்டாவில் தொடங்கப்பட்டது. ராஜஸ்தான் மாநிலத்தில் முதன்முறையாக இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. T-90 மற்றும் BMP-2 டாங்கிகள், பீரங்கி துப்பாக்கிகள், கனரக துப்பாக்கிகள் மற்றும் இயந்திர துப்பாக்கிகள் உட்பட பல்வேறு பாதுகாப்பு உபகரணங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு துளிர் நிறுவல்கள் மற்றும் MSMEகள் தங்கள் தயாரிப்புகளை இதில் காட்சிப்படுத்துகின்றன.

2. 2022 – அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியின் வெற்றியாளர் யார்?

அ. காஸ்பர் ரூட்

ஆ. கார்லோஸ் அல்கராஸ் ☑

இ. நோவக் ஜோகோவிச்

ஈ. ரஃபேல் நடால்

✓ ஸ்பானிய டென்னிஸ் வீரர் கார்லோஸ் அல்கராஸ் அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டியில் நார்வேயின் காஸ்பர் ரூட் என்பவரை வீழ்த்தி தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார். அமெரிக்க ஓபன் இறுதிப்போட்டியில் தோன்றிய முதன்முறையிலேயே, உலக தரவரிசையில் முதலிடத்திற்கு அவர் உயர்ந்துள்ளார். 19 வயதான கார்லோஸ் அல்கராஸ், ஆறு ATP சுற்றுகள் ஒற்றையர் பட்டங்களையும் இரண்டு மாஸ்டர்ஸ் 1000 பட்டங்களையும் வென்றுள்ளார்.

3. 'பர்வத் பிரஹார்' என்ற பயிற்சியை நடத்திய இந்திய ஆயுதப்படை எது?

அ. இந்திய விமானப்படை

ஆ. இந்திய இராணுவம் ☑

இ. இந்திய கடற்படை

ஈ. இந்தோ-திபெத்திய எல்லைக் காவல்படை

✓ இந்திய இராணுவம், 'பர்வத் பிரஹார்' என்ற பெயரில் 20 நாள் பயிற்சியை நடத்தி வருகிறது. இது இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான ஒப்பந்த விடுவிப்பு செயல்முறைக்கு இடையே, கோக்ரா–ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் மெய்யெல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டில் (LAC) நடத்தப்படுகிறது. இந்திய இராணுவத்தளபதி மனோஜ் பாண்டே, 'பர்வத் பிரஹார்' பயிற்சியை ஆய்வுசெய்தார். இந்தியா மற்றும் சீனாவின் கார்ப்ஸ் கமாண்டர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த ஒப்பந்த விடுவிப்பு செயல்முறை நடைபெறுகிறது.

4. 2022 – சர்வதேச பால்வளக் கூட்டமைப்பின் உலக பால் உச்சிமாநாடு (IDF WDS) நடைபெற்ற இடம் எது?

அ. வாரணாசி

ஆ. நொய்டா பெருநகரம் ☑

இ. அமிர்தசரஸ்

ஈ. நைனிடால்

✓ பிரதமர் மோடி, நொய்டா பெருநகரத்தில் நடப்பு 2022ஆம் ஆண்டுக்கான சர்வதேச பால்வளக் கூட்டமைப்பின் உலக பால் உச்சிமாநாட்டைத் தொடங்கிவைத்தார். உலகத்தின் பாலுற்பத்தியில் 23 சதவீதம் இந்தியாவின் பால் உற்பத்தித் தொழிற்துறையின்மூலம் பெறப்படுகிறது. இந்தியா, கடந்த 2014ஆம் ஆண்டில் 146 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்துள்ளது. இது தற்போது 210 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது. அதாவது சுமார் 44 சதவீதம் அதிகரிப்பாகும்.

5. இந்தோ–பசிபிக் பொருளாதாரக்கட்டமைப்பின் எந்தப் பிரிவிலிருந்து இந்தியா அண்மையில் வெளியேறியது?

அ. நியாயமான பொருளாதாரப் பிரிவு

ஆ. வர்த்தகப் பிரிவு ☑

இ. தூய பொருளாதாரப் பிரிவு

ஈ. விநியோகச் சங்கிலிப் பிரிவு

✓ அமெரிக்கா தலைமையிலான இந்தோ–பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பின் (IPEF) வர்த்தகம் தொடர்பான பேச்சுவா–ர்த்தைகளிலிருந்து இந்தியா வெளியேறியது. நடுவண் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ் கோயல், IPEF–இன் வர்த்தகப் பிரிவில் இணையாத இந்தியாவின் முடிவை உறுதிப்படுத்தினார். IPEF அமைச்சர்கள் சந்திப்பு ஆனது அண்மையில் அமெரிக்காவால் நடத்தப்பட்டது.

6. அண்மைய தரவுகளின்படி, உணவு தானிய உற்பத்தியில் நாட்டில் முதலிடம் வகிக்கின்ற மாநிலங்கள் எவை?

அ. பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசம்

ஆ. பஞ்சாப் மற்றும் ஹரியானா ☑

இ. ஆந்திரா மற்றும் மேற்கு வங்கம்

ஈ. பஞ்சாப் மற்றும் மேற்கு வங்காளம்

✓ சமீபத்திய தரவுகளின்படி, உணவு தானிய உற்பத்தி மற்றும் விளைச்சலில் பஞ்சாப் மற்றும் ஹரியானா முதலிடத்தில் உள்ளன. உத்தர பிரதேசம் மற்றும் சில மேற்கு மற்றும் தென் மாநிலங்களில் உணவு அல்லாத தானியங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன். உணவு தானியத்தில் அரிசி, கோதுமை, பருப்பு வகைகள் மற்றும் பிற தானியங்கள் அடங்கும்; அதே சமயம் உணவு அல்லாத தானியங்களுள் எண்ணெய் வித்துக்கள், பருத்தி, கரும்பு மற்றும் சணல் ஆகியவை அடங்கும். ஒடிஸா, மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் நிகர விதைப்புப் பகுதி குறைந்துள்ள நிலையில், இராஜஸ்தான், குஜராத், உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அது அதிகரித்துள்ளது.

7. இந்தியாவின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்காக UNESCOஉடன் கூட்டு சேர்ந்துள்ள இந்திய நிறுவனம் எது?

அ. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ்

ஆ. இராயல் என்ஃபீல்டு ☑

இ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ்

ஈ. மஹிந்திரா மற்றும் மஹிந்திரா

✓ ஐக்கிய நாடுகள் அவையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பும் (UNESCO) இந்தியாவின் முன்னணி மோட்டார் சைக்கிள் நிறுவனமுமான இராயல் என்ஃபீல்டும் இணைந்து இமயமலையில் தொடங்கி இந்தியாவின் தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமாக கூட்டிணைந்துள்ளன. கடந்த 2003ஆம் ஆண்டில், தொட்டுணர முடியா கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கான UNESCOஇன் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட 178 நாடுகளுள் இந்தியாவும் ஒன்றாகும்.

8. பிரதமர் நரேந்திர மோடி, கீழ்க்காணும் எந்த மாநிலத்தில், 'ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை'த் திறந்து வைத்தார்?

அ. குஜராத்

ஆ. பஞ்சாப் ☑

இ. மகாராஷ்டிரா

ஈ. தெலுங்கானா

✓ பஞ்சாபின் மொகாலி மாவட்டத்தில், 'ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை' பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். ஹோமி பாபா புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் அனைத்து வகையான புற்றுநோய்களுக்கும் சிகிச்சையளிக்கும் வகையில் அதிநவீன வசதிகளுடன் நிறுவப்பட்டு உள்ளது. டாடா நினைவு மையத்தால் ₹660 கோடி செலவில் இந்த மருத்துவமனை கட்டப்பட்டுள்ளது.

9. இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானந்தாங்கிக்கப்பலின் (IAC–1) பெயரென்ன?

அ. விக்ரம்

ஆ. விக்ராந்த் ☑

இ. கரிகாலன்

ஈ. இராஜேந்திரன்

✓ இந்தியாவின் முதலாவது உள்நாட்டு விமானந்தாங்கிப் போர்க்கப்பல் (IAC–1) செப்டம்பர்.2ஆம் தேதியன்று பணியில் சேர்க்கப்பட்டதாக இந்திய கடற்படை அறிவித்துள்ளது. கடற்படையின் கூற்றுப்படி, இப்போர்க்கப்பலுக்கு, 'விக்ராந்த்' என்று பெயர்சூட்டப்படும்; மேலும் இது, தேசத்தின் சுய உறுதிப்பாட்டின் சாதனையைக் குறிக்கும். முதன்முதலில் கடந்த 2013 ஆகஸ்டில் அறிவிக்கப்பட்ட இந்தக் கப்பலின், கடல் சோதனைகள் 2021 ஆகஸ்டில் தொடங்கின.

10. காசநோயை ஒழிப்பதற்காக, எத்தனை பழங்குடி மாவட்டங்கள், மையப்படுத்தப்பட்ட தலையீடுகளுக்காக (focused interventions) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன?

அ. 25

ஆ. 50

இ. 75 ☑

ஈ. 100

✓ நடுவண் பழங்குடியினர் நலத்துறை அமைச்சகமும் நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் நடுவண் காசநோய் பிரிவும் இணைந்து, காசநோயை ஒழிப்பதில் முழு கவனம் செலுத்தும் தலையீடுகளுக்காக, 75 பழங்குடியின மாவட்டங்களைத் தெரிவுசெய்துள்ளன. கடந்த 6 மாதங்களாக பழங்குடியின மாவட்டங்களில் உள்ள 68,000–க்கும் மேற்பட்ட கிராமங்களில் வீடுவீடாகச்சென்று நடத்தப்பட்ட காசநோய் பரிசோதனைக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. ஜப்பான்–இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சி – ஜிமெக்ஸ் 2022

ஜப்பான்–இந்தியா கடல்சார் பயிற்சி – ஜிமெக்ஸ் 2022–இன் 6ஆவது பயிற்சி செப்டம்பர்.11ஆம் தேதி வங்கக்கடலில் மேற்கொள்ளப்பட்டது. இந்திய கடற்படை நடத்தும் இப்பயிற்சியில் ஜப்பானின் எஸ்கார்ட் புளோடில்லா ஃபோர்–இன்

கமாண்டர் ரியர் அட்மிரல் ஹிராட்டா டோஷியுக்கி தலைமையில் ஜப்பான் பாதுகாப்பு கப்பல்களும், இந்திய கடற்படையின் கிழக்குப்பிராந்திய கொடி அதிகாரி கமாண்டிங் ரியர் அட்மிரல் சஞ்சய் பல்லா தலைமையில் இந்திய கடற்படை கப்பல்களும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன.

இந்தியத்தரப்பில் சகயாத்ரி, ரன்விஜய், ஜோதி ஆகிய உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கப்பல்கள் இடம்பெற்றன. கடலோர ரோந்துக்கப்பல் சுகன்யா, நீர்மூழ்கிக்கப்பல்கள், எம்ஜஜி 29கே போர் விமானம், மற்றும் ஹெலிகாப்டர்கள் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன. ஜிமெக்ஸ்–22 கடலிலும், விசாகப்பட்டினம் துறைமுகத்திலும் இரண்டு கட்டங்களாக நடைபெறும். கடந்த 2012ஆம் ஆண்டு ஜப்பானில் தொடங்கப்பட்ட ஜிமெக்ஸ் பயிற்சியின் இந்த அத்தியாயம் பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

---

2. அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல்களை டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்

அனைத்து மட்டங்களிலும் கட்டுப்படியான விலையில் தரமான மருந்துகள் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்தப் பட்டியலில் கூடுதலாக 34 மருந்துகளுடன் 384 மருந்துகள் இடம்பெற்றுள்ளன. முந்தைய பட்டியலிலிருந்து 26 மருந்துகள் நீக்கப்பட்டுள்ளன. 27 சிகிச்சைப்பிரிவுகளுக்கென இந்த மருந்துகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பட்டியல் 1996ஆம் ஆண்டு முதன்முதலாக வகுக்கப்பட்டது. அதன்பின்னர் 2003, 2011, 2015 ஆகிய ஆண்டுகளில் இதற்குமுன்பு மும்முறை திருத்தப்பட்டது.

---

3. வரும் 15–இல் 'காலை சிற்றுண்டித் திட்டம்' தொடக்கம்: முதல்வர் மு க ஸ்டாலின் தகவல்

தமிழ்நாட்டில் வரும் 15–ஆம் தேதியன்று 'காலை சிற்றுண்டித் திட்டம்' தொடங்கப்படவுள்ளதாக முதல்வர் மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

காலை உணவுத் திட்டம்: முன்னாள் முதல்வர் அண்ணாவின் பிறந்தநாள் செப்டம்பர்.15–ஆம் தேதியன்று, அரசு தொடக்கப்பள்ளிகளில் காலைச் சிற்றுண்டி வழங்குகிற புதிய திட்டம் தொடங்கப்படவுள்ளது.

---

1. அலுவல்பூர்வ தரவுகளின்படி, இந்தியாவில் ஆகஸ்ட் மாதத்தில் இருந்த சில்லறை பணவீக்க சதவீதம் என்ன?

அ. 6.5%

ஆ. 7.0% ☑

இ. 7.5%

ஈ. 8.0%

✓ இந்தியாவின் சில்லறை பணவீக்கம் கடந்த ஜூலை மாதத்தில் 6.71%ஆக இருந்து; அது ஆகஸ்ட் மாதத்தில் 7%ஆக உயர்ந்துள்ளது. நுகர்வோர் விலைக்குறியீட்டு அடிப்படையிலான பணவீக்கம் தொடர்ச்சியாக எட்டாவது மாதமாக ரிசர்வ் வங்கியின் இலக்கு அளவான 6%ஐவிட அதிகமாக உயர்ந்துள்ளது. தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட தொழிற்துறை உற்பத்தி குறியீட்டு (IIP) தரவுகளின்படி, 2022 ஜூலையில் இந்தியாவின் தொழிற்துறை உற்பத்தி 2.4% உயர்ந்துள்ளது; அதே வேளையில், IIP, 2021 ஜூலையில் 11.5% வளர்ந்தது. உணவுப் பணவீக்கம் போன்ற அத்தியாவசியப் பயிர்களின் விலைகள் உயர்ந்தன. கோதுமை, அரிசி மற்றும் பருப்பு வகைகள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டன.

2. FAO மற்றும் உலக உணவுத்திட்டமானது இந்தியாவின் எந்த அண்டை நாட்டில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை ஏற்படும் என அதனை எச்சரித்தது?

அ. மியான்மர்

ஆ. இலங்கை ☑

இ. நேபாளம்

ஈ. ஆப்கானிஸ்தான்

✓ உணவு மற்றும் உழவு அமைப்பும் (FAO) உலக உணவுத்திட்டமும் (WFP) தனது புதிய அறிக்கையில் இலங்கையில் சுமார் 6.3 மில்லியன் மக்கள் மிதம் முதல் கடுமையான உணவுப்பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளப்போவதாக எச்சரித்துள்ளன. பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு மதிப்பீட்டு பணி (CFSAM) அறிக்கை, போதுமான உயிர்காக்கும் உதவி & வாழ்வாதார ஆதரவு வழங்கப்படாவிட்டால், அவர்களின் நிலைமை மோசமாகிவிடும் என எச்சரித்துள்ளது.

3. நமீபியாவிலிருந்து கொண்டுவரப்படும் சிவிங்கிப்புலிகளை, கீழ்க்காணும் எந்தத் தேசியப்பூங்காவில் விடுவதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளது?

அ. குனோ பால்பூர் தேசியப்பூங்கா ☑

ஆ. ஜிம் கார்பெட் தேசியப்பூங்கா

இ. இராந்தம்பூர் தேசியப்பூங்கா

ஈ. கசிரங்கா தேசியப்பூங்கா

✓ மத்திய பிரதேசத்தின் குனோ பால்பூர் தேசியப்பூங்காவில் தென்னாப்பிரிக்காவின் நமீபியாவிலிருந்து கொண்டு வரப்படும் சிவிங்கிப்புலிகளை விடுவதற்கு இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்தச் சிவிங்கிப்புலிகள் குனோ பால்பூர் தேசியப்பூங்காவிற்கு வருகைதந்த பிறகு, அவை தனிமைப்படுத்தப்பட்ட அடைப்பு வலைக்குள் சிறுகாலம் தங்க வைக்கப்பட்டு, பின்னர் வழக்கமான வாழ்விடத்திற்கு மாற்றப்படும். கடந்த 1952இல் இந்தியாவிலிருந்த கடைசி சிவிங்கிப்புலியும் இறந்தது. கடந்த 2009ஆம் ஆண்டில், 'இந்தியாவில் ஆப்பிரிக்க சிவிங்கிப்புலி அறிமுகத் திட்டம்' தொடங்கப்பட்டது.

4. உலகளவில் 50 மில்லியன் மக்கள், 'நவீன அடிமைத்தனத்தில்' சிக்கித் தவிக்கின்றனர் என்று எந்த அமைப்பு தனது அறிக்கையில் கூறியுள்ளது?

அ. FAO

ஆ. IMF

இ. ILO ☑

ஈ. WEF

✓ ஐக்கிய நாடுகள் அவையின் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) அறிக்கையொன்றை வெளியிட்டது. அதில், உலகம் முழுவதும் 50 மில்லியன் மக்கள், 'நவீன அடிமைத்தனத்தில்' சிக்கித் தவிக்கின்றனர் எனக் கூறப்பட்டு உள்ளது. கட்டாய உழைப்பு அல்லது கட்டாயத்திருமணம் மற்றும் பிற நெருக்கடிகளில் சிக்கித்தவிக்கும் மக்களின் எண்ணிக்கை அண்மைய ஆண்டுகளில் ஐந்தில் ஒரு பங்காக உயர்ந்து ஒரே நாளில் சுமார் 50 மில்லியனாக அதிகரித்துள்ளது. வாக் ஃப்ரீ அறக்கட்டளையுடன் இணைந்து இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

5. 2018–19இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு எவ்வளவு?

அ. 0.85%

ஆ. 1.01%

இ. 1.28% ☑

ஈ. 2.0%

✓ 2018–19ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் தேசிய சுகாதார கணக்குகளின் மதிப்பீடுகளின்படி, நாட்டின் மொத்த GDP–இல் அரசாங்க சுகாதார செலவினங்களின் பங்கில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2013–14இல் 1.15%ஆக இருந்த பங்கு 2018–19இல் 1.28%ஆக அதிகரித்துள்ளது. 2017–18இல் இது 1.35%ஆக இருந்தது. 2018–19ஆம் ஆண்டில் மொத்த சுகாதார செலவினத்தில் அரசின் சுகாதார செலவினத்தின் பங்கு 40.6%ஆக அதிகரித்துள்ளது.

6. குஷியாரா ஆற்றின் இடைநிலை நீர் தொடர்பாக, கீழ்க்காணும் எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது?

அ. வங்காளதேசம் ☑

ஆ. நேபாளம்

இ. மியான்மர்

ஈ. பாகிஸ்தான்

✓ இந்தியாவும் வங்காளதேசமும் புது தில்லியில் வைத்து கூட்டாறுகள் ஆணையத்தின் கூட்டத்தை நடத்தின; அதன் சமயம் குஷியாரா ஆற்றின் இடைநிலை நீர் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு நாடுகளும் இறுதிசெய்தன. நடுவண் ஜல்சக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 12 ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பிறகு இச்சந்திப்பு நடைபெற்றது. திரிபுராவின் சப்ரூம் நகரத்தின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஃபெனி ஆற்றில் நீர் உட்கொள்ளும் பரப்பின் வடிவமைப்பு மற்றும் இருப்பிடம் இறுதிசெய்யப்பட்டதை இருதரப்பினரும் வரவேற்றனர்.

7. ஒரு புறக்கோளின் வளிமண்டலத்தில் கரியமிலவாயுவைக் கண்டறிந்துள்ள நாடு எது?

அ. சீனா

ஆ. அமெரிக்கா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. இஸ்ரேல்

✓ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி மற்றொரு சூரிய குடும்பத்தில் உள்ள ஒரு கோளின் வளிமண்டலத்தில் கரியமில வாயுவைக் கண்டறிந்துள்ளது. இந்தக் கண்டுபிடிப்பு புதிய தொலைநோக்கியிலிருந்து வெளியிடப்பட்ட முதல் விரிவான அறிவியல் முடிவை குறிக்கிறது. பூமியைப்போன்ற சிறிய, பாறைக்கோள்களின் வளிமண்டலத்தில் பைங்குடில் வாயுக்களைக் கண்டுபிடிப்பதற்கான புதிய சாத்தியக்கூறுகளையும் இது எடுத்துக்காட்டுகிறது.

8. மதிப்புமிக்க டைமண்ட் லீக் மீட் பட்டத்தை வென்ற முதல் இந்திய விளையாட்டு வீரர் / வீராங்கனை யார்?

அ. PV சிந்து

ஆ. தனலட்சுமி

இ. நீரஜ் சோப்ரா ☑

ஈ. ஹிமா தாஸ்

✓ டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்ற நீரஜ் சோப்ரா, லொசேன் டைமண்ட் லீக்கில் ஈட்டியெறிதல் போட்டியில் வெற்றிபெற்றார். 89.08 மீட்டர் தூரம் ஈட்டியெறிந்து, மதிப்புமிக்க டைமண்ட் லீக் மீட் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார். லீக் என்பது உயரடுக்கு தடகளப் போட்டிகளின் வருடாந்திர தொடர் நிகழ்வு ஆகும். நீரஜ், சுவிச்சர்லாந்தில் நடக்கும் டைமண்ட் லீக் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றதோடு, 2023 உலக சாம்பியன்ஷிப்பிற்கும் தகுதிபெற்றுள்ளார்.

9. வியாஸ் சம்மான் விருது பெற்ற Dr அஸ்கர் வஜாஹத் சார்ந்த மொழி எது?

அ. உருது

ஆ. ஹிந்தி ☑

இ. கன்னடம்

ஈ. குஜராத்தி

✓ 31ஆவது வியாஸ் சம்மான் விருது ஹிந்தி எழுத்தாளர் டாக்டர் அஸ்கர் வஜாஹத்துக்கு புது தில்லியில் வழங்கப்பட்டது. முகலாயப்பேரரசர் அக்பர் மற்றும் கவிஞர் துளசிதாஸ் ஆகியோரை மையமாகக்கொண்ட, 'மகாபலி' நாடகத்திற்காக அவர் இம்மதிப்புமிக்க விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். வியாஸ் சம்மான் என்பது KK பிர்லா அறக்கட்டளையால், கடந்த 10 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட, இந்தியக் குடிமகன் ஒருவரால் ஹிந்தி மொழியில் எழுதப்பட்ட சிறந்த இலக்கியப்பணிக்காக வழங்கப்படுகிற ஒரு விருதாகும்.

10. 'வஜ்ர பிரஹார்' என்பது இந்தியாவிற்கும் எந்நாட்டிற்கும் இடையே நடைபெறும் ஒரு இராணுவப் பயிற்சியாகும்?

அ. பிரான்ஸ்

ஆ. ஜப்பான்

இ. அமெரிக்கா ☑

ஈ. ஆஸ்திரேலியா

✓ இந்தியா–அமெரிக்காவின் சிறப்புப்படைகள் பங்கேற்கும், '2022 – வஜ்ர பிரஹார்' பயிற்சியின் பதிமூன்றாவது பதிப்பு ஹிமாச்சலப்பிரதேசத்தில் உள்ள பக்லோவில் நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியில் வான்வழிப் பயிற்சி செயல்பாடுகள், சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்த ஆண்டு (2022) பயிற்சி இந்தியா மற்றும் அமெரிக்காவால் மாற்றி மாற்றி நடத்தப்படுகிறது. இதன் 12ஆவது பதிப்பு, கடந்த 2021 இல் வாஷிங்டனில் (US) நடத்தப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முப்படைத் தளபதிகளின் 36ஆவது மாநாடு – தெற்கு போர்ட் பிளேரில் நடைபெற்றது

முப்படைத் தளபதிகளின் 36ஆவது மாநாடு, 2022 செப்டம்பர்.12,13 ஆகிய தேதிகளில் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் நடந்தது. இந்தியப்பெருங்கடல் பகுதியில் புவியியல் சார்ந்த சாத்தியக்கூறுகள் மற்றும் உட்கட்டமைப்பு, முப்படைகளின் பிராந்திய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல், முப்படைகளின் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழிகள் மற்றும் முப்படைகளின் தயார் நிலை குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த மாநாடு, இந்தியாவின் கடல்சார் சேவை, ஒருங்கிணைந்த சேவை, திறன்களின் கூட்டு வலிமையை அதிகரித்தல் உள்ளிட்டவற்றை நோக்கமாகக்கொண்டது. மேலும், தற்கால பாதுகாப்பு முன்னுதாரணங்களை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியது. மேலும், போர்த்திறனை மேம்படுத்துவதற்கும், செல்பாடுகளை மிகவும் பயனுள்ளதாக, திறமையாக மாற்றுவதற்கான வழிகள் குறித்தும் ஆய்வுசெய்தது.

---

2. ககன்யான் திட்டம்: நிகழாண்டில் முதலாவது சோதனை விண்கலம் – ஜிதேந்திர சிங்

விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஒருபகுதியாக முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்கு செலுத்தப்படும் என்றார் நடுவண் அமைச்சர் ஜிதேந்திர சிங்.

இதுகுறித்து தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ககன்யான் விண்கலத்தை நாட்டின் 75ஆவது விடுதலை நாள் விழா ஆண்டான 2022ஆம் ஆண்டிலேயே விண்வெளிக்கு செலுத்த திட்டமிட்டிருந்தோம். ஆனால், இந்தியாவிலும் ரஷியாவிலும் பயிற்சிபெற்றுவந்த விண்வெளி வீரர்கள் COVID தொற்றால் பாதிக்கப்பட நேர்ந்ததால், இந்தத்திட்டம் தாமதமாகிறது. வரும் 2024–இல் ககன்யான் விண்கலம் விண்வெளிக்கு செலுத்தப்படும்.

இதையொட்டி முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்குச் செலுத்தப்படவுள்ளது. அதனை அடுத்தாண்டு விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ள, 'வியோம் மித்ரா' என்ற பெண்ணுருவம்கொண்ட ரோபோ கண்காணிக்கும். ககன்யான் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நான்கு விமானிகளை இந்திய விமானப்படை அடையாளம் கண்டுள்ளது. அவர்களுக்கு ரஷியாவில் அடிப்படை பயிற்சியளிக்கப்பட்டது. விண்வெளியின் சுற்று வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்படும் சோதனை விண்கலத்தின் செயல்பாடுகளைக் கருத்தில்கொண்டு, 2024இல் புவியின் சுற்றுவட்டப்பாதைக்கு 2 விண்வெளி வீரர்களை இஸ்ரோ அனுப்பிவைக்கும் என்றார் ஜிதேந்திர சிங்.

கடந்த 2018 சுதந்திர தின உரையின்போது விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ₹10,000 கோடி மதிப்பிலான ககன்யான் திட்டத்தை பிரதமர் மோடி அறிவித்தார். நிலவுக்கு சந்திரயான்–3 விண்கலத்தை அடுத்த ஆண்டில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

---

3. சென்னை உயர்நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி பொறுப்பேற்பு

சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி செப்.13 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவிவகித்த வந்த முனீஸ்வர்நாத் பண்டாரி செப்.12 அன்று ஓய்வுபெற்றார். இதைத்தொடர்ந்து, உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான எம் துரைசாமியை பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமித்து நடுவணரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி, உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம் துரைசாமி செப்.13 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். வரும் செப்.21–ஆம் தேதியுடன் நீதிபதி எம் துரைசாமி ஓய்வுபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. துணிகர மூலதனம் மற்றும் தனிப்பட்ட சரியொப்பு (Private Equity) ஆகியவை எதிர்கொள்ளும் சிக்கல்களைத்தீர்க்க நடுவண் நிதியமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?

அ. அஜை தியாகி

ஆ. மகாலிங்கம்

இ. M தாமோதரன் ☑

ஈ. சுபாஷ் சந்திர கார்க்

✓ துணிகர மூலதனம் மற்றும் தனிப்பட்ட சரியொப்பு ஆகியவைமூலம் முதலீடுகளை அதிகரிப்பதற்காக ஒழுங்குமுறை சிக்கல்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஆய்வுசெய்து பரிந்துரைப்பதற்காக SEBI–இன் முன்னாள் தலைவர் M தாமோதரன் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை நிதியமைச்சகம் அமைத்தது. குழுவின் பிற உறுப்பினர்களில் SEBIஇன் முன்னாள் முழுநேர உறுப்பினரும், ரிசர்வ் வங்கியின் நிர்வாக இயக்குநருமான G மகாலிங்கம்; CBICஇன் பிரதிநிதிகள்; வருமான வரித்துறையினர்; NCAER உறுப்பினர்கள் அடங்குவர். FY23 பட்ஜெட் அத்தகைய குழுவை அமைக்க முன்மொழிந்தது.

2. 'தேசிய அத்தியாவசிய மருந்துகளின் பட்டியலில்' எத்தனை மருந்துகள் சேர்க்கப்பட்டுள்ளன?

அ. 84

ஆ. 184

இ. 284

ஈ. 384 ☑

✓ நடுவண் சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr மன்சுக் மாண்டவியா, அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல்கள் – 2022ஐ அறிமுகப்படுத்தினார். நாட்டு மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகளை வழங்க இந்தப் பட்டியல்கள் வகைசெய்கிறது. இந்தப் பட்டியலில் கூடுதலாக 34 மருந்துகளுடன் 384 மருந்துகள் இடம்பெற்றுள்ளன. முந்தைய பட்டியலிலிருந்து 26 மருந்துகள் நீக்கப்பட்டுள்ளன.

3. 2022இல் நடைபெற்ற, 'அனைத்திந்திய அலுவல் மொழி மாநாட்டை' நடத்தும் நகரம் எது?

அ. சூரத் ☑



ஆ. அகமதாபாத்

இ. பெங்களூரு

ஈ. புனே

✓ குஜராத் மாநிலம் சூரத்தில் நடைபெற்ற, 'அகில இந்திய அலுவல் மொழி' மாநாட்டில் நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்றார். நாடு முழுவதும் ஆண்டுதோறும் செப்டம்பர்.14ஆம் தேதி கொண்டாடப்படும் ஹிந்தி மொழி நாளை முன்னிட்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

4. 'சந்திர மறைவு' என்ற நிகழ்வால் செப்.14 அன்று கீழ்க்காணும் எந்தக் கோள் பார்வைக்குத் தென்படாமலிருந்தது?

அ. புதன்



ஆ. வெள்ளி

இ. யுரேனஸ் ☑

ஈ. சனி

- ✓ சூரியனிலிருந்து ஆறாவது கோளான யுரேனஸ் புவியின் துணைக்கோளான நிலவுக்குப் பின்னால் நேரடியாகக் கடந்துசென்றது; இதன் காரணமாக சுமார் 3½ மணிநேரம் அது பார்வைக்குத் தென்படாமலிருந்தது. இம்மறைந்து போகும் செயல், 'யுரேனஸின் சந்திர மறைவு' என்றும் அழைக்கப்படுகிறது. ஐரோப்பா, வட ஆப்பிரிக்கா மற்றும் மேற்கு ஆசியாவில் உள்ளோரால் மட்டுமே இந்த நிகழ்வைப் பார்க்க முடிந்தது.

5. அண்மையில் தொடங்கப்பட்ட, 'ஸ்வச் சாகர்' இணையதளத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. நடுவண் புவி அறிவியல் அமைச்சகம் ☑

ஆ. நடுவண் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம்

இ. நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ. நடுவண் உள்துறை அமைச்சகம்

- ✓ நடுவண் புவி அறிவியல் அமைச்சர் Dr ஜிதேந்திர சிங், தற்போது நடந்துவரும் கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் இயக்கத்திற்கு மேலும் ஊக்கமளிக்கும் வகையில் பிரத்தியேக இணையதளத்தை வெளியிட்டார். 'ஸ்வச் சாகர், சுரக்ஷித் சாகர்' என்ற விழிப்புணர்வு பரப்புரையானது 'சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தும் நாளில்' முடிவடையும். இந்தியா முழுவதும் நடந்து வரும் கடற்கரை தூய்மை இயக்கத்தின் ஒருபகுதியாக, 'வாசுகி' என்ற பிரச்சார இலச்சினையையும் Dr ஜிதேந்திர சிங் வெளியிட்டார்.

6. இந்திய கடலோரக் காவல்படையானது கீழ்க்காணும் எந்நகரத்தில், 'SAREX-22' என்ற தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்புப்பயிற்சியை நடத்தியது?

அ. சென்னை ☑

ஆ. மும்பை

இ. விசாகப்பட்டினம்

ஈ. தூத்துக்குடி

- ✓ இந்திய கடலோரக்காவல்படையானது சென்னையில் பத்தாவது தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்புப்பயிற்சி, 'SAREX-22'ஐ நடத்தியது. ICG டோர்னியர் விமானங்கள், அவசரகாலங்களில் கப்பல்கள் மற்றும் விமானங்களில் இருந்து பயணிகளை மீட்பதற்கான வழிகளைச் செய்துகாட்டின. ஈராண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தப் பயிற்சியின் இந்த ஆண்டு (2022) பதிப்பின் கருப்பொருள், "Capacity Building towards Marine Passenger Safety" என்பதாகும்.

7. உலகின் மிகநீளமான கிளைக்கால்வாய் திறக்கப்பட்டுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. ஹிமாச்சல பிரதேசம்

ஆ. அஸ்ஸாம்

இ. கேரளா

ஈ. குஜராத் ☑

- ✓ தெற்கு குஜராத்தில் உள்ள நர்மதா சரோவர் அணையில் இருந்து கட்ச் பகுதிக்கு தண்ணீர் கொண்டுவரும் நர்மதா கால்வாயை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். நர்மதா மாவட்டத்தில் சர்தார் சரோவர் நர்மதா அணையில் இருந்து குஜராத்தின் மாண்ட்வி வட்டத்தின் கடைசிகட்ட கிராமங்கள் வரை 357.18 கிலோ மீட்டர் நீளத்திற்கு கட்ச் கிளைக்கால்வாய் நீண்டுள்ளது. ₹6493 கோடி செலவில் கட்டப்பட்ட இந்தக்கிளைக்கால்வாய், உலகின் மிகநீளமான கிளைக்கால்வாய் என்று கூறப்படுகிறது.

8. தேசிய புற்றுநோய் கட்டமைப்பு என்பது கீழ்க்காணும் எந்தத் துறையின்மூலம் இயக்கப்படும் இந்திய அரசின் ஒரு முனைவாகும்?

அ. அணுவாற்றல் துறை ☑

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை

இ. சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை

ஈ. சுகாதாரம் மற்றும் ஆராய்ச்சித் துறை

✓ தேசிய புற்றுநோய் கட்டமைப்பு (NCG) என்பது இந்திய அரசின் அணுவாற்றல் துறை மற்றும் டாடா நினைவு மையம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் ஒரு முனைவாகும். தேசிய புற்றுநோய் கட்டமைப்பானது அண்மையில், இந்தியா முழுவதும், புற்றுநோய் சிகிச்சையை மேம்படுத்துவதற்காக, டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 'டிஜிட்டல் புற்றுநோயியலுக்கான கொய்டா மையத்தை' நிறுவியுள்ளது. NCG, தற்போது இந்தியா முழுவதும் அதன் வலையமைப்பில் 270 மருத்துவமனைகளைக் கொண்டுள்ளது.

9. எந்த மாநிலத்தில் பாயும் சுக்தாவா ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள 150 ஆண்டுகள் பழமையான பெய்லி பாலத்தை இந்திய இராணுவம் புனரமைக்கத் தொடங்கியது?

அ. மகாராஷ்டிரா

ஆ. மத்திய பிரதேசம் ☑

இ. கர்நாடகா

ஈ. அஸ்ஸாம்

✓ இந்திய இராணுவமானது சுக்தாவா ஆற்றின்மீது கட்டப்பட்டுள்ள 150 ஆண்டுகள் பழமையான பெய்லி பாலத்தை புனரமைக்கத் தொடங்கியது; அப்பாளம் கடந்த ஏப்ரலில் இடிந்து விழுந்தது. இது போபால் – நாக்பூர் நெடுஞ்சாலையில் உள்ளது. மலைப்பாங்கான பகுதிகளில் பாலம் கட்டும் தொழில்நுட்பத்தை இதில் இராணுவம் பயன்படுத்தவுள்ளது. இந்தப் பாலம் 93 அடி நீளமும், 10.50 அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்படும். இது மிகவும் வலிமையாக இருக்கும் வகையிலும் 40 டன் எடையைக்கூட தாங்கும் வகையிலும் கட்டப்படும்.

10. 'மருத்துவ உதவியாளர்களுக்கான மருத்துவ திறன்களுக்கான மையம்' தொடங்கப்படவுள்ள மாநிலம்/UT எது?

அ. அஸ்ஸாம்

ஆ. சிக்கிம்

இ. மேகாலயா ☑

ஈ. மேற்கு வங்காளம்

✓ மேகாலயா மாநிலத்தின் மேற்குக் கரோ மலையில் அமைந்துள்ள பாபாதாமில், 'மருத்துவப் பணியினைச்சார்ந்த பணியினர்களுக்கான மருத்துவத் திறன்களை வளர்த்தெடுக்கும் மையம்' அமைக்கப்படவுள்ளது. ₹152 கோடி செலவில் கட்டப்படும் இந்த மையத்தைக் கட்ட மேகாலயா அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மருத்துவத் திறன் வழங்கும் இந்த ஹுனார் மையமானது விடுதி, மருந்துக்கல்லூரி, பாராமெடிக்கல் கல்லூரி மற்றும் திறன்மேம்பாட்டு மையம் உள்ளிட்ட பல வசதிகளுடன் 2500 மாணாக்கருக்கான இடவசதியைக் கொண்டிருக்கும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 15-09-2022: 'பேரறிஞர்' அண்ணாதுரை அவர்களின் 114ஆவது பிறந்தநாள்

---

2. 'சிற்பி' திட்டத்தின் சிறப்பம்சங்கள்

பள்ளிக்குழந்தைகளை நல்வழியில் செல்ல வகை செய்யும் 'சிற்பி' திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்களுக்கு தனிச் சீருடை வழங்கப்படவுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட தகவல்: சென்னை பெருநகர காவல் துறையின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கென பிரத்யேகமாக 'சிற்பி' திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது ₹4.25 கோடி மதிப்பில் செயல்படுத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சென்னையில் நூறு பள்ளிகளிலிருந்து தலா ஐம்பது மாணவ-மாணவிகள் தேர்வுசெய்யப்பட்டு அவர்களுக்கு நல்லொழுக்கம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவர்களுக்கு அளிக்கப்படும். காவல்துறை அதிகாரிகளும், துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களும் பயிற்சி வகுப்புகளை நடத்துவர். இதற்கென பிரத்யேகமாக நூல் வழங்கப்படும்.

சத்தான உணவு: 'சிற்பி' திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 5,000 மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்படும். அதில், மாணவர்கள் எண்ணிக்கை 2,764. மாணவிகள் 2,236. மொத்தம் 5,000 பேர். இந்தத்திட்டத்தின் நோக்கமாக சில பண்புநலன்கள் வடித்தெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, சமத்துவ உணர்வு, மதச்சார்பற்ற கண்ணோட்டம் மற்றும் விசாரணை மனப்பான்மையுடன் கூடிய தலைமைப் பண்புகளை வளர்த்தல், காவல்துறை எவ்வாறு சமூகத்துடன் இணைந்து செயல்படுகிறது என்பதை கவனிக்கச்செய்தல், வகுப்புவாதம், போதை பழக்கம் மற்றும் குடிப்பழக்கத்துக்கு எதிராக மாணவர்களை உருவாக்குதல் ஆகியன திட்டத்தின் நோக்கங்களாகும். இந்தத்திட்டத்தில் இணையும் மாணவர்களுக்கு தனிச் சீருடை வழங்கப்படும்.

பாடவேளையின்போது, முளைகட்டிய பயறு வகைகள், இனிப்பு கொழுக்கட்டை, பழங்கள் ஆகியன சிற்றுண்டிகளாக வழங்கப்படும். கவாத்துப் பயிற்சி, போக்குவரத்து விதிகள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், பேரிடர் கால முன்னெச்சரிக்கை குறித்தும் விளக்கப்படும். மேலும், மாணவ, மாணவியர்கள் சென்னையில் புகழ்பெற்ற எட்டு இடங்களுக்கு சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்படுவர்.

---

3. ஆகஸ்டில் மொத்த விலை பணவீக்கம் 12.41%ஆக குறைவு

மொத்த விலை அடிப்படையிலான பணவீக்கம் தொடர்ந்து 3ஆவது மாதமாகக் குறைந்து 12.41 சதவீதமாக ஆகஸ்டில் பதிவாகியுள்ளது. இதுவே கடந்த ஜூலையில் 13.93 சதவீதமாகவும், கடந்த ஆண்டு ஆகஸ்டில் 11.64 சதவீதமாகவும் பதிவானது. மேலும் தொடர்ந்து 17ஆவது மாதமாக நிகழாண்டு ஆகஸ்டில் மொத்த விலை பணவீக்கம் இரட்டை இலக்கத்தில் பதிவாகியுள்ளது. கடந்த மே மாதம் அதிகபட்சமாக 15.88 சதவீதத்தை மொத்த விலை பணவீக்கம் எட்டியது நினைவுகூரத்தக்கது.

உணவுப்பொருள் மீதான பணவீக்கம் கடந்த ஜூலையில் 10.77 சதவீதமாக பதிவான நிலையில், ஆகஸ்டில் 12.37 சதவீதமாக உயர்ந்தது. எரிபொருள், மின்சாரத்தை பொறுத்தமட்டில் ஜூலையில் 43.75 சதவீதமாக பதிவான பணவீக்கம், ஆகஸ்டில் 33.67 சதவீதமாக பதிவானது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், எண்ணெய் வித்துகளை பொறுத்தவரை பணவீக்கம் முறையே 7.51 சதவீதமாகவும், –13.48 சதவீதமாகவும் பதிவாகியது. ரிசர்வ் வங்கி சில்லறை விலை பணவீக்கத்தின் அடிப்படையில் பணக்கொள்கையை வகுப்பது குறிப்பிடத்தக்கது.

---

1. 2022 – ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?

அ. இந்தியா

ஆ. கஜகஸ்தான் ☑

இ. வங்காளதேசம்

ஈ. உஸ்பெகிஸ்தான்

✓ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சிமாநாடு உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்று வருகிறது. ஈராண்டுகளுக்குப்பிறகு நேரடியாக நடைபெறும் முதல் SCO உச்சிமாநாடு இதுவாகும். இம்மாநாட்டில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். இக்கூட்டம் பிராந்திய பாதுகாப்பு சவால்கள், வர்த்தகம் மற்றும் எரிசக்தி விநியோகத்தை மேம்படுத்துதல் போன்றவற்றைப்பற்றி விவாதிப்பதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'ஷூன்யா பரப்புரை' என்பது எந்தச் செயல்முறையை நோக்கமாகக் கொண்டது?

அ. பட்டாசுகளைத் தடைசெய்வதன்மூலம் வளிமாசைக் குறைப்பது

ஆ. EVக்களைப் பயன்படுத்தி வளிமாசைக் குறைப்பது ☑

இ. மழைநீர் சேகரிப்பை ஊக்குவிப்பது

ஈ. காடு வளர்ப்பை ஊக்குவிப்பது

✓ 'ஷூன்யா' என்பது வளிமாசைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு பரப்புரையாகும்; இது மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை (EV) பயணம் மற்றும் விநியோகச் செயல்முறைகளுக்கு பயன்படுத்துவதை ஊக்குவிப்பதாகும். இந்தியாவின் சுழிய மாசுபாட்டை வலியுறுத்தி தொடங்கப்பட்ட, 'ஷூன்யா'வின் ஓராண்டு நிறைவை நினைவுகூரும் வகையில் NITI ஆயோக் ஒரு கூட்டத்தை நடத்தியது. இந்த நிகழ்வின்போது, மேம்பட்ட வேதியியல் மின்கல (ACC) ஆற்றல் சேமிப்பு அறிக்கை பற்றிய தேசிய திட்டம் தொடங்கப்பட்டது.

3. நடுவண் உயிரியல் பூங்கா ஆணையத்தின் சமீபத்திய தரவரிசையில், முதலிடம் பிடித்துள்ள இந்திய விலங்கியல் பூங்கா எது?

அ. அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, சென்னை

ஆ. பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்கா, டார்ஜிலிங் ☑

இ. சாமராஜேந்திரா விலங்கியல் பூங்கா, மைசூரு

ஈ. திருவனந்தபுரம் உயிரியல் பூங்கா

✓ மேலாண்மை & செயல்திறன் அடிப்படையில் நடுவண் உயிரியல் பூங்கா ஆணையம் வெளியிட்ட பட்டியலின்படி, டார்ஜிலிங்கில் அமைந்துள்ள பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவிற்கு அதிகபட்சமாக 83 சதவீத மதிப்பெண் வழங்கப்பட்டது. இமயமலை கருங்கரடி, பனிச்சிறுத்தை, கோரல் மற்றும் இமயமலை வரையாடு தவிர, இம்மிருகக்காட்சிசாலையின் முதன்மை ஈர்ப்புகளில் சிவப்புப்பாண்டாவும் ஒன்றாக உள்ளது. சென்னையில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இரண்டாவது இடத்தையும், மைசூருவில் உள்ள ஸ்ரீ சாமராஜேந்திரா உயிரியல் பூங்கா மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளது.

4. 2022 – FIFA 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக்கோப்பைப் போட்டிகளை நடத்துகிற நாடு எது?

அ. இலங்கை ஆ. ஐக்கிய அரபு அமீரகம்

இ. இந்தியா ☑ ஈ. வங்காளதேசம்

✓ இந்தியாவில் பதினேழு வயதுக்குட்பட்டவர்களுக்கான பெண்கள் உலகக்கோப்பை கால்பந்துப் போட்டியை (2022) நடத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதற்கு பிரதமர் தலைமையிலான நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான மகளிர் உலகக்கோப்பை கால்பந்து போட்டி (2022) இந்தியாவில் அக்.11–30ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இளையோர்கள் பங்கேற்கும் இப்போட்டியின் ஏழாவது பகுதி முதன்முறையாக இந்தியாவில் நடைபெறவுள்ளது.

✓ இந்தியா, இதற்கு முன்பு 2017ஆம் ஆண்டில், FIFA 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் உலகக்கோப்பையை நடத்தியது. கோவா, நவி மும்பை மற்றும் புவனேசுவரத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில், 16 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.

5. 2022 – உலக நீர் மாநாடு மற்றும் கண்காட்சியை நடத்தும் நாடு எது?

அ. ஸ்பெயின்

ஆ. ஜெர்மனி

இ. டென்மார்க் ☑

ஈ. ஹங்கேரி

✓ பன்னாட்டு நீர் சங்கமானது 2022 – உலக நீர் மாநாடு மற்றும் கண்காட்சியை டென்மார்க்கின் கோபன்ஹேகனில் நடத்துகிறது. இந்தப் பன்னாட்டு கண்காட்சியில், 'இந்தியாவில் நகர்ப்புற கழிவுநீர் சூழல்' என்ற தலைப்பில் இந்தியப் பிரதிநிதிகள் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டனர். அடல் புத்தாக்க இயக்கம் (AIM), NITI ஆயோக், ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் தேசிய தூய்மை கங்கை இயக்கம் (NMCG), பன்னாட்டு முகமையான டென்மார்க் புத்தாக்க மையம் (ICDK) மற்றும் கல்விச்சாலையான பாம்பே – இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT–B) ஆகியவை இந்த வெள்ளை அறிக்கையைத் தயாரித்தன.

6. எந்த இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசமானது பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான கடன் திட்டத்தை, 'மகிளா நிதி' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது?

அ. உத்தர பிரதேசம்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிசா

✓ இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட், பெண்களின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான கடன் திட்டத்தை, 'மகிளா நிதி' என்ற பெயரில் தொடங்கி வைத்தார். பெண்கள் சமத்துவ நாளை முன்னிட்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், புதிய தொழில் தொடங்குவதற்கும், தொழிலை விரிவுபடுத்துவதற்கும் பெண்களுக்கு எளிதாக கடன் வழங்கப்படும். 2022–23 மாநில பட்ஜெட்டில், இராஜஸ்தான் கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுக் கவுன்சில்மூலம், 'மகிளா நிதி' அமைப்பதாக அவ்வரசாங்கம் அறிவித்தது.

7. கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய்க்கு எதிராக இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட qHPVஐ அறிமுகப்படுத்திய மருந்து நிறுவனம் எது?

அ. Dr ரெட்டி ஆய்வகம்

ஆ. சீரம் இந்தியா நிறுவனம் ☑

இ. பயோகான்

ஈ. பாரத் பயோடெக்

✓ சீரம் இந்தியா நிறுவனத்துடன் இணைந்து உயிரித்தொழில்நுட்பத்துறை, கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய்க்கு எதிராக இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட குவாட்ரிவலன்ட் மனித பாப்பிலோமா வைரஸ் தடுப்பூசியை

(qHPV) அறிமுகப்படுத்தவுள்ளது. உலக சுகாதார அமைப்பின் (WHO) கூற்றுப்படி, கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோய்க்கான உலகளாவிய பாதிப்புகளில் 1/5 பங்கை இந்தியா கொண்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 1.23 இலட்சம் பாதிப்புகளும் சுமார் 67,000 இறப்புகளும் இதன்மூலம் நிகழ்கிறது.

8. 'இராஷ்ட்ரிய போஷன் மா' அனுசரிக்கப்படுகிற மாதம் எது?

அ. ஜூலை

ஆ. ஆகஸ்ட்

இ. செப்டம்பர் ☑

ஈ. டிசம்பர்

✓ சத்தான உணவை உட்கொள்வதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் செப்.1 முதல் செப்.7 வரை 'தேசிய ஊட்டச்சத்து வாரமாக' இந்தியா கடைப்பிடிக்கிறது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் 5ஆவது 'இராஷ்ட்ரிய போஷன் மா'வை நாடு முழுவதும் செப்.1 முதல் 30 வரை கொண்டாடுகிறது. 'மகிளா ஔர் ஸ்வஸ்த்யா' மற்றும் 'பச்சா ஔர் ஷிக்ஷா' ஆகிய கருப்பொருள்களில் முதன்மை கவனம் செலுத்தி, கிராமப் பஞ்சாயத்துகள்மூலம் போஷான் பஞ்சாயத்துகளாக, 'போஷான் மா' கொண்டாடுவதே இந்த ஆண்டு (2020), 'போஷன் மா' நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

9. "Indian Banking in Retrospect – 75 years of Independence" என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ. K V காமத்

ஆ. உர்ஜித் படேல்

இ. அசுதோஷ் இராரவிகர் ☑

ஈ. அருந்ததி பட்டாச்சார்யா

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் DEPRஇன் இயக்குநர் Dr அசுதோஷ் இராரவிகர், "Indian Banking in Retrospect – 75 years of Independence" என்ற நூலை எழுதியுள்ளார். கடந்த 75 ஆண்டுகளில் இந்திய வங்கித்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை இந்நூல் பட்டியலிடுகிறது. 1990–களின் பிற்பகுதியில் ஏற்பட்ட தென்கிழக்காசிய நெருக்கடி, கடந்த 2008ஆம் ஆண்டின் உலகளாவிய சரிவு, 2013–14இன் பிற நெருக்கடிகள் ஆகியவற்றின்போது வங்கித் துறை எவ்வாறு சிறந்த நெகிழ்திறனைக் காட்டியது என்பதை இந்நூல் சிறப்புற விவரிக்கிறது.

10. கல்வி வாரியங்களின் அனைத்து மதிப்பீடு தொடர்பான தகவல்களுக்கான தேசிய ஒற்றைச்சாளரமூலத்தின் பெயரென்ன?

அ. NIPUN

ஆ. STARS

இ. PARAKH ☑

ஈ. KALAM

✓ PARAKH (Performance Assessment, Review and Analysis of Knowledge for Holistic Development) என்பது தேசிய கல்விக்கொள்கையில் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம் (NCERT) மற்றும் மாநில கல்வி வாரியங்கள் இணைந்து மாநில மற்றும் நடுவண் வாரியங்களில் ஒரே சீரான தன்மையைக்கொண்டு வருவதற்காக ஒரு 'சிறந்த கட்டமைப்பை' உருவாக்குகின்றன. அனைத்து மதிப்பீடு தொடர்பான தகவல்களுக்கும், 'PARAKH' என்ற தேசிய ஒற்றைச்சாளரம் மூலமாக விளங்கும். இது தேசிய சாதனை ஆய்வு (NAS) மற்றும் மாநில சாதனை ஆய்வு போன்ற காலமுறை சோதனைகளையும் மேற்பார்வையிடும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'தூய்மையே சேவை' இருவார இயக்கம் தொடங்கியது

ஊரக இந்தியாவில் முழுமையான தூய்மையை நோக்கிய முனைவுகளை விரைவுப்படுத்துவதற்காக 'தூய்மையே சேவை' என்ற இருவார இயக்கத்தை ஜல்சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் துப்புரவுத்துறை தொடங்கியுள்ளது. குவிந்துகிடக்கும் குப்பைகளை அகற்றுவது, திடக்கழிவு மேலாண்மைக்கான செயல்பாடு ஆகியவற்றுக்கு இது மாபெரும் சமூக திரட்சியான இயக்கமாகும். இதன் ஒருபகுதியாக (i) கிராமங்களில் திறந்தவெளியில் மலம் கழிக்காத மக்கள் இயக்கத்தில் சமூக திரட்சியையும் பங்கேற்பையும் உறுதிசெய்தல், (ii) கிராமங்களில் முழுமையான துப்புரவுக்கு முக்கியத்துவமளித்தல், (iii) அனைவரின் பணியாக தூய்மை என்ற கோட்பாட்டை மறுவலியுறுத்துதல், (iv) தூய்மை இந்தியா நாளை (அக்.2) கிராம அளவில் கொண்டாடுதல் ஆகியவற்றுக்கு ஏற்பாடு செய்யுமாறு மாநில அரசுகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. செப்.15 அன்று தொடங்கிய இந்த இயக்கம், அக்.2 அன்று நிறைவடையும்.

இந்த இயக்கத்தின்கீழ் கிராமப்புறங்களில் மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய செயல்கள்:

- கழிவுப்பொருட்கள் சேகரிப்பு மற்றும் பிரித்தலுக்கான கூடங்கள் / மையங்கள் கட்டுதல்.
- நீர்நிலைகளுக்கு அருகேயுள்ள பகுதிகளில் தூய்மையாகப் பராமரித்தல், அவற்றைச்சுற்றி மரக்கன்றுகள் நடுதல்.
- குப்பைகளை சேகரிப்பதற்கு அரசு இ–சந்தைமூலம் மின்கலத்தால் இயக்கப்படுகின்ற மூன்று சக்கர வாகனங்கள் / மின்சார வாகனங்கள் வாங்குதல்.
- நெகிழிபோன்ற மக்காத குப்பைகளை வீடு வீடாக சென்று சேகரித்தல்.
- ஒருமுறை மட்டும் பயன்படுத்தும் நெகிழிப்பொருட்களால் ஏற்படும் தீமைகள்குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- குப்பைகள் போடாமைக்கான முழக்கம் எழுதுதல் / உறுதிமொழி எடுத்தல்.

---

2. சிறந்த உயிரியல் பூங்காவாக டார்ஜீலிங் உயிரியல் பூங்கா தேர்வு: வண்டலூர் பூங்காவுக்கு 2ஆவது இடம்

மேற்கு வங்க மாநிலம், டார்ஜீலிங் இமயமலைப்பகுதியில் அமைந்துள்ள பத்மஜா நாயுடு இமாலய உயிரியில் பூங்கா, நாட்டின் சிறந்த உயிரியல் பூங்காவாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் 150க்கும் மேற்பட்ட உயிரியல் பூங்காக்கள் உள்ளன. பூங்காக்களின் இயக்குநர்களுக்கான மாநாடு ஒடிஸா மாநிலம் புவனேசுவரத்தில் கடந்த செப்.10 அன்று நடைபெற்றது. மத்திய உயிரியல் பூங்காக்களுக்கான ஆணையம் பூங்காக்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் தரப்பட்டியலை அம்மாநாட்டில் வெளியிட்டது. அந்தப்பட்டியலில், மேற்கு வங்கத்தின் டார்ஜீலிங் பகுதியில் அமைந்துள்ள பத்மஜா நாயுடு இமாலய உயிரியல் பூங்கா முதலிடத்தைப் பெற்றது.

சென்னை வண்டலூரில் உள்ள அண்ணா உயிரியல் பூங்கா 2ஆவது இடத்தையும், கர்நாடகத்தின் மைசூருவில் அமைந்துள்ள ஸ்ரீ சாமாராஜேந்திரா உயிரியல் தோட்டம் 3ஆவது இடத்தையும் பெற்றன. கொல்காத்தாவில் அமைந்து உள்ள அலிப்பூர் உயிரியல் தோட்டம் பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது.

சர்வதேச அங்கீகாரம்: நடுவண் உயிரியல் பூங்காவுக்கான ஆணையம், உயிரியல் பூங்காக்களின் நிர்வாகம், செயல்திறன் போன்ற பல்வேறு நிலைகளில் மேற்கொண்ட மதிப்பீட்டில் டார்ஜீலிங் உயிரியல் பூங்கா 83 சதவீத மதிப்பெண்களைப் பெற்றிருந்தது. கடந்த 1958ஆம் ஆண்டு நிறுவப்பட்ட டார்ஜீலிங் உயிரியல் பூங்கா, கிழக்கு இமய மலையில் காணப்படும் பனிச்சிறுத்தை, சிவப்புப் பாண்டா கரடி போன்ற அழிவுநிலையை எதிர்நோக்கியுள்ள உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதில் சர்வதேச அங்கீகாரம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

1. முதல் உலகளாவிய கடல்சார் சுற்றுலாத்துறை தளமான, 'The Green Fins Hub' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

அ. WEF

ஆ. IMF

இ. UNEP ☑

ஈ. UNICEF

✓ 'கிரீன் ஃபின்ஸ் ஹப்' என்பது முதல் உலகளாவிய கடல்சார் சுற்றுலாத்துறை தளமாகும். ஐக்கிய நாடுகளின் (UN) சுற்றுச்சூழல் திட்டத்துடன் (UNEP) இணைந்து, 'The Reef–World அறக்கட்டளை' இக்கருவியை உருவாக்கியுள்ளது. கடல்சார் பாதுகாப்புச் சுற்றுலாத்துறையில் நிலைத்தன்மை சவால்களை கையாலுவதற்கு இந்தக் கருவி உதவுகிறது. இயக்கிகள் (operators) தங்கள் அன்றாட நடைமுறைகளில் எளிய மாற்றங்களைச் செய்யவும், அவர்களின் வருடாந்திர மேம்பாடுகளைக் கண்காணிக்கவும், அவர்களின் சமூகங்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளவும் இது உதவுகிறது.

2. மூத்த டென்னிஸ் வீரரான ரோஜர் பெடரர், கீழ்க்காணும் எந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்?

அ. பிரான்ஸ்

ஆ. சுவிச்சர்லாந்து ☑

இ. செர்பியா

ஈ. இத்தாலி

✓ உலகின் தலைசிறந்த டென்னிஸ் விளையாட்டு வீரர்களுள் ஒருவராகக் கருதப்படும் ரோஜர் பெடரர், தனது 41ஆவது வயதில் தொழிற்முறை டென்னிஸில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். சுவிச்சர்லாந்தைச் சேர்ந்த முன்னாள் உலக நெ.1 வீரரான அவர், வரவிருக்கும் லேவர் கோப்பைக்கான போட்டி தனது இறுதி ATP போட்டியாக இருக்கும் என்று அறிவித்தார். ரோஜர் பெடரர், 24 ஆண்டுகளில் 1500–க்கும் மேற்பட்ட போட்டிகளில் விளையாடி இருபது கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அவர், 2018இல் 36 வயதில் உலகின் மிகவயதான நெ.1 வீரரானார்.

3. 'அரசுப்பள்ளி மாணாக்கருக்கான காலை உணவுத்திட்டத்தை' அறிவித்துள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. தெலுங்கானா

✓ மதுரையில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான அரசுப்பள்ளி மாணாக்கருக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார். காலை உணவுத் திட்டங்கள் கற்றல்திறன் மற்றும் பள்ளி வருகையை மேம்படுத்துவதற்கு வழிவகுத்தது என பல ஆய்வுகள் முடிவுசெய்துள்ளதாக முக ஸ்டாலின் தெரிவித்தார். திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சியால் கடந்த 1922ஆம் ஆண்டில் சென்னையில் வைத்து தமிழ்நாட்டின் முதல், 'மதிய உணவு திட்டம்' தொடங்கப்பட்டது.

4. 'ANGAN – 2022' என்ற மாநாட்டை ஏற்பாடு செய்த நிறுவனம் எது?

அ. இந்திய ரிசர்வ் வங்கி

ஆ. ஆற்றல் திறன் பணியகம் ☑

இ. NITI ஆயோக்

ஈ. நடுவண் மறைமுக வரிகள் வாரியம்

- ✓ குறைந்த செலவில் புதிய பசுமை குடியிருப்புகள்மூலம் இயற்கையை விரிவுபடுத்துதல் என்ற பொருளுடைய அங்கன் – 2022 என்னும் மூன்றுநாள் சர்வதேச மாநாடு 2022 செப்.14 அன்று தொடங்கியது. "கட்டடங்களை கரியமில வாயு வெளியேற்றம் இல்லாமல் மாற்றுவது" என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்த மாநாட்டை நடுவண் எரிசக்தி அமைச்சகம் நடத்தியது. இந்தியா – சுவிச்சர்லாந்து கட்டுமான எரிசக்தித்திறன் திட்டத்தின்கீழ், வளர்ச்சி & ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகமையுடன் ஒருங்கிணைந்து எரிசக்தி அமைச்சகத்தின் ஆற்றல் திறன் பணியகம் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது.

- ✓ மேலும் 8 தொடக்க அமர்வுகள், எட்டு மையப்பொருள் அமர்வுகளில் கரியமில வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல், கட்டடங்களில் எரிசக்தி திறன் ஆகியவை தொடர்பாக 15 நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், கலந்துகொண்டு விவாதித்தனர்.

5. பிரதமர் பாரதிய ஜனௌஷாதி பரியோஜனாவுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

ஆ. இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் ☑

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டமைச்சகம்

ஈ. சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

- ✓ பிரதமர் பாரதிய மக்கள் மருந்தகம் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 8,700–க்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் தரமான மரபுசார் மருந்துகளும், அறுவை சிகிச்சை உபகரணங்களும் மற்ற பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது இக்கடைகளில் 1600–க்கும் மேற்பட்ட மருந்துகளும், 250 அறுவை சிகிச்சை உபகரணங்களும் கிடைக்கின்றன.

- ✓ நீரிழிவு நோய்க்கான, 'சிட்டாகிளிப்டின்' மருந்தின் பல்வேறு வகையான கலவையில் பிரதமரின் பாரதிய மக்கள் மருந்தக திட்டத்தின்கீழ் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகிறது. 'சிட்டாகிளிப்டின்' அதன் வெவ்வேறு வகை கலவையில் அனைத்து மக்கள் மருந்தகங்களிலும், குறைந்த விலையில் கிடைக்கும். சிட்டாகிளிப்டின் பாஸ்பேட் ஐபி–50 மிகி 10 மாத்திரைகளைக்கொண்ட அட்டை ₹60–க்கு கிடைக்கிறது.

6. 'முதலமைச்சர் உதிமான் கிலாடி உன்னயன் யோஜனா'வைத் தொடங்கிய மாநிலம் எது?

அ. உத்தர பிரதேசம்

ஆ. உத்தரகாண்ட் ☑

இ. மேற்கு வங்கம்

ஈ. ஒடிஸா

- ✓ உத்தரகாண்ட் மாநில முதலமைச்சர் புஷ்கர் சிங் தாமி, தேசிய விளையாட்டு நாளையொட்டி, 'முதலமைச்சர் உதிமான் கிலாடி உன்னயன் யோஜனாவைத்' தொடங்கினார். இத்திட்டத்தின்கீழ் 1950 சிறுவர்கள் மற்றும் 1950 சிறுமிகளுக்கு விளையாட்டுக்கான உதவித்தொகை வழங்கப்படும். மல்சாங் விளையாட்டும் விளையாட்டுக்கான கொள்கையில் இணைக்கப்படும் அதேவேளையில் நிதிப்பலன்களை வழங்குவதற்காக முதலமைச்சர் விளையாட்டு மேம்பாட்டு நிதியம் நிறுவப்படும்.

7. உலகப்பொருளாதார மன்றம் வழிநடத்தும் நிலையான முனைவில் இணைந்துள்ள இந்திய வான்போக்குவரத்து நிறுவனம் எது?

அ. ஏர் இந்தியா

ஆ. இண்டிகோ ☑

இ. ஸ்பைஸ்ஜெட்

ஈ. விஸ்தாரா

✓ இந்தியாவின் விமானப்போக்குவரத்து நிறுவனமான, 'இண்டிகோ' உலகப்பொருளாதார மன்றத்தின் தலைமையில் ஒரு நிலையான முனைவில் இணைந்துள்ளது. இந்த விமானப் போக்குவரத்து நிறுவனம், 'Clear Skies for Tomorrow' என்ற இந்திய கூட்டு இயக்கத்தில் கையெழுத்திட்டுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட, 'Clean Skies for Tomorrow' ஆனது உயரதிகாரிகள் மற்றும் பொது வாழ்வில் ஈடுபட்டு வரும் தலைவர்களுக்கு நிலையான விமான எரிபொருளுக்கு மாறுவதற்கான வழிமுறைகளை வழங்குகிறது.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற துகர் நீர்மின்னுற்பத்தித்திட்டம் அமைந்துள்ள மாநிலம்/UT எது?

அ. அஸ்ஸாம்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. மேற்கு வங்கம்

ஈ. தெலுங்கானா

✓ அரசுக்குச் சொந்தமான நீர்மின்னுற்பத்தி நிறுவனமான 'NHPC', ஹிமாச்சல பிரதேச மாநில அரசுடன் 500 MW திறன் கொண்ட துகர் நீர்மின்னுற்பத்தித் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. முன்னதாக, 449 மெகாவாட் (MW) திறன்கொண்ட துகர் நீர்மின்னுற்பத்தித் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் NHPC மற்றும் ஹிமாச்சல பிரதேச மாநில அரசுக்கிடையே கையெழுத்தானது. துகர் நீர்மின்னுற்பத்தித் திட்டமானது ஓராண்டில் 1,759.85 மில்லியன் மின்சார அலகுகளை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

9. 'தேசிய சிறுதொழில் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. ஆகஸ்ட்.27

ஆ. ஆகஸ்ட்.30 ☑

இ. செப்டம்பர்.27

ஈ. செப்டம்பர்.30

✓ ஒவ்வோர் ஆண்டும், இந்தியாவில், ஆக.30 அன்று தேசிய சிறுதொழில் நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2001ஆம் ஆண்டு சிறுதொழில் அமைச்சகம் இந்த நாளை தேசிய சிறுதொழில் நாளாக அறிவித்தது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக சிறுதொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. இது இந்திய அரசாங்கத்தின் முனைவாகும்; இது நாட்டில் சிறு–குறுந்தொழில்களின் வளர்ச்சியை ஏற்படுத்தியது.

10. அண்மையில் காலஞ்சென்ற மிக்கேல் கோர்பச்சேவ், கீழ்க்காணும் எந்த நாட்டின் முன்னாள் அதிபராவார்?

அ. உக்ரைன்

ஆ. ரஷ்யா ☑

இ. பெலாரசு

ஈ. பல்கேரியா

✓ 1985 முதல் 1991 வரை முன்னாள் சோவியத் யூனியனின் இறுதி அதிபராக இருந்த மிக்கேல் கோர்பச்சேவ், தனது 91ஆவது வயதில் காலமானார். கடந்த 1986ஆம் ஆண்டில், அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனிடம் உள்ள அனைத்து தொலைதூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளையும் ஒழிக்க கோர்பச்சேவ் முன்மொழிந்தார். அது பனிப் போரின் முடிவின் ஆரம்பமாகும். அவருக்கு கடந்த 1990ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. CSIRஇன் பிரபல அறிவியல் இதழான, 'விஞ்ஞான பிரகதி' 'இராஜ்பாஷா கீர்த்தி விருது' பெற்றது

CSIRஇன் பிரபல அறிவியல் இதழான, 'விஞ்ஞான பிரகதி' புதிய வரலாற்றைப் படைத்துள்ளது. இந்த இதழ் தேசிய இராஜ்பாஷா கீர்த்தி விருதை (முதல் நிலை) பெற்றுள்ளது.

'விஞ்ஞான பிரகதி' இதழின் உள்ளடக்கங்கள் இளைஞர்களிடையே அறிவியல்பற்றிய ஆர்வத்தைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தியாவின் சிறந்த பிரபலமான அறிவியல் இதழ்களில் ஒன்றான இது, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் உள்ள குழந்தைகள், ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பொதுமக்கள் இடையில் பிரபலமாக உள்ளது. அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக் கவுன்சில் (CSIR) இந்த இதழை, கடந்த 1952இல் வெளியிடத்தொடங்கியது. இது ஏழு தசாப்தங்களின் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

---

2. 2022-23 நிதியாண்டிற்கான மொத்த நேரடி வரிவசூல் 30% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது

2022-23 நிதியாண்டுக்கான நேரடி வரிவசூல் புள்ளிவிவரங்கள், 17.09.2022 வரையிலான நிலவரப்படி நிகர வசூல் ₹7,00,669 கோடியாகும். முந்தைய நிதியாண்டின் இதே காலப்பகுதியில் அதாவது 2021-22 நிதியாண்டின் ₹5,68,147 கோடியுடன் ஒப்பிடுகையில், இது 23% அதிகரிப்பைக் குறிக்கிறது. நிகர நேரடி வரிவசூல் ₹7,00,669 கோடியில், பெருநிறுவனங்கள் வரி ₹3,68,484 கோடி உள்ளடங்கியதாகும். தனிநபர் வருமான வரி பங்குப் பரிவர்த்தனை வரி உட்பட ₹3,30,490 கோடி.

2022-23 நிதியாண்டிற்கான நேரடி வரிகளின் மொத்த வசூல் (திரும்பப்பெறுவதற்கு முன்) ₹8,36,225 கோடியுடன், முந்தைய நிதியாண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதாவது 2021-22 நிதியாண்டில், ₹6,42,287 கோடியாக இருந்தது. இது 30% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

---

3. திருச்சியில், 'பெரியார் உலகம்' - அடிக்கல் நாட்டினார் முதல்வர் ஸ்டாலின்!

பெரியாரின் பிறந்தநாளையொட்டி திருச்சி மாவட்டம் சிறுகனூரில் அமையவுள்ள, 'பெரியார் உலகத்துக்கு' அடிக்கல் நாட்டினார். தந்தைப் பெரியாரின் பிறந்தநாள் சமூக நீதி நாளாக 17-09-2022 அன்று கொண்டாடப்படுகிறது. திருச்சி மாவட்டம் சிறுகனூரில் அமையவுள்ள, 'பெரியார் உலகத்தில்' பெரியார் நூலகம், ஆய்வகம் உள்ளிட்டவை அமைக்கப்படவுள்ளன.

---

4. SCO தலைமைப் பொறுப்பை ஏற்றது இந்தியா

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் தலைமைப்பொறுப்பை உறுப்புநாடுகள் சுழற்சிமுறையில் வகித்து வருகின்றன. நடப்பாண்டுக்கான தலைமைப்பொறுப்பை உஸ்பெகிஸ்தான் வகித்த நிலையில், 2023-ஆம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பை இந்தியா வெள்ளிக்கிழமை ஏற்றது. அதன்படி, அடுத்த ஆண்டுக்கான SCO மாநாட்டை இந்தியா நடத்தவுள்ளது. கடந்த 2017-ஆம் ஆண்டில் SCO கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராக இணைந்த இந்தியா, முதன்முறையாக அக்கூட்டமைப்புக்குத் தலைமையேற்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

5. டிசம்பரில் G20 தலைமைப்பொறுப்பை ஏற்கிறது இந்தியா: 200-க்கும் மேற்பட்ட கூட்டங்களை நடத்த முடிவு

G20 அமைப்பின் தலைமைப்பொறுப்பை இந்தியா வரும் டிசம்பரில் ஏற்கிறது. அடுத்த ஓராண்டுக்கு இந்தப்பொறுப்பில் நீடிக்கும் இந்தியா, நாடு முழுவதும் 200-க்கும் அதிகமான G20 கூட்டங்களை நடத்த முடிவுசெய்துள்ளது.

G20 அமைப்பில் ஆர்ஜென்டினா, பிரேஸில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், தென்கொரியா, மெக்ஸிகோ, ரஷியா, சவூதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, துருக்கி, பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) இவை 85 சதவீதமும், சர்வதேச வர்த்தகத்தில் 75 சதவீதமும், உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கும் கொண்டவை. இந்த G20 அமைப்பின் தலைமைப்பொறுப்பை வரும் டிசம்பர்.1 முதல் 2023 நவம்பர்.30 வரை ஓராண்டுக்கு இந்தியா வகிக்கவுள்ளது.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு விவரம்: இந்தியாவின் தலைமையின் கீழ், நாடு முழுவதும் 200-க்கும் அதிகமான G20 கூட்டங்கள் நடைபெறவுள்ளன. தில்லியில் அரசுகளின் தலைவர்கள் அளவிலான G20 தலைவர்கள் மாநாடு தில்லியில் அடுத்த ஆண்டு செப்.9, 10 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தியாவின் தலைமையின்கீழ் முதல்முறையாக, 'ட்ரொய்கா' என்ற முக்கூட்டமைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது. இதில் இந்தியா, இந்தோனேசியா, பிரேஸில் ஆகிய வளரும் நாடுகள் இடம்பெறுகின்றன. இதன் வாயிலாக வளரும் பொருளாதார நாடுகளுக்கு முதல்முறையாக அங்கீகாரம் அளிக்கப்படுகிறது.

வழக்கமான சர்வதேச அமைப்புகளான ஐநா., சர்வதேச நிதியம், உலக வங்கி, உலக சுகாதார அமைப்பு, உலக வர்த்தக அமைப்பு, உலக தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றைப்போல G20 கூட்டங்களில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்குமாறு வங்கதேசம், எகிப்து, மோரீஷஸ், நெதர்லாந்து, நைஜீரியா, ஓமன், சிங்கப்பூர், ஸ்பெயின், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு இந்தியா அழைப்பு விடுக்கும். இதுமட்டுமன்றி சர்வதேச சூரிய சக்தி கூட்டமைப்பு, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றுக்கும் அழைப்புவிடுக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

6. பிரணவ் ஆனந்த் இந்தியாவின் 76-ஆவது கிராண்ட்மாஸ்டர்

கர்நாடக மாநிலம், பெங்களூரைச்சேர்ந்த இளம் செஸ் போட்டியாளர் பிரணவ் ஆனந்த் (15) இந்தியாவின் 76-ஆவது கிராண்ட்மாஸ்டர் ஆகினார். ருமேனியாவில் தற்போது நடைபெற்றுவரும் உலக யூத் செஸ் சாம்பியன்ஷிப் போட்டியின்மூலம் 2,500 ELO மார்க்கை அவர் எட்டியதை அடுத்து, கிராண்ட்மாஸ்டராகும் தகுதியைப் பூர்த்தி செய்தார். ஒரு செஸ் வீரர் கிராண்ட்மாஸ்டர் பட்டம் பெறுவதற்கு, 2,500 ELO புள்ளிகளை எட்டுவதுடன், தலா 9 சுற்றுகள்கொண்ட 3 போட்டிகளில், இருமுறை சாதகமான முடிவுகளைப் (நார்ம்) பெற்றிருக்க வேண்டும். இதில் தேவையான 'நார்ம்'களை கடந்த ஜூலையில் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற பியெல் செஸ் போட்டியில் பூர்த்திசெய்த பிரணவ், ELO புள்ளிகள் கணக்கை இப்போட்டியில் எட்டியிருக்கிறார்.

---

7. பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களை புத்தாக்க சிந்தனை உடையவர்களாக உருவாக்கும், பள்ளிப்புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தை தமிழக முதல்வர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

மதுரையில் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற, 'தோள் கொடுப்போம் தொழில்களுக்கு' என்ற தென்மண்டல மாநாடு நடைபெற்றது. இதில் பல்வேறு புதிய திட்டங்களை முதல்வர் முக ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

பள்ளிப் புத்தாக்க மேம்பாட்டுத் திட்டம்: தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனமும், பள்ளிக்கல்வித் துறையும், UNICEF நிறுவனத்துடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தவுள்ளன. நிகழ் ஆண்டில் முதற்கட்டமாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து மேல்நிலைப்பள்ளிகளில் 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் பயிலும் 1.56 இலட்சம் மாணவர்களுக்கும், 3,120 ஆசிரியர்களுக்கும் தொழில் முனைதல் பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்படும்.

மாணவர்களிடையே புத்தாக்கச் சிந்தனையை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த 40 புத்தாக்கச் சிந்தனைகளுக்கு ₹25,000 முதல் ₹1 இலட்சம் வரை ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

தொழில்முனைவோருக்கு விருதுகள்: 2021–22ஆம் ஆண்டிற்கான மாநில அளவிலான சிறந்த தொழில் முனைவோருக்கான விருதுகளை முதல்வர் முக ஸ்டாலின் வழங்கினார்.

சிறந்த தொழில்முனைவோர் விருது (தூத்துக்குடி கல்பகா கெமிக்கல்ஸ்), வேளாண் சார்ந்த தொழில் விருது (திருப்பத்தூர் மாவட்டம் ப்ரெஸ்ரா பிக்ல்ஸ்), தரம் மற்றும் ஏற்றுமதி விருது (தூத்துக்குடி இரமேஷ் பிளவர்ஸ்), சிறந்த மகளிர் தொழில்முனைவோர் விருது (செங்கல்பட்டு மாவட்டம் ஐசிஐ ஸ்பெசாலிட்டிஸ்) சிறப்புப் பிரிவினருக்கான விருது (புதுக்கோட்டை மாவட்டம் பிரபு இண்டஸ்ட்ரியல்) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு அதிக கடன் வழங்கிய முதல் மூன்று வங்கிகளான முறையே, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பரோடா வங்கி ஆகிய வங்கிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

1. 2022ஆம் ஆண்டு GDPஇன் விகிதத்தில் இந்தியாவின் சரக்குப் போக்குவரத்துச் செலவினம் எவ்வளவு?

அ. 9-10 %

ஆ. 13-14 % ☑

இ. 15-16 %

ஈ. 19-20%

✓ பிரதமர் நரேந்திர மோடி தேசிய சரக்குப் போக்குவரத்துக் கொள்கையை வெளியிட்டார். இந்தக் கொள்கை நாடு முழுவதும் சரக்குகளின் தடையற்ற போக்குவரவை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது; இது சரக்குப் போக்குவரவிற்கான செலவையும் கணிசமாகக் குறைக்கிறது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளில் இந்தியப் பொருட்களின் போட்டித்தன்மையை மேம்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) விகிதத்தில் இந்தியாவின் சரக்குப் போக்குவரவு செலவு சுமார் 13–14 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

2. எதிர்வரும் 2023ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பிற்குத் (SCO) தலைமை வகிக்கவுள்ள நாடு எது?

அ. இந்தியா ☑

ஆ. உஸ்பெகிஸ்தான்

இ. பாகிஸ்தான்

ஈ. சீனா

✓ எட்டு உறுப்பினர்களைக்கொண்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைப் பதவியை சமர்கண்டில் வைத்து இந்தியாவிடம் உஸ்பெகிஸ்தான் ஒப்படைத்தது. இந்தத் தலைமைப் பதவியானது சுழற்சிமுறையில் SCO உறுப்பு நாடுகளுக்குத் தரப்படுகிறது. SCO அதன் ஆறு நிறுவன உறுப்பினர்களான சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உட்பட எட்டு முழுநேர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த 2017ஆம் ஆண்டில், முழுநேர உறுப்பினர்களாக SCOஇல் இணைந்தன.

3. தேசிய இராஜ்பாஷா கீர்த்தி விருதைப்பெற்ற 'விஞ்ஞான் பிரகதி', எந்த நிறுவனத்தால் வெளியிடப்படும் அறிவியல் இதழாகும்?

அ. ISRO

ஆ. BARC

இ. CSIR ☑

ஈ. AIIMS

✓ 'விஞ்ஞான் பிரகதி' என்பது அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சிக்கழகத்தால் (CSIR) வெளியிடப்படும் ஒரு புகழ்மிகு அறிவியல் இதழாகும். உள்துறை அமைச்சகத்தின் அலுவல் மொழித்துறை சார்பாக சூரத்தில் நடைபெற்ற இரண்டாவது அகில இந்திய இராஜ்பாஷா சம்மேளனத்தில் இவ்விதழ் தேசிய இராஜ்பாஷா கீர்த்தி விருதைப்பெற்றது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை எளிய மொழியில் மக்களுக்கு எடுத்துரைப்பதே, 'விஞ்ஞான் பிரகதி' இதழின் நோக்கமாகும்.

4. சீர்திருத்த தலைவர் ஈ வெ இராமசாமி ('தந்தை' பெரியார்) பிறந்தநாளை 'சமூக நீதி நாள்' எனக் கொண்டாடுகிற மாநிலம் எது?



அ. தமிழ்நாடு ☑ ஆ. கேரளா

இ. ஆந்திரப் பிரதேசம் ஈ. கர்நாடகா

✓ சீர்திருத்த தலைவர் ஈ வெ இராமசாமி ('தந்தை' பெரியார்) அவர்களின் பிறந்தநாளை மாண்புமிகு தமிழ்நாடு அரசு 'சமூக நீதி நாள்' எனக் கொண்டாடுகிறது. அன்றைய நாள், ஆண்டுதோறும், மாநிலச் செயலகம் உட்பட அனைத்து அரசு அலுவலகங்களிலும் பணியாளர்கள், 'சகோதரத்துவம்', 'சமத்துவம்', 'சுயமரியாதை', 'பகுத்தறிவு' போன்ற 'தந்தை' பெரியாரின் கொள்கைகளின் அடிப்படையில் விழுமியங்களைப்பின்பற்ற உறுதிமொழியெடுப்பார்கள்.

5. இந்தியாவில் கடற்கரை தூய்மை இயக்க நாள் பிரச்சாரத்தை வழிநடத்துகிற நிறுவனம் எது?

அ. NCC

ஆ. இந்திய கடலோரக் காவல்படை ☑

இ. இந்திய கடற்படை

ஈ. NSS

✓ பன்னாட்டு கடற்கரை தூய்மை நாளானது செப்டம்பர் மாதத்தில் வரும் மூன்றாவது சனிக்கிழமையன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்திய கடலோரக் காவல்படையானது 2006ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த ஆண்டு, பன்னாட்டு கடற்கரை தூய்மை நாள் மற்றும் 'ஸ்வச் சாகர் அபியான்' ஆகியவற்றின் ஒருபகுதியாக, இந்திய கடலோரக் காவல்படை நாடு முழுவதும் 75 இடங்களில் கடற்கரைகளைத் தூய்மைப்படுத்தியுள்ளது. இந்திய கடலோரக் காவல்படையின் முனைவுகள் அனைத்தும் நடுவண் புவி அறிவியல் அமைச்சகத்தின் திட்டமான, 'ஸ்வச் சாகர்–சுரக்ஷித் சாகர்' உடன் ஒத்துப்போகின்றன.

6. பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து, 'கிரீன் சேனல்' சான்றிதழைப் பெற்றுள்ள கப்பல் கட்டும் நிறுவனம் எது?

அ. கோவா கப்பல் கட்டும் தளம்

ஆ. கொச்சி கப்பல் கட்டும் தளம்

இ. கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் ☑

ஈ. மசகன் டாக் கப்பல் கட்டுநர்கள்

✓ கார்டன் ரீச் கப்பல் கட்டுநர்கள் மற்றும் பொறியாளர்கள் நிறுவனமானது (GRSE), மத்திய பாதுகாப்பு அமைச்சகத்திடம் இருந்து 'கிரீன் சேனல்' சான்றிதழைப் பெற்றுள்ளது. இது, முன்னணி பொதுத்துறை நிறுவனங்களுள் ஒன்றாகும். மேலும், மினி–ரத்னா வகை–1 கப்பல் கட்டும் தளமாகும் இது. இந்திய இராணுவத்திற்கு பல்வேறு கட்டமைப்புகளாக மாற்றக்கூடிய எஃகுப்பாலங்களை (பெய்லி வகை) வழங்கியதற்காக இந்தச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

7. இந்தியாவின் முதலாவது மற்றும் உலகின் மிகப்பெரிய கரிம இழை ஆலைகளுள் ஒன்றை குஜராத் மாநிலத்தின் ஹசிராவில் அமைக்கப்போவதாக அறிவித்துள்ள நிறுவனம் எது?

அ. TATA பவர்

ஆ. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ☑

இ. NTPC

ஈ. GAIL

✓ ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் முகேஷ் அம்பானி இந்தியாவின் முதல் மற்றும் உலகின் மிகப்பெரிய கரிம இழை ஆலைகளுள் ஒன்றை குஜராத் மாநிலத்தில் உள்ள ஹசிராவில் கட்டவுள்ளதாக அறிவித்தார். இந்த ஆலை, அக்ரிலோனிட்ரைல் மூலப்பொருட்களின் அடிப்படையில் 20,000 MTPA திறன்கொண்டதாக இருக்கும்.

✓ பாலியஸ்டர் மதிப்பு சங்கிலி, வினைல் சங்கிலி மற்றும் புதிய பொருட்கள் உள்ளிட்ட தற்போதைய மற்றும் புதிய மதிப்பு சங்கிலிகளில் திறனை விரிவுபடுத்த அடுத்த 5 ஆண்டுகளில் ₹75,000 கோடியை முதலீடு செய்யவுள்ளதாக அம்பானி அறிவித்தார்.

8. 2021ஆம் ஆண்டில் அதிக இணையவெளிக் குற்றச்சம்பவங்கள் பதிவாகியுள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. கர்நாடகா ☑

இ. குஜராத்

ஈ. உத்தர பிரதேசம்

✓ தேசிய குற்ற ஆவணக்காப்பகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த 2019ஆம் ஆண்டிலிருந்து 2021ஆம் ஆண்டில் இணையவெளிக் குற்றச்சம்பவங்களின் எண்ணிக்கை 18.4% சதவீதம் அதிகரித்துள்ளது. பெண்களுக்கு எதிரான இதுபோன்ற வழக்குகளின் எண்ணிக்கை 28% அதிகரித்துள்ளது. கடந்த 2021ஆம் ஆண்டில் பதிவான 52,974 சம்பவங்களில் 20.2 சதவீதம் பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளாக பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக 2,243 வழக்குகளுடன் கர்நாடகாவும், அதைத்தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் உத்தரபிரதேசமும் உள்ளன.

9. 'GENESIS' என்ற முனைவைத் தொடங்கிய நடுவண் அமைச்சகம் எது?

அ. வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம்

ஆ. மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ☑

இ. MSME அமைச்சகம்

ஈ. கல்வி அமைச்சகம்

इलेक्ट्रॉनिकी एवं
सूचना प्रौद्योगिकी मंत्रालय
MINISTRY OF
ELECTRONICS AND
INFORMATION TECHNOLOGY

✓ நடுவண் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது ₹750 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில், புதுமையான தொடக்கங்களுக்கான (GENESIS) முனைவை 2022 ஜூலையில் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து முதல் ஆறு ஆண்டுகளில் 10,000 துளிர்நிறுவல்களை நடுவணரசு ஊக்குவிக்கும். 'GENESIS' என்பது இந்தியாவின் அடுக்கு–II மற்றும் அடுக்கு–III நகரங்களில் வெற்றிகரமான துளிர்நிறுவல்களை ஆதரிப்பதற்கும் உருவாக்குவதற்கும் ஒரு தேசிய அளவிலான தொழில்நுட்ப ரீதியான தொடக்கத் தளமாக விளங்கும்.

10. கைவினைப்பொருட்கள் கொள்கை–2022–க்கு ஒப்புதலளித்துள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. ஜம்மு-காஷ்மீர்

ஆ. இராஜஸ்தான் ☑

இ. ஹிமாச்சல பிரதேசம்

ஈ. கர்நாடகா

✓ இராஜஸ்தான் மாநில அமைச்சரவை அம்மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் தலைமையில் கைவினைப் பொருட்கள் கொள்கை–2022–க்கு ஒப்புதலளித்தது. இராஜஸ்தான் கைவினைக்கொள்கை – 2022இன் நோக்கம் மாநிலம் முழுவதும் உள்ள ஆறு இலட்சம் கைவினைஞர்களுக்கு அதிகாரமளிப்பதாகும். இப்புதிய கொள்கையின்கீழ், ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதத்தில் தேசிய அளவிலான கைவினைப்பொருட்கள் வாரம் ஏற்பாடு செய்யப்பட்டு, கைவினைஞர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்படும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. இந்திய – கடலோரக் காவல்படையின் கூட்டுப்பயிற்சி "அபியாஸ்–01/22" சென்னையில் நடைபெற்றது.

இந்திய – கடலோரக் காவல் படையின் கூட்டுப்பயிற்சி "அபியாஸ்–01/22" சென்னையில் நடைபெற்றது. இருநாட்டு கடற்படையின் திறன்களை வெளிப்படுத்தும் வகையிலும், கூட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் வகையிலும் இப் பயிற்சி நடைபெற்றது. மேலும் கடலோர தேடுதல் மற்றும் மீட்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும், இந்தப்பயிற்சி நடத்தப்பட்டது. கடற்படையின் பல்வேறு உத்திகள், கடத்தப்பட்ட கப்பலில் இருக்கும் ஊழியர்களை மீட்பது, கொள்ளைச் சம்பவங்களுக்கு எதிரான நடவடிக்கை ஆகியவை தொடர்பாக இந்தப் பயிற்சி முக்கியமாக மேற்கொள்ளப்பட்டது.

4 நாள் பயணம் மேற்கொள்ளும் அமெரிக்காவின் கடலோரக் காவல்படையின் கப்பல் கட்டர் மிட்கெட், நல்லெண்ண அடிப்படையில் சென்னை வந்தடைந்தது.

---

2. 200 ஆதிதிராவிட–பழங்குடியின விவசாயிகள் நிலம் வாங்க ₹10 கோடி மானியம். தமிழ்நாடு அரசு உத்தரவு

தமிழநாட்டில் 200 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயிகள் நிலம் வாங்க ₹10 கோடி மானியம் வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், மானியம் பெறுவதற்கான நிபந்தனைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இதுகுறித்து, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலர் வெளியிட்ட உத்தரவு:

நிலமற்ற ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் வகையில், அவர்கள் வாங்கும் நிலத்தின் விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சம் ₹5 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. இதன்படி, ₹10 கோடி மானியத்தில் 200 நிலமற்ற விவசாயத்தொழிலாளர்கள் பயன்பெறுவர் எனத்தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துதற்கான உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான பரிந்துரைகள், தாட்கோ நிர்வாக இயக்குநர் தரப்பிலிருந்து அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதன்படி, நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

என்னென்ன தகுதிகள்? ஆதிதிராவிட இனத்தைச்சேர்ந்த மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மகளிர் அல்லாத குடும்பங்களில் கணவர் அல்லது மகன்களுக்கு மானியம் வழங்கப்படும். வயது வரம்பு 18 முதல் 65–க்குள் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டவராகவும், விவசாயக்கூலி செய்பவராகவும் இருக்கவேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் அவரது குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின்கீழ் இதுவரை மானியம் ஏதும் பெற்றிருக்கக்கூடாது.

ஒருவர் ஒருமுறை மட்டுமே மானியம் பெறத் தகுதிபடைத்தவர். ஒரு திட்டத்தின்கீழ் ஒருமுறை மானிய உதவி பெற்றால் பின்னரவர் தாட்கோ செயல்படுத்தும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதியற்றவர் ஆவார். விண்ணப்பதாரர்கள் வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்யவேண்டும். நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் அல்லாத பிற இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். இந்தத் திட்டத்தின்கீழ், நிலமற்றவர்கள் அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலம் வாங்கலாம்.

சார்பதிவாளர் அலுவலக இணையதளம் வாயிலாக அல்லது நேரில் நிலத்தின் வழிகாட்டி மதிப்பு மற்றும் சந்தை மதிப்பு பெறப்படவேண்டும். நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி, திட்டத்தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ₹5 இலட்சம் வரை மானியம் விடுவிக்கப்படும்.

விண்ணப்பம் செய்த மகளிரின் பெயரில் அல்லது மகன்கள் அல்லது கணவர் பெயரில் மட்டுமே வாங்கப்படும் நிலம் பதிவு செய்யப்படவேண்டும். மானியத்திட்டத்தின்கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100% முத்திரைத்தாள், பதிவுக் கட்டணத்தில் விலக்களிக்கப்படுகிறது. வாங்கப்படும் நிலத்தை விண்ணப்பதாரர் 10 ஆண்டுகளுக்கு விற்பனை செய்யக்கூடாது. எனவே, நிலம் வாங்கியவுடன் தாட்கோ மாவட்ட மேலாளர்கள் சார்பதிவாளர்களிடம் தெரிவித்து நிலத்தை 10 ஆண்டுகளுக்கு விற்பனை செய்ய முடியாதபடி வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும்.

சென்னையில் பூஜ்ஜியம்: விண்ணப்பிக்கும் பயனாளிகளைத் தேர்வுசெய்ய மாவட்ட ஆட்சியர் தலைமையில் குழு அமைக்கப்பட வேண்டும். மொத்தமாக ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 162 பயனாளிகளுக்கும், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த 38 பேருக்கும் மானியம் வழங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதில், அதிகபட்சமாக திருவாரூர் மாவட்டத்தில் பத்துப் பயனாளிகளைத் தேர்வுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையில் பயனாளிகளின் எண்ணிக்கை பூஜ்ஜியம் ஆகும்.

---

3. கீழடி அகழாய்வு: தந்தத்தாலான மணி கண்டெடுப்பு

சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் எட்டாம் கட்ட அகழாய்வில் தந்தத்தாலான பெரிய மணி கண்டெடுக்கப்பட்டது. கீழடி, கொந்தகை, அகரம் ஆகிய மூவிடங்களில் தமிழக தொல்லியல்துறை சார்பில் 8ஆம் கட்ட அகழாய்வுப்பணி நடந்து வருகிறது. ஏற்கெனவே கீழடியில் 10 குழிகள் தோண்டப்பட்டு, சுடுமண்ணாலான மனிதத்தலை உருவம், தந்தத்தாலான பகடை, காதணி, கண்ணாடி மணிகள் உள்ளிட்ட பொருள்கள் கண்டறியப்பட்டன. தற்போது தந்தத்தாலான பெரிய மணி கண்டெடுக்கப்பட்டுள்ளது. உருளை வடிவில் உள்ள இந்த மணியில் பல சுருள்கள் காணப்படுகின்றன. இந்த மணியின் நீளம் 5.6 செமீ, மொத்த விட்டம் 4 செமீ ஆக உள்ளது. அதில் இருந்த துளையின் விட்டம் 1.3 செமீ இதன் மேற்பரப்பு மெருகேற்றப்பட்டு மென்மையாக காணப்பட்டது. இருமுனைகளும் தட்டையாக உள்ளன.

---

4. சென்னை ஓபன் பட்டம் வென்ற லிண்டா

சென்னை ஓபன் WTA 250 டென்னிஸ் போட்டி ஒற்றையர் பிரிவில் செக் குடியரசைச் சேர்ந்த பதினேழு வயது வீராங்கனை லிண்டா ஃபுருவிர்டோவா சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

தமிழ்நாடு அரசு, டிஎன்டிஏ, WTA இணைந்து நடத்திய இந்தப் போட்டியின் இறுதிச்சுற்று நுங்கம்பாக்கம் எஸ்டிஏடி டென்னிஸ் மைதானத்தில் நடைபெற்றது. பரபரப்பாக நடைபெற்ற இறுதிச்சுற்றில் 4–6, 6–3, 6–4 என வெற்றி பெற்றார் லிண்டா. லிண்டா ஃபுருவிர்டோவா வென்ற முதல் WTA சாம்பியன் பட்டம் சென்னை ஓபன் ஆகும். சாம்பியன் பட்டம் வென்ற லிண்டாவுக்கு ₹26 இலட்சமும், 2ஆவது இடம் பெற்ற மகதா லினேட்டுக்கு ₹15.7 லட்சமும் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டன. சாம்பியன் பட்டம் வென்ற லிண்டா, தரவரிசையில் 74ஆவது இடத்துக்கு முன்னேறினார். இதன்மூலம் தரவரிசையில் இடம்பெற்றுள்ள முதல் 100 வீராங்கனைகளில் குறைந்த வயது கொண்ட வீராங்கனை என்கிற பெருமையை லிண்டா அடைந்துள்ளார்.

---

1. 'மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையம்' என்பது எந்த நடுவண் அமைச்சகத்தின் முனைவாகும்?

அ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑

ஆ. சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

இ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ. சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம்

✓ நடுவண் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் Dr வீரேந்திர குமார், ஒன்பது மாதிரி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையங்களைத் தொடங்கிவைத்தார். அவை மாதிரி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்களாக அண்மையில் மேம்படுத்தப்பட்டன. கடந்த 20 ஆண்டுகளாக மாற்றுத்திறனாளிகளுக்கு பயனுள்ள மறுவாழ்வுச் சேவைகளை வழங்குவதற்காக இம்மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் நிறுவப்பட்டன.

2. 'உலகளாவிய தூய ஆற்றல் நடவடிக்கைக்கான கருத்துக்களத்தை' நடத்தும் நகரம் எது?

அ. புது தில்லி

ஆ. பிட்ஸ்பர்க் ☑

இ. பாரிசு

ஈ. ரோம்

✓ நடுவண் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதேந்திர சிங், அமெரிக்காவின் பிட்ஸ்பர்க்கில் நடைபெறும் உலகளாவிய தூய ஆற்றல் நடவடிக்கைக்கான கருத்துக்களத்தில் பங்கேற்கும் இந்தியக்குழுவை வழிநடத்த உள்ளார். தூய ஆற்றலைக் கண்டுபிடித்தல் மற்றும் அதனை பயன்பாட்டுக்குக் கொண்டுவருதலை விரைவுபடுத்து –வதற்கான வழிகளைப்பற்றி விவாதிக்க 30 நாடுகளைச்சேர்ந்த அமைச்சர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள்.

3. NITI ஆயோக் போன்று மாநில அளவிலான அமைப்பை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ள மாநிலம் எது?

அ. கேரளா

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. தெலுங்கானா

ஈ. மேற்கு வங்காளம்

✓ மகாராஷ்டிர மாநில அரசு NITI ஆயோக் போன்று ஓர் அமைப்பை அமைக்க திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு துறைகளில் விரிவான தரவுப் பகுப்பாய்வு மற்றும் முடிவுகளை எடுப்பதற்கு இந்த அமைப்பு பொறுப்பாகும். NITI ஆயோக் இதேபோன்ற சிக்கல்களில் ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டு ஒரு கருவியை உருவாக்கியது. பல்வேறு துறைகளின் ஒன்றோடொன்று தொடர்புடைய தரவுகள் சிறந்த முறையில் முடிவெடுக்கும் செயல்முறைக்காக பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

4. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இலங்கைக்கு அதிக அளவில் இருதரப்பு கடன் வழங்கும் நாடு எது?

அ. சீனா

ஆ. இந்தியா ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. அமெரிக்கா

✓ 2022இன் 4 மாதங்களுக்குள் மொத்தமாக $968 மில்லியன் அமெரிக்க டாலர்களை கடனாக வழங்கியதன்மூலம், சீனாவை விஞ்சி இலங்கைக்கு மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்கும் நாடாக இந்தியா மாறியுள்ளது. 2017 முதல் 2021 வரையிலான ஐந்து ஆண்டுகளில் இலங்கைக்கு மிகப்பெரிய இருதரப்பு கடன் வழங்குபவராக சீனா தனது நிலையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கியானது 2021இல் $610 மில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கியதன்மூலம் கடந்த ஐந்து ஆண்டுகளில் மிகப்பெரிய பலதரப்பு கடன் வழங்குநராக மாறியது.

5. உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் நான்கு பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் யார்?

அ. வினேஷ் போகத்

ஆ. பஜ்ரங் புனியா ☑

இ. பபிதா குமாரி

ஈ. கீதா போகத்

✓ அண்மையில் பெல்கிரேடில் நடந்த உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் 65 கிகி பிரிவில் இந்தியாவின் பஜ்ரங் புனியா வெண்கலம் வென்றார். இந்தப் பதக்கத்தின்மூலம், உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் நான்கு பதக்கங்களை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை பஜ்ரங் புனியா பெற்றார். அவர், 2013இல் வெண்கலம், 2018இல் வெள்ளி மற்றும் 2019இல் வெண்கலம் வென்றார். மற்றொரு இந்திய மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகத் பெண்களுக்கான 53 கிகி பிரிவில் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றினார்.

6. நடப்பாண்டின் (2022) உலக தேங்காய் நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. Growing coconut for a better future and life ☑

ஆ. Nutritional benefits of Coconut

இ. Sustainable Nature of Coconut

ஈ. Consuming Coconut and Eradicating Malnutrition

✓ உலகம் முழுவதும் செப்.2ஆம் தேதியன்று உலக தேங்காய் நாளாக அனுசரிக்கப்படுகிறது. "Growing coconut for a better future and life" என்பது நடப்பாண்டு (2022) உலக தேங்காய் நாளுக்கானக் கருப்பொருளாகும். தேங்காய்கள் எல்லோராலும் விரும்பப்படும் மிகவும் பிரபலமான உணவுப்பொருளாகும். இந்த நாள், நம் அன்றாட வாழ்வில் தேங்காய்களின் முக்கியத்துவத்தையும் நலத்திற்கு அவை பயக்கும் நன்மைகளையும் எடுத்துக்காட்டுகிறது.

7. இராமன் மகசேசே விருதுகளுடன் தொடர்புடையது எது?

அ. இதழியல்

ஆ. சமூக சேவை ☑

இ. விளையாட்டு

ஈ. நாடகக்கலை

✓ 'இராமன் மகசேசே விருது' ஆசியாவின் நோபல் பரிசாகக் கருதப்படுகிறது. காலஞ்சென்ற பிலிப்பைன்ஸ் அதிபரின் பெயரால் இந்த விருது வழங்கப்படுகிறது. இது தன்னலமற்ற சேவைகளை மேற்கொள்ளும் ஆசியாவில் உள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. ஆசிய மக்களுக்காக தன்னலமற்ற சேவை புரிந்த உலகத்தின் வேவேறு பகுதியில் வாழ்ந்து வரும் நால்வருக்கு இந்த ஆண்டுக்கான (2022) விருது வழங்கப்பட்டுள்ளது.

8. அண்மையில், முழுமையாக டிஜிட்டல் வங்கி அம்சம் நிறைந்த மாவட்டமாக மாறிய ஆலப்புழை அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளம் ☑

இ. குஜராத்

ஈ. உத்தர பிரதேசம்

✓ கேரள மாநிலத்தின் ஐந்தாவது முழுமையாக டிஜிட்டல் வங்கி அம்சம் நிறைந்த மாவட்டமாக ஆலப்புழை மாறியுள்ளது. இதனை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அறிவித்துள்ளது. இந்த முனைவின் ஒருபகுதியாக, மாவட்டத்தில் உள்ள 29 வங்கிகளின் 26 இலட்சம் வங்கிக்கணக்குள் கடன்–பற்றட்டை, இணையவழி வங்கிச்சேவை, திறன்பேசிவழி வங்கிச்சேவை, யுபிஐபோன்ற ஏதேனும் ஓர் எண்ம சேவையுடன் இணைக்கப்பட்டுள்ளது. திருச்சூர், கோட்டயம், பாலக்காடு மற்றும் காசர்கோடு ஆகிய இடங்களில் வங்கிச்சேவைகள் ஏற்கனவே எண்மமயமாக்கப்பட்டுள்ளன.

9. SEBI–இன் மறுசீரமைக்கப்பட்ட இணையவெளிப்பாதுகாப்பு தொடர்பான உயர்மட்டக்குழுவின் தலைவர் (2022 செப்டம்பர்) யார்?

அ. நவீன் குமார் சிங் ☑

ஆ. அஜை தியாகி

இ. நந்தன் நிலேகனி

ஈ. சுபாஷ் சந்திர கர்க்

✓ இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) இணையவெளிப்பாதுகாப்பு தொடர்பான உயர்மட்டக்குழுவை மறுசீரமைத்துள்ளது; தற்போது 6 உறுப்பினர்களைக்கொண்ட இக்குழு, தேசிய முதன்மை தகவல் உட்கட்டமைப்பு பாதுகாப்பு மையத்தின் (NCIIPC) தலைமை இயக்குநர், நவீன் குமார் சிங் தலைமையில் இருக்கும். SEBI மற்றும் மூலதனச்சந்தைக்கான இணையவெளிப் பாதுகாப்பு முனைவுகளை மேற்பார்வையிடுதல் மற்றும் வழிகாட்டுதல் ஆகிய பணிகள் இந்தக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

10. 2022ஆம் ஆண்டின் சூப்பர் புயல் என்றழைக்கப்படும் வலுவான வெப்பமண்டலப் புயலான, 'ஹின்னம்நோர்' தாக்கிய நாடு எது?

அ. சீனா

ஆ. பிலிப்பைன்ஸ்

இ. ஜப்பான் ☑

ஈ. நியூசிலாந்து



✓ 2022ஆம் ஆண்டின் வலுவான வெப்பமண்டலப் புயலான சூப்பர் புயல், 'ஹின்னம்நோர்' என்று பெயரிடப்பட்டது. இந்தப் புயலின் காரணமாக மேலை பசிபிக் பெருங்கடலில் மணிக்கு 241 கிமீட்டர் வேகத்தில் காற்று வீசுகிறது. இது வகை–5 புயலாக வகைப்படுத்தப்பட்டது; இது அளவில் மிகவுரிய வகைப்பாடாகும். இச்சூறாவளி ஜப்பான் தீவுகளை நோக்கி நகர்வதால் மேலும் வலுவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பானின் வானிலை ஆய்வு நிறுவனம் வெள்ளம், கனமழை, நிலச்சரிவு மற்றும் இடியுடன் கூடிய மழை உள்ளிட்ட எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சென்னையில் உள்ள நடுவண் தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் தோல்துறையின் திறன்மேம்பாட்டுக்கான ஸ்கேல் செயலியை தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்

தோல் தொழிற் துறையின் வேலைவாய்ப்புத் தேவைகள், திறன்மேம்பாடு, கற்றல், மதிப்பீடு ஆகியவற்றுக்கு ஓரிடத் தேர்வு வழங்கும் தோல்துறை ஊழியர்களுக்கான திறன் மதிப்பீட்டுச் சான்றிதழ் (ஸ்கேல்) ஸ்டுடியோ செயலியை சென்னையில் உள்ள CSIR–CLRI நிகழ்ச்சியில், மத்திய கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

தோல் தொழிற்துறையில் பயிற்சி பெறுவோருக்கு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தளிப்பதற்காக தோல் திறன் துறை கவுன்சில் இச்செயலியை உருவாக்கியுள்ளது. இவ்வமைப்பின் அலுவலகத்திலிருந்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்டுடியோமூலம் இணையதளம் வழியாக வகுப்புகள் நடத்தப்படும். தோல் தொழிற்துறையில் ஆர்வமுள்ள அனைத்து வயதினரும், இந்த ஸ்கேல் செயலியை பயன்படுத்திக்கொள்ளலாம்.

---

2. புவிசார் குறியீடுபெற்ற மதுரை மல்லி மற்றும் பாரம்பரிய மலர்கள் மஸ்கட் நகருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன

புவிசார் குறியீடுபெற்ற பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும் முயற்சியாக மதுரை மல்லி மற்றும் நிலக்கோட்டை, திண்டுக்கல், மதுரைக்கருகே உள்ள பகுதிகளைச்சேர்ந்த பாரம்பரிய மலர்களான முல்லை, பிச்சிப்பூ, பட்டன் ரோஜா, சாமந்தி, மரிக்கொழுந்து, துளசி, தாமரை, பன்னீர் ரோஜா, அல்லி ஆகியவை இன்று மஸ்கட் நகருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. நடுவணரசின் வேளாண் & பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் இதனை மேற்கொண்டது.

---

3. மருத்துவ சிகிச்சை முறைகள் பரிமாற்றம்: தமிழ்நாடு–மேகாலயா இடையே ஒப்பந்தம்

மருத்துவ சிகிச்சை முறைகளை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு, மேகாலயா இடையே சென்னையில் கையொப்பமானது.

மேகாலய மாநில சுகாதாரக் குழுவினர் தமிழ்நாட்டிலுள்ள சிறப்பு மருத்துவ கட்டமைப்புகள், செயல்பாடுகளை கண்டு அறிந்து, சிறப்பான மருத்துவத் திட்டங்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு, அதனை அவர்களது மாநிலத்தில் செயல்படுத்தவுள்ளனர். குறிப்பாக, தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம்மூலம் வழங்கப்படும் சேவைகள், அதன் பல்வேறு கட்டமைப்புகள், மருந்துக்கிடங்குகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை அறிந்து அதை மேகாலயா மாநிலத்தில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

'மக்களைத்தேடி மருத்துவம்' திட்டம், 'இன்னுயிர் காப்போம் – நம்மைக்காக்கும் 48' ஆகிய திட்டங்களின் செயல்பாட்டையும், தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களின் செயல்பாடுகளையும் பார்வையிடவுள்ளனர்.

மேகாலய மாநிலத்தில் மலைவாழ் மக்கள் அதிகமுள்ளனர். அந்த மாநிலத்தில் இயற்கை வளங்கள் நிறைந்துள்ளன. தமிழ்நாடு, மேகாலய மாநிலங்களிடையே மருத்துவ முறைகளை பரிமாறிக்கொள்வதற்கும், மலைவாழ் மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

---

4. பள்ளிக்குழந்தைகளுக்கு காலை உணவு: செயலிமூலம் கண்காணிப்பு

பள்ளிக்குழந்தைகளுக்கு காலை உணவு முறையாக விநியோகிக்கப்படுகிறதா? என்பது குறித்து செயலிமூலம் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். 1 முதல் 5ஆம் வகுப்பு வரையுள்ள அரசுப் பள்ளிக்குழந்தைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் கடந்த 15–ஆம் தேதி தொடங்கி வைத்தார். 'சிஎம்.13 எப் எஸ்' என்ற செயலிமூலம் அதிகாரிகள் கண்காணிக்கிறார்கள்.

5. நிறைவு பெறுகிறது தென்மேற்குப் பருவமழை: வானிலை ஆய்வு மையம்

இரண்டு நாள்களில் தென்மேற்குப் பருவமழை விடைபெறுவது தொடங்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜூன் 1 முதல் செப்டம்பர் 30 வரை தென்மேற்குப்பருவமழை காலமாக உள்ளது. இந்த ஆண்டு ஜூன் 1 முதல் செப்.19 வரை இந்தியாவில் 872.7 மிமீ மழை பெய்துள்ளது. இது வழக்கத்தைவிட 7% அதிகம். எனினும் அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்படும் உத்தர பிரதேசம், பிகார் உட்பட 8 மாநிலங்களில் போதிய அளவு மழைபெய்யவில்லை. இந்நிலையில், வடமேற்கு இந்தியா மற்றும் குஜராத் மாநிலம் கட்ச் பகுதிகளில் இருந்து இரண்டு நாள்களில் தென்மேற்குப்பருவமழை நிறைவு பெறுவதற்கு சாதகமான சூழல் உருவாகி வருகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

1. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'மாயா' என்பது கீழ்க்காணும் எந்த விலங்கின் முதல் குளோனிங் ஆகும்?

அ. காட்டு ஆர்க்டிக் ஓநாய் ☑

ஆ. ஒற்றைக்கொம்பு காண்டாமிருகம்

இ. சோலைமந்தி

ஈ. கானமயில்

- ✓ சீனாவைச் சேர்ந்த சினோஜீன் என்ற உயிரித்தொழில்நுட்ப நிறுவனம், ஆர்க்டிக் ஓநாய் ஒன்றை குளோனிங்மூலம் வெற்றிகரமாக உருவாக்கி சாதனை படைத்துள்ளது. இந்த ஆர்க்டிக் ஓநாய்க்கு, 'மாயா' என்று பெயரிடப்பட்டுள்ளது. உலகில் குளோனிங் முறையில் பிறந்த முதல் ஆர்க்டிக் ஓநாய் இதுவாகும். அரிதான மற்றும் அழிந்துவரும் உயிர் இனங்களைப் பாதுகாப்பதில், 'குளோனிங்' முறை ஒரு சாதனையாக கருதப்படுகிறது.
- ✓ 'மாயா'வை உருவாக்க பயன்படுத்தப்பட்ட அடிப்படை செல் ஒரு பெண் ஆர்க்டிக் ஓநாயின் தோல் மாதிரியிலிருந்து எடுக்கப்பட்டது. அது வளரத் தேவையான முட்டை ஒரு பெண் நாயிடமிருந்து பெறப்பட்டது. அதன் வாடகைத்தாயாக ஒரு பீகிள் இன நாய் விளங்கியது.

2. 'CM தா ஹைசி' (முதலமைச்சருக்குத் தெரிவிக்கவும்) என்ற இணையதளத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. அஸ்ஸாம்

இ. மணிப்பூர் ☑

ஈ. ஒடிஸா

- ✓ மணிப்பூர் மாநில முதலமைச்சர் N பிரேன் சிங் சமீபத்தில், 'CM Da Haisi' (முதலமைச்சருக்குத் தெரிவிக்கவும்) என்ற இணையதளத்தைத் தொடங்கி வைத்தார். பொதுமக்களிடமிருந்து புகார்கள் மற்றும் குறைகளைப் பெறுவதற்கு இது எண்ணுகிறது. புகார்தாரர்கள் தங்கள் புகார்களின் நிலையைச் சரிபார்க்கலாம். முதலமைச்சர் செயலகத்தில் உள்ள பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஊழல் தடுப்புப்பிரிவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் கூட்டிணைந்து பணியாற்ற இந்த இணையதளத்தைப் பயன்படுத்தும்.

3. 'அஸ்தானா' என்பது எந்த நாட்டின் புதிய தலைநகரமாகும்?

அ. துர்க்மெனிஸ்தான்

ஆ. கஜகஸ்தான் ☑

இ. ஆப்கானிஸ்தான்

ஈ. உஸ்பெகிஸ்தான்

- ✓ கஜகஸ்தானின் அதிபர் காசிம்–ஜோமார்ட் டோகாயேவ், அதிபரின் பதவிக்காலத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தில் கையெழுத்திட்டார்; அதோடு நாட்டின் தலைநகரத்திற்கு அதன் பழைய பெயரான, 'அஸ்தானா'வைச் சூட்டினார். இம்மசோதா அதிபரின் அதிகாரத்தை ஐந்திலிருந்து 7 ஆண்டுகளாக நீட்டிக்கிறது. எந்தவொரு அதிபரும் இரண்டாம் முறையாக பதவிக்குப் போட்டியிடுவதையும் இது தடுக்கிறது. இம்மசோதா தலைநகரத்தின் பெயரை, 'அஸ்தானா' என்று மீண்டும் நிறுவியுள்ளது. அஸ்தானாவின் பெயர் கடந்த 2019ஆம் ஆண்டில் நூர்–சுல்தான் என மாற்றப்பட்டது; அது, அப்போதைய அதிபர் நர்சுல்தான் நசர்பாயேவின் நினைவாக மாற்றம் செய்யப்பட்டது.

4. இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களின் முதல் முத்தரப்பு வெளியுறவு அமைச்சர்களின் கூட்டத்தை கீழ்க்காணும் எந்த நகரத்தில் நடத்தின?

அ. புது தில்லி

ஆ. துபாய்

இ. நியூயார்க் ☑

ஈ. பாரிஸ்

✓ இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்களது முதல் முத்தரப்பு வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தை நியூயார்க்கில் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத்தொடரில் நடத்தின. உத்திசார் பங்காளர்கள் மற்றும் UNSC உறுப்பினர்களுக்கு இடையே செயலில் கருத்துப்பரிமாற்றத்தை மையமாகக்கொண்டு, அரசியல் புரிவதற்கான சமகால வழிகள்குறித்து அமைச்சர்கள் விவாதித்தனர். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைத்தலைவரைச் சந்தித்து, உலகம் முழுவதும் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் இருதரப்புச் சந்திப்புகளை நடத்தினார்.

5. 2022ஆம் ஆண்டில், 'குளோபல் ஃபின்டெக் மாநாட்டை' நடத்தும் இந்திய நகரம் எது?

அ. புது தில்லி

ஆ. அகமதாபாத்

இ. மும்பை ☑

ஈ. பெங்களூரு

✓ இந்திய தேசிய கொடுப்பனவுக் கழகம் (NPCI), இந்திய தேசிய கொடுப்பனவுக் கவுன்சில் (PCI) மற்றும் ஃபின்டெக் கன்வர்ஜென்ஸ் கவுன்சில் ஆகியவற்றால் குளோபல் ஃபின்டெக் ஃபெஸ்ட் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். நிலையான நிதிச்சூழலைக் கட்டியெழுப்புவதற்கு பசுமை நிதியத்தில் உள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நடுவண் நிதியமைச்சர் நிதியியல் தொழில்நுட்பத் துறைக்கு அழைப்புவிடுத்தார்.

6. 2022ஆம் ஆண்டில், இந்தியாவில், 'தாய் வர்த்தக கண்காட்சி' நடைபெற்ற இடம் எது?

அ. மும்பை

ஆ. ஹைதராபாத் ☑

இ. மைசூர்

ஈ. வாரணாசி

✓ தெலுங்கானா மற்றும் தாய்லாந்து இடையே வலுவான உறவுகளை உருவாக்கும் நோக்கத்துடன், சென்னையில் உள்ள தாய்லாந்து வர்த்தக மையம் ஐதராபாத்தில் தனது முதல் வர்த்தக கண்காட்சியைத் தொடங்கியது. வர்த்தக கண்காட்சி, தாய்லாந்து நிறுவனங்களுக்கும் ஹைதராபாத் வணிக சமூகத்திற்கும் இடையே வணிக உறவுகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தும். இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிக்கும் விதமாக தெலுங்கானா மாநில அரசுக்கும் தாய்லாந்தின் வர்த்தக அமைச்சகத்துக்கும் இடையே ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, பிதர்கனிகா தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?

அ. மேற்கு வங்கம் **ஆ. ஒடிஸா ☑**

இ. பீகார் ஈ. ஆந்திர பிரதேசம்

✓ பிதர்கனிகா தேசியப்பூங்காவானது ஒடிஸா மாநிலத்தில் அமைந்துள்ளது. இது பல்வேறு அரிய மற்றும் அழிந்துவரும் வனவுயிரிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சமீபத்தில் பிதர்கனிகா தேசியப்பூங்காவில், 122 கூடுகளில் இருந்து 3,700 உவர்நீர் முதலைகள் பிறந்தன. அறிக்கையின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும், 84 கூடுகளில் இருந்து சுமார் 2,500 முதலைகள் பிறந்தன.

8. வோஸ்டாக் – 2022 என்ற பலதரப்புப் பயிற்சியை நடத்தும் நாடு எது?

அ. சீனா

ஆ. ரஷ்யா ☑

இ. அமெரிக்கா

ஈ. ஆஸ்திரேலியா

✓ பலதரப்பு உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் பயிற்சி, 'வோஸ்டாக் – 2022' ரஷ்யாவில் தொடங்கியுள்ளது. இப்பயிற்சியானது பங்கேற்கும் அனைத்து இராணுவக்குழுக்கள் மற்றும் பார்வையாளர்களை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 7/8 கோர்க்கா ரைபிள்ஸ் துருப்புகளை உள்ளடக்கிய இந்திய இராணுவக்குழு, கூட்டு களப்பயிற்சிகள் மற்றும் போர்ப் பயிற்சிகள் உள்ளிட்ட கூட்டுப்பயிற்சிகளை மேற்கொள்கிறது.

9. திபெத்திய மக்களாட்சி நாள் கொண்டாடப்படும் தர்மஷாலா அமைந்துள்ள இந்திய மாநிலம்/UT எது?

அ. அருணாச்சல பிரதேசம்

ஆ. ஹிமாச்சல பிரதேசம் ☑

இ. சிக்கிம்

ஈ. மணிப்பூர்

✓ திபெத்திய மக்களாட்சி நாளானது செப்டம்பர்.2 அன்று தர்மசாலாவில், புறநிலை அரசாங்கமாக திபெத்திய அரசாங்கம் ஆனதின் தொடக்கத்தைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது. தர்மசாலாவில் உள்ள புறநிலை திபெத்திய அரசின் நடுவண் திபெத்திய நிர்வாகம், உலகம் முழுவதும் உள்ள ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகளை நிர்வகித்து வருகிறது. இது தலாய் லாமா மற்றும் நாடுகடத்தப்பட்ட அனைத்து திபெத்தியர்களின் இல்லமாக விளங்குகிறது. இந்த ஆண்டு, திபெத்திய மக்களாட்சி நாளின் 62ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

10. கரிமமற்ற அணுவாற்றலிலிருந்து தயாரிக்கப்படும் ஹைட்ரஜனுக்குப் பெயர் என்ன?

அ. பச்சை ஹைட்ரஜன்

ஆ. வெள்ளை ஹைட்ரஜன்

இ. இளஞ்சிவப்பு ஹைட்ரஜன் ☑

ஈ. ஆரஞ்சு ஹைட்ரஜன்

✓ கரிமமற்ற அணுவாற்றலிலிருந்து உற்பத்தி செய்யப்படும் கரிமமற்ற ஹைட்ரஜன் இளஞ்சிவப்பு (பிங்க்) ஹைட்ரஜன் என்று அழைக்கப்படுகிறது. இளஞ்சிவப்பு ஹைட்ரஜனை மின்னாற்பகுப்பு மூலமாகவும் தயாரிக்கலாம்; அவ்வாறு தயாரிப்பதற்கு அணுமின் நிலையங்கள்மூலம் மின்சாரம் வழங்கப்பட வேண்டும். பச்சை ஹைட்ரஜனை உற்பத்தி செய்ய, மின்பகுப்பிகள் வழங்கப்பட்டு, காற்றாலை அல்லது சூரிய ஆற்றல்மூலம் மின்சாரம் வழங்கப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. சரக்குப் போக்குவரத்து சேவைகளில் அதிக செயல்திறனை ஊக்குவிக்கும் நடுவண் சரக்குப் போக்குவரத்து கொள்கைக்கு நடுவண் அமைச்சரவை ஒப்புதல்

பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவை தேசிய சரக்குப்போக்குவரத்து கொள்கைக்கு ஒப்புதலளித்துள்ளது. இந்தக் கொள்கையானது சரக்குப் போக்குவரத்துத் துறைக்கான கட்டமைப்பை வகுத்துள்ளது. இந்தக் கொள்கை, பிரதமரின் விரைவு சக்தி தேசிய பெருந்திட்டத்தை செயல்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இக்கொள்கையின்மூலம் சரக்குப் போக்குவரத்து மற்றும் மனித வளங்களை ஒழுங்குபடுத்தும் செயல்முறைகள், ஒழுங்குமுறை கட்டமைப்பு, திறன்மேம்பாடு ஆகியவற்றின்மூலம் செயல்திறனைக் கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. விரைவுபடுத்தப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்காக தொழில்நுட்ப ரீதியாக செயல்படுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த, செலவு–திறனுள்ள, நெகிழ்ச்சியான, நிலையான மற்றும் நம்பகமான சரக்குப் போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய அளவுகோல்களுடன் ஒப்பிடக்கூடிய வகையில் இந்தியாவில் சரக்குப் போக்குவரத்தில் கட்டணத்தை குறைப்பது, செயல்திறன் குறியீட்டு தரவரிசையை மேம்படுத்தி, 2030–க்குள் முதல் 25 நாடுகளில் ஒன்றாக கொண்டுவருவது, திறமையான சரக்குப்போக்குவரத்து சுற்றுச்சூழல் அமைப்புக்கான தரவு சார்ந்த பொறிமுறையை உருவாக்குவது ஆகியவை இதன் நோக்கமாகும்.

தேசிய சரக்குப்போக்குவரத்து கொள்கை, இந்திய அரசின் பல்வேறு அமைச்சகங்கள்/துறைகள், தொழிற்துறை பங்குதாரர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் பலசுற்று ஆலோசனைகள் நடத்தப்பட்டு, உலகளாவிய சிறந்த நடைமுறைகளை அறிந்துகொள்ளும் ஓர் ஆலோசனை செயல்முறையின்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை செயல்பாட்டுக்கு வரும்போது, குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள், விவசாயிகள் ஆகியோருக்கு பயனளிக்கும்.

---

2. இந்திய பொருளாதார வளர்ச்சி 7%–க்கும் அதிகமாக இருக்கும்: தலைமைப் பொருளாதார ஆலோசகர்

நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும் என்று நடுவணரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அனந்த நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: COVID பரவல், ரஷ்யா–உக்ரைன் இடையிலான போர் ஆகியவற்றால் ஏற்பட்டுள்ள பின்விளைவுகளை உலகம் எதிர்கொண்டு வருகிறது. இவை வளர்ச்சியைப் பாதிக்கின்றன. இந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில், நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 8 முதல் 8.5 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 சதவீதமாக இருக்கும் என்று ரிசர்வ் வங்கி மதிப்பிட்டுள்ளது. விரைவில் இதன் மறுமதிப்பீடு இறங்குமுகமாக இருக்கும் என்று சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் பொருளாதார வளர்ச்சிகுறித்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு தற்போது சரிந்துள்ளது. அதன்படி, இந்த நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும். இத்தசாப்தத்தின் (10 ஆண்டுகள்) எஞ்சிய ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சியை 7 சதவீதமாக தக்கவைக்கும் வகையில், இந்தியா நல்ல நிலையில் உள்ளது என்றார் அவர்.

---

3. ஆஸ்கருக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரை, 'செல்லோ ஷோ'

ஆஸ்கர் விருதுக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரையாக குஜராத்தி மொழியின், 'செல்லோ ஷோ' என்ற திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

95ஆவது ஆஸ்கர் விழா 2023 மார்ச்.12–ஆம் தேதி அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரத்தில் நடைபெறவுள்ளது. அந்த விழாவுக்காக இந்தியா சார்பில் அனுப்பப்படும் திரைப்படத்தைத் தேர்ந்தெடுக்கும் நடவடிக்கைகளை இந்திய

திரைப்படக் கூட்டமைப்பு மேற்கொண்டு வந்தது. அக்கூட்டமைப்பின் பதினேழு உறுப்பினர்களைக்கொண்ட குழு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது. இந்நிலையில், ஆஸ்கர் விழாவுக்கான இந்தியாவின் அதிகாரபூர்வ பரிந்துரையாக 'செல்லோ ஷோ' திரைப்படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக FFI தலைவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "பல்வேறு மொழிகளைச் சேர்ந்த 13 திரைப்படங்கள் ஆய்வுசெய்யப்பட்டன. பிரம்மாஸ்த்ரா, தி காஷ்மீர் ஃபைல்ஸ், அனேக், ஜுண்ட், பதாய் ஹோ, ராக்கெட்ரி ஆகிய ஹிந்தி திரைப்படங்களும், இரவின் நிழல் (தமிழ்), RRR (தெலுங்கு), அபராஜிதோ (வங்கமொழி), செல்லோ ஷோ (குஜராத்தி) உள்ளிட்டவையும் ஆய்வுசெய்யப்பட்டன. இறுதியில் 'செல்லோ ஷோ' திரைப்படத்தை அதிகாரபூர்வமாகப் பரிந்துரைக்க குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக ஒப்புதல் தெரிவித்தனர்" என்றார்.

படத்தின் கதைக்களம்:

குஜராத்தின் கிராமப்புறத்தில் வசிக்கும் 9 வயது சிறுவன், திரைப்படங்கள் மீது ஆர்வம்கொண்டு திரையரங்கில் உள்ள ஊழியர்களுக்குக் குறைந்த பணத்தைக் கொடுத்து புரொஜக்ஷன் அறையில் இருந்து திரைப்படங்களைக் கண்டு கோடைக்காலத்தைக் கழிப்பதை அடிப்படையாகக்கொண்டு, 'செல்லோ ஷோ' படம் எடுக்கப்பட்டுள்ளது. பான் நளின் இப்படத்தை இயக்கியுள்ளார். சித்தார்த் ராய் கபூர் தயாரித்துள்ளார். அப்படம் அக்.14ஆம் தேதியன்று திரைக்கு வரவுள்ளது.

---

1. IHCI என்ற உயர் இரத்தவழுத்தக் கட்டுப்பாட்டு முனைவு தொடங்கப்பட்ட நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. இந்தியா ☑

இ. இந்தோனேசியா

ஈ. வங்காளதேசம்

✓ தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் இந்திய உயர் இரத்தவழுத்தக் கட்டுப்பாட்டு முனைவுமூலம் மேற்கொள்ளப்படும் பேரளவிலான திட்டத்திற்காக இந்தியாவிற்கு ஐக்கிய நாடுகள் விருது கிடைத்துள்ளது. 'இந்திய உயர் இரத்தவழுத்த கட்டுப்பாட்டு முனைவு' என்பது இந்தியாவின் தேசிய சுகாதாரத் திட்டத்தின்கீழ் செயலில் இருக்கும் ஒரு முனைவு ஆகும். இது நடுவண் சுகாதார அமைச்சகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR), மாநில அரசுகள் மற்றும் உலக சுகாதார நிறுவனம்–இந்தியா ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியாகும்.

2. 'குற்றவியல் நடைமுறை (அடையாளம்)' மசோதாவுடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகம்

ஆ. உள்துறை அமைச்சகம் ☑

இ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்

✓ விசாரணைக் காவலர்கள் கைதிகளின் பயோமெட்ரிக் விவரங்களைச் சேகரிக்க உதவும் குற்றவியல் நடைமுறை (அடையாளம்) மசோதா, 2022–ஐ நடுவணரசு அறிவித்துள்ளது. இந்தச் சட்டம், 2022 ஏப்ரலில் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. ஒரு குற்றத்தின் விசாரணையின்போது ஒரு நபரின் அளவீடுகள் அல்லது நிழற்படங்களை ஆவணப்படுத்த உத்தரவிட இந்தச் சட்டம் ஒரு நீதியரசருக்கு அதிகாரமளிக்கிறது.

3. சமூக பங்குச் சந்தைக்கான விரிவான கட்டமைப்பை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

அ. RBI

ஆ. SEBI ☑

இ. NITI ஆயோக்

ஈ. நடுவண் நிதியமைச்சகம்

✓ இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியமானது (SEBI) சமூக பங்குச்சந்தைக்கான விரிவான கட்டமைப்பை வெளியிட்டுள்ளது. இது ஒரு இலாபநோக்கற்ற நிறுவனத்திற்கான பதிவு மற்றும் ஆவணங்களை வெளிப்படுத்தல் தேவைகளுக்கான குறைந்தபட்சத் தேவைகளைக் குறிப்பிடுகிறது. மூலதனச் சந்தை ஒழுங்குமுறை அமைப்பான SEBI, சமூக பங்குச்சந்தைக்கான விதிகளை சமூக நிறுவனங்களுக்கு நிதி திரட்ட கூடுதல் வழியை வழங்குவதற்கு முன்னரே அறிவித்திருந்தது.

4. அண்மையில் வெளியிடப்பட்ட SCALE செயலி, கீழ்க்காணும் எந்தத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டுக்கான தீர்வுகளை வழங்குகிறது?

அ. ஜவுளி

ஆ. தானியங்கி

இ. தோல் ☑

ஈ. மின்னணுவியல்

✓ தோல் தொழிற்துறையின் வேலைவாய்ப்புத் தேவைகள், திறன்மேம்பாடு, கற்றல், மதிப்பீடு ஆகியவற்றுக்கு ஓரிடத் தேர்வு வழங்கும் தோல் துறை ஊழியர்களுக்கான திறன் மதிப்பீட்டு சான்றிதழ் (SCALE (Skill Certification Assessment for Leather Employees)) செயலியை சென்னையில் உள்ள CSIR– CLRI நிகழ்வில், நடுவண் கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார். தோல் தொழில் துறையில் பயிற்சி பெறுவோருக்கு வடிவமைத்தல் மற்றும் தயாரித்தளிப்பதற்காக தோல் திறன் துறை கவுன்சில், இந்தச் செயலியை உருவாக்கியுள்ளது.

5. அண்மைய ஆசிய வளர்ச்சிக்கண்ணோட்டத்தின் புதுப்பிப்பின்படி, 2022–23–க்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு என்ன?

அ. 8.2%

ஆ. 7.6%

இ. 7.0% ☑

ஈ. 6.8%

✓ ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) அண்மையில் அதன் ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டத்தின் மேம்பட்ட பதிப்பை வெளியிட்டது. அந்த அறிக்கையின்படி, 2022–23–க்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக் கணிப்பு ஏப்ரல் மாதத்தில் மதிப்பிடப்பட்ட 7.5%இலிருந்து 7%ஆக குறைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பணவீக்கம் எதிர்பார்த்ததை விட நிலையானதாக மாறியுள்ளது; மேலும், நாணயக் கொள்கையானது நுகர்வோரின் வாங்கும் ஆற்றலை சிதைக்கும் விதமாக உள்ளது என்று அவ்வறிக்கை கூறுகிறது.

6. எந்த நாட்டில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமைமீறல்கள் குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் (UN) அவை வெளியிட்டுள்ளது?

அ. இந்தியா

ஆ. சீனா ☑

இ. அமெரிக்கா

ஈ. ஆஸ்திரேலியா

✓ சீனா தனது வடமேற்கு ஜின்ஜியாங் பிராந்தியத்தில் உய்குர் மற்றும் பிற இசுலாமிய இன சிறுபான்மையினரை குறிவைத்து மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக தெரிவித்த ஐக்கிய நாடுகள் (UN) அவையின் அறிக்கைக்கு பதிலளித்துள்ளது. பல்லாண்டுகளாக செயல்பாட்டில் உள்ள இந்த அறிக்கை அண்மையில்தான் வெளியிடப்பட்டது. 1 மில்லியனுக்கும் அதிகமான சிறுபான்மை இன உறுப்பினர்கள் மாற்று கல்வி நிலையங்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்டதாக அவ்வறிக்கை கூறுகிறது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஜிக்யாசா 2.0' என்ற நிகழ்வுடன் தொடர்புடைய துறை எது?

அ. நிதியியல்

ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑

இ. விளையாட்டு

ஈ. இசை

✓ ஜிக்யாசா 2.0 திட்டத்தின்கீழ், 'புதுப்பிக்கத்தக்க எரிபொருளுக்கான ஜிக்யாசா திட்டம்' குவாலியரில் உள்ள சிந்தியா கன்யா வித்யாலயா பள்ளி மாணாக்கருக்காக டேராடூனில் அமைந்துள்ள CSIR–இந்திய பெட்ரோலிய நிறுவனத்தில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்யப்பட்டது. உணவுக்குப் பயன்படாத தாவர எண்ணெய்கள், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் & நெகிழிக்கழிவுகளை பல்வேறு வகையான எரிபொருட்களாக பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை வெளிக்கொணர்வதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

8. அண்மையில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மதுவின் விற்பனைக்கு அனுமதி தந்த இந்திய மாநிலம் எது?

அ. குஜராத்

ஆ. மிசோரம் ☑

இ. பஞ்சாப்

ஈ. சிக்கிம்

✓ மிசோரம் மாநில அமைச்சரவை உள்நாட்டில் விளையும் திராட்சையை தேறலாக பதப்படுத்தி சந்தையில் கட்டற்ற முறையில் விற்க அனுமதி தந்துள்ளது. இயற்கை திராட்சை முக்கியமாக கிழக்கு மிசோரமில் உள்ள சாம்பை மற்றும் ஹனாஹலான் பகுதிகளில் வளர்க்கப்படுகிறது. மிசோரம் மது (தடை) வரைவு விதிகள், 2022 ஆனது மாநிலத்தில் கண்டிப்பான முறையில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று அம்மாநில முதலமைச்சர் அறிவித்தார்.

9. கிசான் கடனட்டையை (KCC) எண்மமயமாக்குவதற்கான சோதனைத் திட்டங்களை, இந்திய ரிசர்வ் வங்கி, கீழ்க்காணும் எந்தெந்த மாநிலங்களில் செயல்படுத்தவுள்ளது?

அ. தமிழ்நாடு மற்றும் கேரளா

ஆ. மத்திய பிரதேசம் மற்றும் உத்தர பிரதேசம்

இ. தமிழ்நாடு மற்றும் மத்திய பிரதேசம் ☑

ஈ. மத்திய பிரதேசம் மற்றும் கேரளா

✓ கிசான் கடனட்டைகளை (KCC) எண்மமயமாக்குவதற்கான சோதனைத் திட்டங்களை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) இம்மாதம் முதல் தமிழ்நாடு மற்றும் மத்தியபிரதேசத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தும். இந்தத் திட்டத்தை ரிசர்வ் வங்கி புத்தாக்க மையம் (RBIH) உருவாக்குகிறது. இது KCC அடிப்படையிலான கடனளிப்பை மிகவும் திறமையானதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் செலவுகளைக் குறைப்பதன்மூலம் ஊர்ப்புற மக்களிடையே கடனோட்டத்தை இது மேம்படுத்துகிறது.

10. இந்தியாவில் தேசிய ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிற தேதி எது?

அ. செப்டம்பர்.05 ☑

ஆ. செப்டம்பர்.10

இ. செப்டம்பர்.15

ஈ. செப்டம்பர்.20

✓ ஒவ்வோர் ஆண்டும் செப்.5ஆம் தேதி இந்தியா முழுவதும் ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிறது. இது, இந்தியாவின் முதல் குடியரசுத்துணைத்தலைவரும், இந்தியாவின் இரண்டாவது குடியரசுத்தலைவருமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறது. அவர், 1888ஆம் ஆண்டு செப்டம்பர்.5ஆம் தேதி பிறந்தார். ஆசிரியர் நாள் முதன்முதலில் 1962ஆம் ஆண்டு அனுசரிக்கப்பட்டது. உலக ஆசிரியர் நாள், சர்வதேச ஆசிரியர் நாள் என்றும் அழைக்கப்படுகிறது; அது ஆண்டுதோறும் அக்.5 அன்று கொண்டாடப்படுகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. செப்.28 முதல் கம்போடியாவில் உலகத் திருக்குறள் மாநாடு

கம்போடியா நாட்டில் செப்.28 முதல் அக்.3ஆம் தேதி வரை உலகத் திருக்குறள் மாநாடு நடக்கவிருக்கிறது. இந்த மாநாட்டையொட்டி, செப்.29ஆம் தேதி அங்கோர் நகரத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்படுகிறது. கம்போடியா நாட்டின் கெமர் மொழியில் திருக்கு வெளியிடப்படுகிறது.

---

2. இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பகம்: தமிழ்நாடு அரசு அறிவிக்கை

இந்தியாவிலேயே முதல் கடற்பசு பாதுகாப்பகம், தமிழக கடற்கரைப் பகுதியில் (பாக் விரிகுடா) 448 சதுர கிமீட்டரில் அமையவுள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்ட உத்தரவு: தமிழக கடலோரப் பகுதிகளில் அழிந்துவரும் நிலையிலுள்ள, மிக அரிதான கடற்பசு இனத்தையும், அதன் கடல் வாழ்விடங்களையும் பாதுகாக்கும் பொருட்டு, மன்னார் வளைகுடா, பாக் விரிகுடா பகுதியில் கடற்பசு பாதுகாப்பகம் அமைக்கப்படும் என சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், 448 சதுர கிமீ பரப்பில் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளை உள்ளடக்கிய பாக் விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அறிவித்து தமிழ்நாடு அரசு அறிவிக்கை செய்துள்ளது.

கடற்பசுவின் சிறப்பு: உலகின் மிகப்பெரிய தாவர வகை கடல் பாலூட்டிகளான கடற்பசுக்கள், கடற்புற்களை உண்டு வளர்ந்து வருகின்றன. கடற்பசு, இனங்களை பாதுகாப்பதனால், கடல் பகுதிகளுக்கு அடியில் உள்ள கடற்புற்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், வளிமண்டல கார்பனை அதிகளவில் நிலைப்படுத்தவும் உதவி செய்கிறது. கடற்புல் படுகைகள் வணிகரீதியாக மதிப்புமிக்க பல மீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களுக்கு இனப்பெருக்கம் செய்ய ஏதுவாகவும், உணவளிக்கும் இடமாகவும் உள்ளது.

பாக் விரிகுடாவையொட்டிய கரையோர மக்கள் கடற்பசுக்களை பாதுகாப்பதன் அவசியத்தைப் புரிந்துகொண்டு, பல முறை மீன்பிடி வலையில் சிக்கிய கடற்பசுக்களை மீனவர்கள் வெற்றிகரமாக கடலில் விட்டுள்ளனர். இதைப் பாராட்டி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அவர்களுக்கு அரசு சார்பில் பாராட்டுச்சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

கடற்பசுக்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவருகின்றன. இப்போது சுமார் 240 கடற்பசுக்கள் மட்டுமே இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ்நாட்டின் கடற்கரையில் காணப்படுகின்றன. எனவே, கடற்பசுக்கள், அவற்றின் வாழ்விடத்தை அழிவிலிருந்து பாதுகாக்க உடனடித் தேவை ஏற்பட்டுள்ளது. இந்த நோக்கங்களை நிறைவேற்ற, பாக் விரிகுடாவில் கடற்பசு பாதுகாப்பகம் அமைத்து அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகள் இல்லை: தமிழக அரசின் அறிவிக்கை மூலமாக எந்தவொரு புதிய கட்டுப்பாடுகள், நிபந்தனைகள் விதிக்கப்படப் போவதில்லை. கடற்பசு பாதுகாப்பகம் என்பது இந்தியாவிலேயே முதன்முதலாக அமைக்கப்படும் பாதுகாப்பகமாகும். இதனால், தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், உலகெங்கிலும் உள்ள வன உயிரின பாதுகாவலர்கள் அனைவரும் பெருமைகொள்வர் என்று அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

1. 'UPI லைட்' கொடுப்பனவு பரிவர்த்தனையின் உச்சவரம்பு என்ன?

அ. ரூ.1000

ஆ. ரூ.500

இ. ரூ.200 ☑

ஈ. ரூ.100

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநர், சக்திகாந்த தாஸ் சமீபத்தில் குளோபல் ஃபின்டெக் ஃபெஸ்ட்–2022இல் மூன்று முக்கிய டிஜிட்டல் கொடுப்பனவு முனைவுகளைத் தொடங்கினார். இந்த முனைவுகளில் UPIஇல் ரூபே கடனட்டை பயன்பாடு, UPI LITE, பாரத் பில்பே – எல்லைதாண்டிய இரசீது கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கும். BHIM செயலியில் UPI லைட்மூலம், பயனர்கள் இணையமற்ற பயன்முறையில் சிறுமதிப்புள்ள பரிவர்த்தனைகளை செய்யவியலும். UPI லைட்டின் கொடுப்பனவு பரிவர்த்தனையின் அதிகபட்ச வரம்பு ₹200 ஆகும்.

2. 'சர்வதேச சைகை மொழிகள் நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. செப்டம்பர்.20

ஆ. செப்டம்பர்.23 ☑

இ. செப்டம்பர்.25

ஈ. செப்டம்பர்.27

✓ காதுகேளாதோரின் மனித உரிமைகளை உணர்ந்துகொள்வதில் சைகை மொழிகளின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை செப்.23ஆம் தேதியை சர்வதேச சைகை மொழிகள் நாளாக அறிவித்தது. கடந்த 1951ஆம் ஆண்டு ரோமில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு நிறுவப்பட்ட நாளை இந்த நாள் நினைவுகூருகிறது. சர்வதேச காது கேளாதோர் வாரத்தின் ஒருபகுதியாக, கடந்த 2018ஆம் ஆண்டில் சைகை மொழிகளின் சர்வதேச நாள் முதன்முதலில் கொண்டாடப்பட்டது.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற கிகாலி திருத்தத்துடன் தொடர்புடைய நடவடிக்கை எது?

அ. மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிப்பது

ஆ. ஹைட்ரோஃப்ளூரோகார்பன்களைக் குறைத்தல் ☑

இ. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நுகர்வை அதிகரித்தல்

ஈ. நிலக்கரி ஆலைகளைப் படிப்படியாக ஒழித்தல்

✓ குளிர்பதன சாதனங்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் விதமாக, அமெரிக்க செனட், அண்மையில் ஓசோன் மாசுபாடு தொடர்பான கடந்த 1987 மாண்ட்ரீல் நெறிமுறைக்கான கிகாலி திருத்தத்திற்கு ஒப்புதலளித்தது. அடுத்த பதினான்கு ஆண்டுகளில் HFC–கள் எனப்படும் ஹைட்ரோபுளோரோகார்பன்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை 85% குறைக்க அந்தச் சர்வதேச ஒப்பந்தம் நோக்கம் கொண்டுள்ளது. சீனா, இந்தியா, ரஷ்யா உள்ளிட்ட 130–க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்தை முறையாக அங்கீகரித்துள்ளன.

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'நிலவு வெளிச்சம் (Moonlighting)' என்பதுடன் தொடர்புடைய துறை எது?

அ. விண்வெளி அறிவியல்

ஆ. வேலைவாய்ப்பு ☑

இ. உளவியல்

ஈ. நிதியியல்

- ✓ இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான விப்ரோ தனது போட்டி நிறுவனங்களுக்காக ஒரே நேரத்தில் பணி புரிவதாகக் கண்டறியப்பட்ட 300 ஊழியர்களின் வேலையைப் பறித்துள்ளது. இச்செயல், 'மூன்லைட்டிங்' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நடைமுறையானது ஆர்வத்தில் முரண்பாடு, தரவுகளின் மீறல்கள் மற்றும் நிறுவனத்தின் அறிவுசார் சொத்து மற்றும் சொத்துக்களின் தவறான பயன்பாடு ஆகியவற்றை உருவாக்கலாம் என்று நிறுவனங்கள் அச்சங்கொள்கின்றன.

5. 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்துடன் தொடர்புடைய நடுவண் அமைச்சகம் எது?

அ. கலாச்சார அமைச்சகம்

ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑

இ. வெளியுறவு அமைச்சகம்

ஈ. தகவல் தொடர்பு அமைச்சகம்

- ✓ சுற்றுலா அமைச்சகம் இராமாயண சுற்று, பௌத்த சுற்று, கடற்கரையோர சுற்று மற்றும் பாலைவன சுற்று உள்ளிட்ட 15 சுற்றுலா சுற்றுகளை அதன் 'ஸ்வதேஷ் தர்ஷன்' திட்டத்தின்கீழ் அடையாளம் கண்டுள்ளது.

- ✓ நடுவண் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, 'அம்பேத்கர் சுற்றை' பயணித்து காண்பதற்கான சிறப்பு சுற்றுலா இரயிலை அறிவித்தார். இந்த இரயில் டாக்டர் பி ஆர் அம்பேத்கருடன் தொடர்புடைய முக்கிய இடங்களான மோவ் (அவர் பிறந்த இடமான இந்தூரில் உள்ள Dr அம்பேத்கர் நகர்), இலண்டன் (அவர் தங்கியிருந்து படித்த இடம்), நாக்பூர் (படித்த இடம்), தில்லி (காலமான இடம்) மற்றும் இறுதியாக மும்பை (அவர் தகனம் செய்யப்பட்ட இடம்) இடங்களை உள்ளடக்கி பயணிக்கும்.

6. ஆசிய பசிபிக் பிராந்தியத்தில், சிறந்த தொழில்நுட்ப மையங்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்திய நகரம் எது?

அ. பெங்களூரு ☑

ஆ. மும்பை

இ. சென்னை

ஈ. ஹைதராபாத்

- ✓ குஷ்மேன் மற்றும் வேக்ஃபீல்டின் அறிக்கையின்படி, சிறந்த தொழில்நுட்ப மையங்களின் பட்டியலில் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் பெங்களூரு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சீனாவின் பெய்ஜிங் முதலிடத்தில் உள்ளது. "Tech Cities: The Global Intersection of Talent and Real Estate" என்ற தலைப்பிலான அறிக்கை, உலகம் முழுவதும் உள்ள 115 வெவ்வேறு, 'தொழில்நுட்ப நகரங்களை' ஆய்வு செய்தது. மற்ற மூன்று இந்திய நகரங்களான சென்னை, தில்லி மற்றும் ஹைதராபாத் அடுத்த மூன்று இடங்களில் உள்ளன. APAC–இன் 14 நகரங்களின் பட்டியலில் மும்பை மற்றும் புனே எட்டு மற்றும் ஒன்பதாவது இடங்களில் உள்ளன.

7. லிஸ் டிரஸ் என்பார் கீழ்க்காணும் எந்த நாட்டின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார்?

அ. பிரான்ஸ்



ஆ. ஐக்கிய இராச்சியம் (UK) ☑

இ. ஆஸ்திரேலியா

ஈ. ஜெர்மனி

- ✓ ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமராக பழைமைவாத கட்சியின் தலைவர் லிஸ் ட்ரஸ் நியமிக்கப்பட்டார். ஜூலை மாதம் போரிஸ் ஜான்சன் பதவி விலகிய பின்னர், ஆளும் பழைமைவாத கட்சியின் உட்கட்சி தலைமைப்போட்டியில் 47 வயதான லிஸ் ட்ரஸ் தனது போட்டியாளரான முன்னாள் நிதியமைச்சர் ரிஷி சுனக்கை தோற்கடித்தார். தெரசா மே மற்றும் மார்கரெட் தாட்சரைத் தொடர்ந்து இங்கிலாந்தின் மூன்றாவது பெண் பிரதமராக லிஸ் ட்ரஸ் ஆனார்.

8. அகமதாபாத்தில் நடைபெறவுள்ள 36ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிக்கான சின்னத்தின் பெயர் என்ன?

அ. ஷெர்

ஆ. சவாஜ் ☑

இ. விகாஸ்

ஈ. லியோ

✓ அகமதாபாத்தில் நடைபெறவுள்ள 36ஆவது தேசிய விளையாட்டுப்போட்டிக்கான சின்னம் மற்றும் கீதத்தை நடுவண் உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். இந்தச் சின்னத்திற்கு குஜராத்தியில், 'குட்டி' என்று பொருள்படும் 'சவாஜ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. கீதத்தின் கருப்பொருள், 'ஒரே பாரதம் ஒப்பிலா பாரதம்' என்ற அடிப்படையில் உள்ளது. தேசிய விளையாட்டுப் போட்டிகள், குஜராத் மாநிலத்தில் உள்ள ஆறு நகரங்களில் செப்டம்பர்.29 முதல் அக்டோபர்.12 வரை நடத்தப்படும்.

9. தில்லியிலுள்ள பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப்பள்ளிகள் திட்டத்தைத் தொடக்கிய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. கர்நாடகா

ஈ. குஜராத்

✓ தமிழ்நாடு அரசானது தில்லியில் உள்ள பள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப் பள்ளிகள் திட்டத்தைத் தொடக்கியது. தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், மாண்புமிகு தமிழ்நாட்டு முதல்வர் மு க ஸ்டாலின் முன்னிலையில் இத்திட்டத்தைத் தொடங்கிவைத்தார். தொடக்க நிலையில், 26 சிறந்த பள்ளிகள் மற்றும் 15 மாதிரிப்பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் தொடக்கப்பட்டுள்ளன. 'தகைசல் பள்ளிகள்' மற்றும் 'மாதிரிப்பள்ளிகள்' ஆகியவை சிறந்த பள்ளிகள் மற்றும் மாதிரிப்பள்ளிகளுக்கான அதிகாரப்பூர்வ தமிழ்ப்பெயர்களாகும்.

10. 'Our Great National Parks' என்ற ஆவணத்தொடருக்காக 'சிறந்த கதைசொல்லி'க்கான எம்மி விருதை வென்ற முன்னாள் அதிபர் / குடியரசுத்தலைவர் யார்?

அ. பராக் ஒபாமா ☑

ஆ. இம்மானுவேல் மக்ரோன்

இ. இராம்நாத் கோவிந்த்

ஈ. ஷின்சோ அபே

✓ அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தனது நெட்ஃபிளிக்ஸ் ஆவணப்படத் தொடரான, 'Our Great National Parks'–க்காக 'சிறந்த வசனகர்த்தா'வுக்கான எம்மி விருதை வென்றார். பராக் ஒபாமாவின் தயாரிப்பு நிறுவனமான ஹையர் கிரவுண்ட், உலகெங்கிலும் உள்ள தேசியப்பூங்காக்களைப் பற்றிய இந்தத் தொடரைத் தயாரித்துள்ளது. முன்னாள் அதிபர் பராக் ஒபாமா, ஏற்கனவே இரண்டு கிராமி விருதுகளைப் பெற்றுள்ளார். இதன்மூலம் வரலாற்றில் எம்மி விருதை வென்ற இரண்டாவது அமெரிக்க அதிபர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 'நிஸ்தார்', 'நிபுண்' ஆழ்கடல் பயிற்சிக் கப்பல்கள் கடற்படையில் இணைப்பு

ஆழ்கடல் பயிற்சி மற்றும் நீர்மூழ்கிக்கப்பல்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தும் வகையில், இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 'நிஸ்தார்', 'நிபுண்' ஆகிய கப்பல்கள் விசாகப்பட்டினத்தில் வைத்து கடற்படையில் இணைக்கப்பட்டது. உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இவ்விரண்டு கப்பல்களும் விசாகப்பட்டினத்தில் அமைந்துள்ள ஹிந்துஸ்தான் கப்பல் கட்டுமான நிறுவனத்தில் தயாரிக்கப்பட்டன.

இந்திய தொழிற்நிறுவனங்கள் குறிப்பாக சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்புடன் இவ்விரு பயிற்சிக் கப்பல்களும் தயாரிக்கப்பட்டன. இந்தியா முழுவதும் உள்ள 120–க்கும் மேற்பட்ட இத்தகைய நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் பங்காற்றியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. இக்கப்பல்கள் நீர்முழ்கிக் கப்பல்களை மீட்பது மற்றும் ஆழ்கடல் பயிற்சிக்குப் பயன்படுத்தப்படும். கடற்பகுதியில் ஹெலிகாப்டர்களை இயக்கும் நடவடிக்கையிலும் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கையிலும் இவை ஈடுபடுத்தப்படும் எனக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

1. இந்தியாவில் சூரிய ஆற்றல் உற்பத்திப் பண்ணைகளை அமைத்த முதல் மின்னணு வணிக நிறுவனம் எது?

அ. வால்மார்ட்

ஆ. அமேசான் ☑

இ. பிளிப்கார்ட்

ஈ. ஈபே

✓ அமேசான் நிறுவனம் தனது முதல் சூரிய ஆற்றல் உற்பத்தித் திட்டத்தை இந்தியாவில் இராஜஸ்தான் மாநிலத்தில் மூன்று புதிய சூரிய ஆற்றல் உற்பத்திப் பண்ணைகளை அமைப்பதன்மூலம் தொடங்கியுள்ளது. இப்பண்ணையின் ஒருங்கிணைந்த ஆற்றல் திறன் 420 MW ஆகும். 2025ஆம் ஆண்டுக்குள் அமேசான் தனது வணிகத்தில் 100% புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தியத் திட்டத்தில் 210–மெகாவாட் திட்டம் 'ReNew Power'மூலம் உருவாக்கப்படும். 100–மெகாவாட் திட்டம் Amp எனர்ஜி இந்தியாவால் உருவாக்கப்பட உள்ளது. புரூக்ஃபீல்டின் 110–MW திட்டமும் இதிலடங்கும்.

2. ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல இரட்டை செயல்பாட்டு திறனுடன்கூடிய பிரம்மோஸ் ஏவுகணையை கொள்முதல் செய்வதற்காக கீழ்க்காணும் எந்த நிறுவனத்துடன் பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துள்ளது?

அ. டசால்ட் ஏவியேஷன்

ஆ. துருவ் ஏரோஸ்பேஸ்

இ. DRDO

ஈ. BAPL ☑

✓ ₹1700 கோடி மதிப்பில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்தில் உள்ள இலக்கைத் தாக்கவல்ல இரட்டை செயல்பாட்டு திறனுடன்கூடிய பிரம்மோஸ் ஏவுகணையை கொள்முதல் செய்வதற்காக பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் தனியார் நிறுவனத்துடன் (BAPL) பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது. இரட்டை செயல்பாட்டு திறன்கொண்ட இந்த ஏவுகணைகள், இந்திய கடற்படையின் திறனை மேம்படுத்தும். பிரம்மோ ஏரோஸ்பேஸ் தனியார் நிறுவனம் என்பது இந்தியா–ரஷ்ய கூட்டுநிறுவனமாகும். நிலத்தில் செயல்படக்கூடியதாகவும், கப்பல்மீதான தாக்குதலை முறியடிக்கும் வகையிலும், இந்தப் புதிய வகை ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.

3. தேசிய சுற்றுச்சூழல் அமைச்சர்கள் மாநாட்டை நடத்தும் மாநிலம் எது?

அ. மகாராஷ்டிரா

ஆ. கோவா

இ. குஜராத் ☑

ஈ. கேரளா

✓ பிரதமர் நரேந்திர மோதி, குஜராத் மாநிலத்தின் ஏக்தா நகரத்தில் செப்.23 அன்று காணொளிமூலம் சுற்றுச்சூழல் அமைச்சர்களின் தேசிய மாநாட்டைத் தொடங்கிவைத்தார். செப்.23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ள இந்த இரண்டு நாள் மாநாட்டில், வாழ்க்கை, காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல் (மாசுகளைத் தணித்தல் மற்றும் காலநிலை தாக்கங்களுக்கு ஏற்ப பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல்திட்டங்களை மேம்படுத்துதல்), பரிவேஷ் (ஒருங்கிணைந்த பசுமை அனுமதிகளுக்கான ஒற்றை சாளர அமைப்பு) ; வனமேலாண்மை; மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு; வனவுயிரிகள் மேலாண்மை; நெகிழி மற்றும் கழிவு மேலாண்மையை கடைப்பிடித்தல் ஆகிய தலைப்புகளுடன் ஆறு கருப்பொருள் அமர்வுகள் நடைபெறும்.

4. ரூபாய் வர்த்தகத்திற்காக இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அனுமதியைப் பெற்ற முதல் இந்திய வங்கி எது?

அ. பாரத வங்கி

ஆ. HDFC வங்கி

இ. UCO வங்கி ☑

ஈ. பெடரல் வங்கி

✓ இந்தியப் பொதுத்துறை வங்கியான UCO வங்கி ரூபாய் வர்த்தகத்திற்கான இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலைப் பெற்ற முதல் வங்கியாக உள்ளது. கொல்கத்தாவைச் சார்ந்த இவ்வங்கி, இந்திய ரூபாயில் வர்த்தக தீர்வைக் காண்பதற்காக ரஷ்யாவின் காஸ்ப்ரோம்பேங்கில் சிறப்பு வோஸ்ட்ரோ கணக்கைத் திறக்கவுள்ளது. கடந்த ஜூலை மாதம், இந்திய வங்கிகள் இந்திய நாணயத்தில் வர்த்தகம் செய்ய அனுமதிக்கும் முடிவை ரிசர்வ் வங்கி அறிவித்தது. இந்திய ரிசர்வ் வங்கியானது இந்தியாவிற்கும் இலங்கை மற்றும் ரஷ்யா உள்ளிட்ட பிற நாடுகளுக்கும் இடையே வர்த்தக தீர்வுகளை அனுமதித்துள்ளது.

5. "The India Way: Strategies for an Uncertain World" என்ற நூலின் ஆசிரியர் யார்?

அ. நரேந்திர மோடி

ஆ. S ஜெய்சங்கர் ☑

இ. அருண் ஜெட்லி

ஈ. இரகுராம் இராஜன்

✓ வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர் அண்மையில் குஜராத்தில் தனது, "The India Way: Strategies for an Uncertain World" என்ற நூலின் குஜராத்தி மொழி பதிப்பை வெளியிட்டார். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்த நூலின் அசல் பதிப்பு, கடந்த 2020ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் S ஜெய்சங்கர், இந்த நூலில், 'உலகளாவிய ஒழுங்கு மாறும்போது இந்தியாவின் வெளியுறவுக்கொள்கை எதை நோக்கி என்னவாக இருக்க வேண்டும்?' என்ற கேள்விக்கு பதிலளிக்க முயற்சி செய்கிறார்.

6. கீழ்க்காணும் எந்த நகரத்தில் ₹3,800 கோடி மதிப்பிலான இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோதி தொடங்கி வைத்தார்?

அ. மைசூரு

ஆ. மங்களூரு ☑

இ. புனே

ஈ. கொச்சின்

✓ ₹3,800 கோடி மதிப்பிலான இயந்திரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மங்களூருவில் அடிக்கல் நாட்டினார். புதிய மங்களூரு துறைமுக ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்ட கொள் கலன்கள் மற்றும் பிற சரக்குப் பெட்டகங்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தை அவர் தொடங்கி வைத்தார். மேலும், துறைமுகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுமார் ₹1,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். மங்களூரு சுத்திகரிப்பு மற்றும் பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்மூலம் மேற்கொள்ளப்பட்ட இரண்டு திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

7. ஹோமியோபதியின் பெருமைக்கான உலக நல உச்சிமாநாட்டை நடத்தும் நாடு எது?

அ. இந்தியா **ஆ. ஐக்கிய அரபு அமீரகம் ☑**

இ. சிங்கப்பூர் ஈ. சீனா

✓ 'ஹோமியோபதியின் பெருமைக்கான உலக நல உச்சிமாநாட்டின்' முதலாவது பதிப்பு துபாயில், "காலநிலை மாற்றம் மற்றும் புவி வெப்பமடைதலால் ஏற்படும் நோய்கள்" என்ற தலைப்பில் நடந்தது. இந்த உச்சிமாநாடு, ஹோமியோபதி மருத்துவமுறை, மருந்துகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டது. இந்த உச்சி மாநாட்டில், நடுவண் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை இணையமைச்சர் அஸ்வினி குமார் சௌபே உரையாற்றினார்.

8. 'உயிரி–கிராமங்களை' வெற்றிகரமாக அமைத்துள்ள இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. ஹிமாச்சல பிரதேசம்

ஆ. அஸ்ஸாம்

இ. திரிபுரா ☑

ஈ. மேற்கு வங்காளம்

✓ திரிபுரா மாநில அரசு, நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம் தணிப்பு மற்றும் காலநிலை தழுவல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ஐந்து 'உயிரி கிராமங்களை' வெற்றிகரமாக அமைத்துள்ளது. இந்திய மாநிலங்களில் பின்பற்றப்பட்டு வரும் காலநிலை நடவடிக்கைகள் குறித்த சிறந்த நடைமுறைகளின் தொகுப்பின்படி, திரிபுராவில், வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட ஐந்து 'உயிரி–கிராமங்களின்' மூலம் ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்துள்ளன. இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக கடந்த 2018ஆம் ஆண்டில் திரிபுராவின் உயிரித்தொழில்நுட்ப இயக்குநரகத்தால், 'Bio–Village' என்ற கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது.

9. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற அரவிந்த் சிதம்பரம் சார்ந்த விளையாட்டு எது?

அ. ஸ்குவாஷ்

ஆ. பூப்பந்து

இ. சதுரங்கம் ☑

ஈ. டேபிள் டென்னிஸ்

✓ கிராண்ட்மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் அண்மையில் 22ஆவது துபாய் ஓபன் செஸ் போட்டியில் சாம்பியன் ஆனார். ஏழு இந்தியர்கள் முதல் பத்து இடங்களைப் பிடித்தனர்; மேலும் R பிரக்னாநந்தா இரண்டாவது இடத்தை அபிஜீத் குப்தா, ஜெய்குமார் சம்மேட் ஷேட் மற்றும் S P சேதுராமன் உள்ளிட்ட ஐந்து பேருடன் பகிர்ந்துகொண்டார்.

10. NITI ஆயோகின் ஓர் அண்மைய அறிக்கையின்படி, போஷான் அபியான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் முதல் இடத்தைப் பிடித்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. மகாராஷ்டிரா ☑

இ. இராஜஸ்தான்

ஈ. பஞ்சாப்

✓ "Preserving Progress on Nutrition in India: Poshan Abhiyan in Pandemic Times" என்ற தலைப்பில் NITI ஆயோக் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, போஷான் அபியான் திட்டத்தைச் செயல்படுத்துவதில் மகாராஷ்டிர மாநிலம் மாநிலங்களுள் முதலிடத்தைப் பிடித்தது. ஆந்திர பிரதேசம் இரண்டாவது இடத்திலும், குஜராத் மூன்றாவது இடத்திலும் உள்ளன. COVID காலத்தில் போஷானைச் செயல்படுத்த தேவையான 100% மனிதவள ஆட்சேர்ப்பில் ஆந்திர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அங்கன்வாடி பணியாளர்களுக்கு மொபைல் போன்கள் விநியோகம் செய்வதிலும் ஆந்திர பிரதேசம் முதலிடம் வகிக்கிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. நாட்டுநலப்பணி திட்ட விருதுகளை வழங்கினார் குடியரசுத்தலைவர்

இந்தியக் குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 2020–21ஆம் ஆண்டுக்கான நாட்டுநலப்பணி திட்ட விருதுகளை வழங்கினார். 5 பிரிவுகளில் இந்த விருதுகள் வழங்கப்பட்டன. சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Dr R ரமேசுக்கு, பல்கலைக்கழகம்/பிளஸ்டூ கவுன்சில் பிரிவில் விருது வழங்கப்பட்டுள்ளது. யூனிட் திட்ட அலுவலர்கள் பிரிவில் மதுரை ஸ்ரீமீனாட்சி கலைக்கல்லூரிக்கு விருது அளிக்கப்பட்டுள்ளது. தன்னார்வலர்கள் பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜெயசீலன், மதுரை மெப்கோ சிலீக் பொறியியல் கல்லூரியின் வரதராஜன் ஆகியோர் விருது பெற்றுள்ளனர்.

---

2. இணையவழியில் பட்டா மாறுதல்: முதல்வர் தொடக்கம்

பட்டா மாறுதலுக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும் வசதியை முதல்வர் முக ஸ்டாலின் தொடக்கிவைத்தார். இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: நில உரிமையாளர்கள் பட்டாமாறுதலுக்கான விண்ணப்பங்களை பொதுச்சேவை மையங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் வாயிலாக விண்ணப்பித்து, அவை இணையவழியில் பரிசீலிக்கப்படுகின்றன. பின்னர், பட்டா மாறுதலுக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்போது, பொதுமக்களின் வசதிக்காக எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பட்டா மாறுதல் கோரி இணையவழியில் (www.tamilnilam.tn.gov.in/citizen) விண்ணப்பிக்கும் புதிய வசதி தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இப்புதிய சேவையின் மூலம் பொதுமக்கள் பட்டா மாற்றத்துக்கு விண்ணப்பிக்க வட்டாட்சியர் அலுவலகங்கள், பொதுச்சேவை மையங்களுக்குச் செல்லவேண்டிய அவசியமிருக்காது. மேலும், நில உட்பிரிவுக்கான கட்டணம், செயலாக்கக் கட்டணங்களைச் செலுத்த வங்கிகளுக்கு நேரில் செல்லாமல், இணையவழியிலேயே செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. பட்டா மாறுதல் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, பொதுமக்கள் பட்டா உத்தரவின் நகல், பட்டா, புலப்படச் சுவடி ஆகியவற்றை எங்கிருந்தும் எந்த நேரத்திலும் இணையவழிச் சேவைமூலம் கட்டணம் ஏதுமின்றி பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இதனால், பொதுச்சேவை மையங்களுக்குச் செல்வதும், வட்ட அலுவலகங்களில் இடைத்தரகர்களால் பொதுமக்கள் அவதிப்படுவதும் தவிர்க்கப்படும்.

இணையவழியில் வரைபடங்கள்: நகரப்புலங்களுக்கான வரைபடங்கள் www.eservices.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதையும் இணையதளத்திலிருந்து கட்டணம் இல்லாமல் பதிவிறக்கம் செய்யலாம். மனை அங்கீகாரம், வங்கிக்கடன் பெறுதல் போன்ற இதர சேவைகளுக்கு வரைபடங்கள் மிகுந்த தேவையாக உள்ளன. இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டதால், இதற்காக பொதுமக்கள் வட்டாட்சியர் அலுவலகம் வருவது தவிர்க்கப்படும் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

3. ஊரகத் திறன் பயிற்சி: பிரிட்டிஷ் கவுன்சிலுடன் தமிழக அரசு ஒப்பந்தம்

ஊரகத் திறன் பயிற்சி அளிக்கும் திட்டத்தை தரப்படுத்த, பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்துடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஒப்பந்தம் செய்துள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தீனதயாள் உபாத்தியாய ஊரகத்திறன் பயிற்சித்திட்டமானது, 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட கிராமப்புற ஏழை, எளிய இளைஞர்களுக்கு திறன் பயிற்சியளித்து, அவர்களுக்கு நிரந்தர வருமானத்துடன் கூடிய வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதை நோக்கமாகக்கொண்டுள்ளது. அவர்களுக்கு மென்திறன் பயிற்சியளிப்பது மிகவும் முக்கியமாகும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் நோக்கத்துடன் உலகில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தை தொழில்நுட்ப உதவி நிறுவனமாகக்கொண்டு செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது.

---

1. மாதிரி பதிவு அமைப்பு அறிக்கை – 2020இன்படி, கடந்த 2020ஆம் ஆண்டில் இந்தியாவில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் என்னவாக இருந்தது?

அ. 25

ஆ. 32 ☑

இ. 37

ஈ. 40

- 2022 செப்.22 அன்று வெளியான இந்திய மாதிரி பதிவு அமைப்பு வெளியிட்ட புள்ளிவிவர அறிக்கை–2020இன்படி, 2030ஆம் ஆண்டுக்குள் நிலையான வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்காக, கடந்த 2014ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் இறப்பு விகிதம், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவுசெய்துவருகிறது.
- 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் கடந்த 2020ஆம் ஆண்டில் 1000 பிறப்புகளுக்கு 32ஆக இருந்தது. கடந்த 2019ஆம் ஆண்டில் 1000 பிறப்புகளுக்கு 35ஆக இருந்தது. சிறுகுழந்தை இறப்பு விகிதமானது (IMR) கடந்த 2020ஆம் ஆண்டில் 1000 உயிர்ப்பிறப்புக்கு 28ஆகவும் கடந்த 2019ஆம் ஆண்டில் 1000 உயிர்ப்பிறப்புக்கு முப்பது ஆகவும் இருந்தது.

2. இந்தியா எந்த மாநிலத்திலிருந்து தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்குகளை ஏற்றுமதி செய்தது?

அ. பீகார்

ஆ. குஜராத் ☑

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. கர்நாடகா

- குஜராத் மாநிலத்தின் கேதா மாவட்டத்திலிருந்து அமெரிக்காவின் கலிபோர்னியாவுக்கு தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்குகளை இந்தியா ஏற்றுமதி செய்தது. வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களுக்கான ஏற்றுமதி ஆணையம் (APEDA) சைவ உணவு வகையின்கீழ் தாவர அடிப்படையிலான இறைச்சிப்பொருட்களின் முதல் சரக்கு ஏற்றுமதியை எளிதாக்கியது. APEDA ஆனது ஆஸ்திரேலியா, இஸ்ரேல், நியூசிலாந்து மற்றும் பிற நாடுகளில் சைவ உணவு வகைகளை விளம்பரப்படுத்த திட்டமிட்டுள்ளது.

3. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட, 'இந்திய சைகை மொழி அகராதி' திறன்பேசி செயலியின் பெயர் என்ன?

அ. ISL Seekho செயலி

ஆ. Sign Learn செயலி ☑

இ. Bharat Sign செயலி

ஈ. India Sign Language செயலி



- சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், 'இந்திய சைகை மொழி அகராதி' என்ற திறன்பேசி செயலியை 'Sign Learn' என்ற பெயரில் அறிமுகப்படுத்தியது. இது 10,000 சொற்களைக்கொண்ட இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் இந்திய சைகை மொழி அகராதியை அடிப்படையாகக் கொண்டதாகும். செவித் திறன் குறைபாடுள்ள குழந்தைகள் பாடநூல்களை அணுகும் வகையில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான NCERT பாடநூல்களை இந்திய சைகை மொழியில் மாற்றுவதற்காக NCERT உடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்திய சைகை மொழி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் (ISLRTC) கையெழுத்திட்டது.

4. சந்திரனில், 'Changesite–(Y)' எனப் பெயரிடப்பட்ட சந்திர படிகத்தைக் கண்டுபிடித்த நாடு எது?

அ. இஸ்ரேல்

ஆ. சீனா ☑

இ. அமெரிக்கா

ஈ. ஐக்கிய அரபு அமீரகம்



✓ நிலவினருகிலுள்ள எரிமலைக்குப்பைகளில் புதிய வகை படிகத்தை சீன ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பூமியில் தூய மற்றும் திறன்மிக்க ஆற்றலை உற்பத்தி செய்வதற்கான சாத்தியம் மிகுந்த ஆற்றல்மூலத்தையும் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிறிய, ஒளிபுகு அப்படிகமானது, சீன நிலவு தெய்வமான சாங்கேயின் நினைவாக, Changesite–(Y) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

5. 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் ☑

இ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

ஈ. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

✓ நடுவண் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் தேசிய மாசற்ற காற்றுத் திட்டம் – 2019 (NCAP) கீழ், 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' திட்டத்தைத் தொடங்கும். 2025–26–க்குள் காற்று மாசுபாட்டை 40 சதவீதம் வரை குறைப்பதற்காக, NCAPஇன் ஒருபகுதியாக தயாரிக்கப்பட்ட நகர்ப்புற செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 'ஸ்வச் வாயு சர்வேக்ஷன்' நாட்டில் உள்ள 131 நகரங்களைத் தரவரிசைப்படுத்தும்.

6. இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, கீழ்க்காணும் எந்நாட்டின் கௌரவ ஜெனரல் பதவியை பெற்றார்?

அ. நேபாளம் ☑

ஆ. வங்காளதேசம்

இ. மியான்மர்

ஈ. இலங்கை

✓ இந்திய இராணுவத்தின் தலைமைத்தளபதி மனோஜ் பாண்டேவுக்கு, நேபாள அதிபர் வித்யா தேவி பண்டாரி, நேபாள இராணுவத்தின் ஜெனரல் பதவியை வழங்கினார். இவ்விழா இருநாட்டு இராணுவங்களுக்கிடையேயான தனித்துவமான பாரம்பரியத்தின் ஒருபகுதியாக உள்ளது. ஜெனரல் மனோஜ் பாண்டே, நான்கு நாள் அலுவல்பூர்வ பயணமாக நேபாளத்திற்குச் சென்றுள்ளார். பீரங்கி உபகரணங்கள், சுரங்கப்பாதுகாப்பு வாகனங்கள், மருத்துவக் கடைகள் மற்றும் குதிரைகள் உள்ளிட்ட இராணுவ உதவிகளையும் அவர் நேபாள இராணுவத்துக்கு வழங்கினார்.

7. தேசிய கூட்டுறவுக் கொள்கை ஆவணத்தை வரைவதற்கான குழுவின் தலைவர் யார்?

அ. அமித் ஷா

ஆ. சுரேஷ் பிரபு ☑

இ. L K அத்வானி

ஈ. முரளி மனோகர் ஜோஷி

✓ நடுவண் கூட்டுறவு அமைச்சகமானது தேசிய கூட்டுறவுக் கொள்கை ஆவணத்தை உருவாக்குவதற்கான குழுவை உருவாக்கியுள்ளது. முன்னாள் நடுவணமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையில் நாற்பத்தெழுவர் (47) கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள தேசிய கூட்டுறவுக் கொள்கையானது கடந்த 2002இல் உருவாக்கப்பட்டது. தற்போது, இந்தியாவில் சுமார் 8.5 இலட்சம் கூட்டுறவுச் சங்கங்கள் 29 கோடி உறுப்பினர்களைக்கொண்டுள்ளன.

8. 'Transforming Literacy Learning Spaces' என்பது செப்டம்பர்.8 அன்று கொண்டாடப்படும் எந்தச் சிறப்புநாளின் கருப்பொருளாகும்?

அ. உலக கல்வி நாள்

ஆ. உலக எழுத்தறிவு நாள் ☑

இ. உலக கலாச்சார நாள்

ஈ. உலக சமூக கற்றல் நாள்



✓ எழுத்தறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், நம்மைச் சுற்றியுள்ள உள்ளூர் சமூகங்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவுமாக ஒவ்வோர் ஆண்டும் செப்.8 அன்று உலக எழுத்தறிவு நாள் அனுசரிக்கப்படு –கிறது. கடந்த 1966ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (UNESCO) செப்.8 உலக எழுத்தறிவு நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது. "Transforming Literacy Learning Spaces" என்பது இந்த ஆண்டு (2022) உலக எழுத்தறிவு நாளுக்கானக் கருப்பொருளாகும்.

9. தற்போதைய எரிவாயு விலை சூத்திரத்தை மதிப்பாய்வு செய்வதற்காக அண்மையில் அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் யார்?

அ. சுரேஷ் பிரபு

ஆ. கிரிட் பரிக் ☑

இ. ஜிதேந்திர சிங்

ஈ. ஹர்தீப் சிங் பூரி



✓ பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், தற்போதைய எரிவாயு விலை சூத்திரத்தை மறுபரிசீலனை செய்வதற்காக புகழ்பெற்ற எரிசக்தி நிபுணர் கிரிட் பரிக் தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது. உலகளாவிய இயற்கை எரிவாயு விலைகள் அதிகரித்து வருவதால் எரிசக்தி மற்றும் தொழிற்துறை செலவுகள் அதிகரிப்பது குறித்து கவலைகள் அதிகரித்துள்ளன. இம்மாத இறுதிக்குள் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

10. UNESCO பாரம்பரியக் கள இணைப்பிற்காக முன்மொழியப்பட்ட நீலவூரல்லு மற்றும் சாயா சோமேஸ்வராலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. கர்நாடகா

ஆ. பஞ்சாப்

இ. குஜராத்

ஈ. தெலுங்கானா ☑

unesco
United Nations
Educational, Scientific
and Cultural Organization

✓ தெலுங்கானா மாநிலமானது UNESCOஇன் உலக பாரம்பரியக் களப் பட்டியலில் இணைப்பதற்காக கட்டடக்கலை சிறப்புடன் கூடிய இரண்டு நினைவுச்சின்னங்களை முன்மொழிந்துள்ளது. நீலவூரல்லு பெருங்கற்கால புதைகுழி மற்றும் சாயா சோமேசுவராலயம் ஆகியவை அங்கீகாரத்திற்காக முன்மொழியப்பட்டுள்ளன. காகத்திய ருத்ரேஸ்வரா கோவிலானது (இராமப்பா கோவில்) ஏற்கனவே உலக பாரம்பரியக் களப் பட்டியலில் உள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை கண்டுபிடிக்க, நாடு முழுவதும் பயன்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சி அமைச்சகம், 'ஜல்தூத் செயலி'யை உருவாக்கியுள்ளது.

ஊரக வளர்ச்சி அமைச்சகம், 'ஜல்தூத் செயலி'யை உருவாக்கியுள்ளது. இது கிராமத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை கண்டுபிடிக்க நாடு முழுவதும் பயன்படுத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை ஆண்டுக்கு இருமுறை (பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய) காலங்களில் அளவிடுவதற்கான வேலைவாய்ப்புக்கு 'ஜல்தூத்' செயலி உதவும். ஒவ்வொரு கிராமத்திலும் போதிய இடங்கள் (2–3) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவை அந்தக் கிராமத்தின் நிலத்தடி நீர்மட்டத்தை அறிய உதவும்.

இந்தச் செயலியானது, சரியான தரவுகளுடன் பஞ்சாயத்துகளின் பணிகளை எளிதாக்குவதற்கு பயன்படுத்தப்படும். நிலத்தடிநீர் தரவுகள், கிராமப்பஞ்சாயத்து வளர்ச்சித்திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டங்களின் ஒருபகுதியாக செயல்படுத்தப்படும். நீர்நிலைகளை மேம்படுத்தல் மற்றும் புதுப்பித்தல், காடுகள் வளர்ப்பு, மழைநீர் சேகரிப்பு போன்ற திட்டங்களின்மூலம், கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் நீர் மேலாண்மையை செயல்படுத்துவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

---

2. 5ஜி சேவைகள்: அக்.1இல் பிரதமர் தொடக்கம்

இந்தியாவில் அதிவேக இணைய வசதியை அளிக்கும் 5ஜி சேவையை அக்.1–ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோதி தொடக்கிவைக்கவிருப்பதாக நடுவண் தகவல் தொடர்புத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தில்லியில் அக்.1 முதல் 4 வரை இந்திய கைப்பேசி மாநாடு நடைபெறவுள்ளது. முதல்நாளில் 5ஜி சேவையை பிரதமர் மோதி தொடக்கிவைக்கவுள்ளதாக, நடுவண் தகவல் தொடர்புத்துறையின் தேசிய அகண்ட அலைவரிசை இயக்கம் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் தெரிவித்துள்ளது.

---

3. 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்கு தனி இணையதளம்

'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்கு தனி இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வண்டலூரில் தொடக்கிவைத்தார். இந்த இயக்கத்தின் தொடக்க கட்டமாக, நிகழாண்டில் 2.80 கோடி மரக்கன்றுகள் நடப்படும். தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33%ஆக உயர்த்த பசுமைத்தமிழ்நாடு இயக்கத்தை ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு சட்டப்பேரவையில் வெளியிடப்பட்டது.

திட்டத்தின் நோக்கம்: 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்தின்கீழ், அடுத்த பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற பகுதிகள், விவசாயப்பண்ணைகள், கல்வி நிறுவனங்கள், கோயில் நிலங்கள், தொழிற்சாலைகள், தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்கள், ஏரிக்கரைகள், நீர்ப்பிடிப்புப் பகுதிகள், ஆற்றுப்படுகைகள், பிற பொது நிலங்களில் உள்ளூர் மரவகைகள் நடப்படும். மேலும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் உயர்ரக மரங்களான சந்தனம், செம்மரம் மற்றும் ஈட்டிமரம் போன்ற மரங்களை வளர்க்க, 'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்தின்கீழ் விவசாயிகள் ஊக்குவிக்கப்படுவர்.

'பசுமைத்தமிழ்நாடு' இயக்கத்துக்காக பல்வேறு மாவட்டங்களில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் நாற்றங்கால்கள் மூலமாக, 2.80 கோடி மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டுள்ளன. நாற்றுகளின் தேவை மற்றும் நாற்றங்கால்களைக் கண்காணிக்க, பசுமைத்தமிழ்நாடு இயக்கத்துக்காக www.greentnmission.com என்ற தனி இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

மரக்கன்றுகளின் நடவு, பிழைப்புத் திறன் போன்றவற்றைக் கண்காணிப்பதற்கு அனைத்து நடவு இடங்களின் விவரங்கள் புவிக்குறியீடு தரவுகளுடன் சேகரிக்கப்படுகின்றன.

---

4. 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் 8 ஆண்டுகாலம் நிறைவு: அந்நிய நேரடி முதலீடு ₹6.27 இலட்சம் கோடியாக இரட்டிப்பு

பிரதமர் நரேந்திர மோதியின் முதல் முன்முயற்சியான, 'இந்தியாவில் தயாரிப்போம்' (மேக் இன் இந்தியா) திட்டம் தொடங்கப்பட்டு செப்.25ஆம் தேதியுடன் எட்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில் இந்தத் திட்டத்தில் 2021-22 நிதி ஆண்டில் ₹6,27,000 கோடி ($83 பில்லியன் டாலர்) அந்நிய நேரடி முதலீடு கிடைத்துள்ளதாக நடுவண் வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 8 ஆண்டுகால சீர்திருத்த நடவடிக்கைகளில் இது இரட்டிப்பு வளர்ச்சி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலீட்டை எளிதாக்குவதற்கான வசதிகள், புத்தாக்க ஊக்குவிப்பு, திறன் மேம்பாடு, சிறந்த உற்பத்தி உள்கட்டமைப்பு போன்ற நோக்கங்களுடன், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் உருவானது. பிரதமர் நரேந்திர மோதியின் தலைமையின்கீழ் ஆட்சியமைப்பட்டு 2014ஆம் ஆண்டு இந்த, 'மேக் இன் இந்தியா' திட்டம் அறிவிக்கப்பட்டது. புதிய இந்தியாவின் வளர்ச்சிப்பாதையில் நாட்டை உலகளாவிய அளவில் ஒரு முன்னணி உற்பத்தி, முதலீட்டு இடமாக உருவாக்கும் நோக்கத்துடன் உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்து செயல்பட அழைப்பு விடுக்கப்பட்டது. தற்போது இதில் நிகழ்ந்துள்ள சாதனைகளை நடுவண் வர்த்தகம், தொழிற்துறை அமைச்சகம் சார்பில் வைக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு: நடுவணரசின் முதன்மைத் திட்டமான, 'மேக் இன் இந்தியா' நாட்டை ஒரு முன்னணி உற்பத்தி முதலீட்டு இடமாக உருவாக்கி இருக்கின்றது. உற்பத்தி, சேவைத்துறை உள்ளிட்ட 27 துறைகளில் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் சாதனைகளை புரிந்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, இந்திய அரசு ஒரு தாராளமயமான, வெளிப்படையான கொள்கையை வகுத்தது. இதன் விளைவு இந்தத் துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை தங்குதடையின்றி பெறமுடிந்தது.

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் அந்நிய நேரடி முதலீடுகள் 2014-15 நிதியாண்டில் ₹2,75,415 கோடியாக ($45.15 பில்லியன் அமெரிக்க டாலர்) இருந்தது. இக்கொள்கை அறிவிப்புக்குப் பின்னர் தொடர்ந்து அதிகரித்து 2021-22ஆம் நிதியாண்டில் நாட்டில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான அந்நிய நேரடி முதலீடாக ₹6,27,000 கோடியாக ($83.6 பில்லியன் டாலர்கள்) கிடைத்துள்ளது. இந்த FDI சுமார் 101 நாடுகளில் இருந்து வந்துள்ளன. இது 31 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் 57 துறைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் நாட்டை விருப்பத்தக்க முதலீட்டிடமாக மாற்ற சமீபத்தில் அரசு பொருளாதார சீர்திருத்தங்கள், வணிகத்தை எளிதாக்குதல் போன்ற நடவடிக்கைகள்மூலம், நிகழ் நிதியாண்டில் ₹7,50,000 கோடி ($100 பில்லியன் அமெரிக்க டாலர்) மதிப்புள்ள அந்நிய நேரடி முதலீட்டை ஈர்க்கும் பாதையிலும் நாடு உள்ளது.

நாட்டின் 14 முக்கிய உற்பத்தி துறைகளில் உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்புத் திட்டம் (பிஎல்ஐ) அறிவிக்கப்பட்டு இதன்மூலம் 'மேக் இன் இந்தியா' ஊக்கம் பெற்றுள்ளது. முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஒப்புதல்கள், அனுமதிகளுக்கு ஒற்றைசாளர முறையில் வணிகத்தை எளிதாக்குவதை மேம்படுத்த, 'தேசிய ஒற்றைச்சாளர அமைப்பு' கடந்தாண்டு இதே மாதம் தொடங்கப்பட்டது. இந்த வலைத்தளத்தில் ஒன்றிய-மாநில அரசுகளின் பல்வேறு அமைச்சகங்கள், துறைசார்ந்த அமைப்புகளை ஒருங்கிணைக்கப்பட்டு முதலீட்டாளர்கள் பயன்பட்டுள்ளனர்

'மேக் இன் இந்தியா' பார்வையின் மற்றொரு வெளிப்பாடாக, 'ஒரு மாவட்டம்-ஒரு தயாரிப்பு' என்ற முன்முயற்சி உற்பத்தியாளர்களுக்கு உலகளாவிய தளத்தை வழங்கி வருகின்றது. இதன்மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளின் சமூக-பொருளாதார வளர்ச்சி மேன்மையடைந்து வருகின்றது. இந்தியாவில் வணிகம் செய்யும் முதலீட்டாளர்களுக்-கு, தேசத்தின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பங்களிக்கும் வகையில், இந்தத்திட்டத்தின்மூலம் அரசு முயற்சி செய்து வருகிறது. இதன் விளைவாக நாட்டில் பொம்மைகள் இறக்குமதி பெருவாரியாக குறைந்தது. கடந்த 2013 ஆண்டைவிட நிகழ் நிதியாண்டில் 636 சதவீதம் பொம்மைகள் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. கடந்த 2018-19ஆம் நிதியாண்டில் மொம்மை ஏற்றமதி ₹1612 கோடியாக இருக்க 2021-22 நிதியாண்டில் ₹2,601.5 கோடியாக அதிகரித்துள்ளது. இது பலவிதமான சீர்திருத்தங்கள் முதலீடு அதிகரிப்பு போன்றவைகள்மூலம் வளர்ச்சிக்கு வழிவகுத்தது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

5. சப்தகோசி அணை திட்டத்தை முன்னெடுக்க இந்தியா-நேபாளம் முடிவு

வெள்ளத்தடுப்பு, நீர்மின்னுற்பத்தி உள்ளிட்டவற்றுக்கு வழிவகுக்கும் சப்தகோசி அணை திட்டப்பணிகளை முன்னெடுப்பதற்கு இந்தியாவும் நேபாளமும் முடிவெடுத்துள்ளன.

இந்தியா–நேபாளம் இடையேயான நீர்வளங்கள் கூட்டுக்குழுவின் ஒன்பதாவது கூட்டம் நேபாளத்தின் தலைநகரம் காத்மாண்டு நகரத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஜல் சக்தி அமைச்சகத்தின் நீர்வளத்துறைச்செயலர் பங்கஜ் குமார் தலைமையிலான இந்தியக்குழு பங்கேற்றது. நேபாள நீர்வளத்துறை அதிகாரிகளும் இதில் பங்கேற்றனர்.

இரு நாடுகளுக்கிடையேயான நீர்ப்பகிர்வு குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. முக்கியமாக, மகாகாளி ஆற்றுநீர் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், சப்தகோசி அணை திட்டத்தை விரைந்து முன்னெடுப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

நேபாளத்தில் உற்பத்தியாகி பிகார் வழியே இந்தியாவுக்குள் நுழையும் சப்தகோசி ஆற்றில் அணை கட்டுவது தொடர்பான பணிகளை முன்னெடுக்க கூட்டத்தின்போது முடிவெடுக்கப்பட்டது. அணை கட்டுமானம் சார்ந்த பணிகள், நீர்த்தேக்கப்பகுதிகள், சமூக, சுற்றுச்சூழல் தாக்கங்கள் உள்ளிட்டவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக இருநாடுகளின் நிபுணர்கள் குழுவும் விரைவில் சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாகாளி ஆற்றுநீர் ஒப்பந்தம் இந்தியா–நேபாளம் இடையே கடந்த 1996–ஆம் ஆண்டில் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின்கீழ் மகாகாளி ஆறு, அதன் கிளைநதிகள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. வெள்ளத்தடுப்பு மற்றும் மேலாண்மைக்கான கூட்டுக்குழு, கோசி–கண்டக் திட்டத்துக்கான கூட்டுக்குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டது.

---

6. நாட்டில் அதிகரிக்கும் வேலையின்மை பிரச்னை...

நாட்டில் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான இளையோர் பட்டப்படிப்பை முடித்து கல்லூரியைவிட்டு வெளியேறுகி–ன்றனர். ஆனால், அதற்கேற்ப பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகள் உருவாகுவதில்லை. புதிய முதலீடுகளை ஈர்த்து, அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஒன்றிய, மாநில அரசுகளுக்குப் பெரும் சவாலாகவே உள்ளது. நாட்டில் நிலவும் வேலையின்மை விகிதம் குறித்து இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் (CMIE) அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் (அனைத்துத் தரவுகளும் சதவீதத்தில்)

கடந்த ஓராண்டில் வேலையின்மை விகிதம்

மாதம்	இந்தியா	நகர்ப்புறம்	கிராமப்பகுதிகள்
ஆகஸ்ட்–2022	8.28%	9.57%	7.68%
ஜூலை–2022	6.83%	8.22%	6.17%
ஜூன்–2022	7.83%	7.32%	8.07%
மே–2022	7.14%	8.24%	6.63%
ஏப்ரல்–2022	7.83%	9.22%	7.18%
மார்ச்–2022	7.57%	8.28%	7.24%
பிப்ரவரி–2022	8.11%	7.57%	8.37%
ஜனவரி–2022	6.56%	8.14%	5.83%
டிசம்பர்–2021	7.91%	9.30%	7.28%
நவம்பர்–2021	6.97%	8.20%	6.41%
அக்டோபர்–2021	7.74%	7.37%	7.91%
செப்டம்பர்–2021	6.86%	8.64%	6.04%

ஆகஸ்டில் மாநில வாரியாக வேலையின்மை விகிதம்

ஆந்திரம் – 6%	தில்லி – 8.2%	ஹரியானா – 37.3%
பிகார் – 12.8%	கோவா – 13.7%	ஹிமாச்சல பிரதேசம் – 7.3%
சத்தீஸ்கர் – 0.4%	குஜராத் – 2.6%	ஜார்க்கண்ட் – 17.3%

ஜம்மு–காஷ்மீர் – 32.8%	மேகாலயம் – 2%	தெலங்கானா – 6.9%
கர்நாடகம் – 3.5%	ஒடிஸா – 2.6%	திரிபுரா – 16.3%
கேரளம் – 6.1%	பஞ்சாப் – 7.4%	உத்தர பிரதேசம் – 3.9%
மத்திய பிரதேசம் – 2.6%	இராஜஸ்தான் – 31.4%	மேற்கு வங்கம் – 7.4%
மகாராஷ்டிரம் – 2.2%	தமிழ்நாடு – 7.2%	

கடந்த மே முதல் ஆகஸ்ட் வரையிலான வேலையின்மை விகிதம்

இந்தியா	7.43%
நகர்ப்புறம்	7.8%
கிராமப்பகுதிகள்	7.2%
ஆண்கள்	6.6%
பெண்கள்	15.2%
நகர்ப்புற ஆண்கள்	6.7%
நகர்ப்புற பெண்கள்	21.6%
கிராமப்புற ஆண்கள்	6.5%
கிராமப்புற பெண்கள்	13%

வயதுவாரியான வேலையின்மை விகிதம்

15–19 – 58%	35–39 – 1%	55–59 – 0.5%
20–24 – 44%	40–44 – 0.5%	60–64 – 0.5%
25–29 – 12.5%	45–49 – 0.5%	
30–34 – 2.5%	50–54 – 0.5%	

கல்வித் தகுதியின் அடிப்படையில் வேலையின்மை விகிதம்

5–ஆம் வகுப்பு வரை – 1%	10–12–ஆம் வகுப்பு – 10.7%
6–9–ஆம் வகுப்பு – 1.8%	பட்டப்படிப்பு – 17.4%

1. மாதிரிப் பதிவு அமைப்பு அறிக்கை – 2020இன்படி, 2018–20இல் இந்தியாவில் குறைவான பாலின விகிதத்தை கொண்டிருந்த மாநிலம் எது?

அ. பீகார்

ஆ. உத்தர பிரதேசம்

இ. ஹரியானா

ஈ. உத்தரகாண்ட் ☑

✓ இந்தியத் தலைமைப் பதிவாளர் வெளியிட்ட மாதிரிப் பதிவு அமைப்பின் புள்ளிவிவர அறிக்கை–2020இன்படி, உத்தரகாண்டின் பிறப்பு பாலின விகிதம் நாட்டிலேயே மிகமோசமாக 844ஆகக் கண்டறியப்பட்டது. பாலின விகிதம் என்பது 1,000 ஆண் குழந்தைகளுக்கு இருக்கும் பெண் குழந்தைகளின் விகிதமாகும். கேரளத்தின் விகிதம் 974 ஆக சிறப்பாக உள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த பிறப்பு பாலின விகிதம் 2017–19இல் 904ஆக இருந்து 2018–20 இல் மூன்று புள்ளிகள் அதிகரித்து 907ஆக உள்ளது என்று அவ்வறிக்கை கூறியது. இது கிராமப்புறங்களில் 907 ஆகவும், நகர்ப்புறங்களில் 910 ஆகவும் உள்ளது.

2. 'ஸ்வச் டாய்கேத்தான்' என்ற திட்டத்தை அறிமுகப்படுத்திய நடுவண் அமைச்சகம் எது?

அ. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑

ஆ. கல்வி அமைச்சகம்

இ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம்

ஈ. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது சமீபத்தில் ஸ்வச் அம்ருத் மகோத்சவத்தின்கீழ், 'ஸ்வச் டாய்கேத்தனை' அறிமுகப்படுத்தியது. இப்போட்டியானது பொம்மைகளுக்கான தேசிய செயல் திட்டம் மற்றும் ஸ்வச் பாரத் இயக்கத்தின் இரண்டாம் கட்டம் (SBM 2.0) ஆகியவற்றுக்கு இடையேயான ஓர் ஒருங்கிணைப்பாக உள்ளது. பொம்மைகளைத் தயாரிப்பதில் கழிவுகளைப் பயன்படுத்துவதற்கான தீர்வுகளை ஆராய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஐஐடி காந்திநகரில் உள்ள படைப்பாக்க கற்றல் மையம், இத்திட்டத்திற்கான அறிவுப்பங்காளராக உள்ளது.

3. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, ஆபரேஷன் 'மேகா சக்ரா' என்பதுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

அ. இந்திய இராணுவம்



ஆ. நடுவண் புலனாய்வுப் பணியகம் ☑

இ. இந்திய கடலோர காவல்படை

ஈ. மத்திய விஜிலென்ஸ் ஆணையம்

✓ 'மேகா சக்ரா' நடவடிக்கையின் ஒருபகுதியாக, நடுவண் புலனாய்வுப்பிரிவு (CBI) 19 மாநிலங்களில் 56 இடங்களிலும், ஒரு யூனியன் பிரதேசத்திலும் சிறுவர் பாலியல் வன்கொடுமை சம்பந்தப்பட்ட காணொளிகளை இணையதளத்தில் தரவேற்றம் மற்றும் தரவிறக்கம் செய்தது தொடர்பான இரண்டு வழக்குகள் தொடர்பாக சோதனை நடத்தியது. சிங்கப்பூர் இன்டர்போலின் தரவுகள் மற்றும் இணையதளத்தில் சிறுவர் பாலியல் வன்கொடுமை சம்பந்தப்பட்ட காணொளிகளை விற்பனை செய்தோருக்கு எதிராக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட, 'ஆபரேஷன் கார்பன்'போது பெறப்பட்ட உளவுத்துறையின் தகவல்கள் அடிப்படையில் இந்த சமீபத்திய சோதனைகள் நடத்தப்பட்டன.

4. சாம்பலைப் பயன்படுத்தி காண்டாமிருகங்களுக்காக உருவாக்கப்பட்ட, 'ஒற்றைக்கொம்பிகளின் உறைவிடம்' என்ற நினைவிடத்தை உருவாக்கியுள்ள மாநிலம் எது?

அ. மேற்கு வங்கம்

ஆ. அஸ்ஸாம் ☑

இ. ஒடிசா

ஈ. அருணாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள காசிரங்கா தேசியப்பூங்காவில் அஸ்ஸாம் மாநில அரசால் எரிக்கப்பட்ட காண்டாமிருக கொம்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட சாம்பலைப்பயன்படுத்தி உருவாக்கப்பட்ட மூன்று காண்டாமிருகங்களின் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன. ஓராண்டுக்கு முன், உலக காண்டாமிருக நாளன்று, வேட்டைக்காரர்கள் மற்றும் சட்டவிரோத வியாபாரிகளிடமிருந்து பாதுகாப்பு அதிகாரிகளால் சேகரிக்கப்பட்ட சுமார் 2500 காண்டாமிருக கொம்புகளை அஸ்ஸாம் மாநில அரசு எரித்துச்சாம்பலாக்கியது. மூன்று காண்டாமிருக சிற்பங்களைக்கொண்ட இந்த நினைவுச்சின்னத்திற்கு, 'ஒற்றைக்கொம்பிகளின் உறைவிடம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

5. சமீபத்திய ஆய்வின்படி, கூட்டாக 12 மில்லியன் டன் உலர் கார்பனைக் கொண்டிருக்கின்ற உயிரினம் எது?

அ. கொசுக்கள்

ஆ. எறும்புகள் ☑

இ. தேனீக்கள்

ஈ. பட்டாம்பூச்சிகள்

✓ ஓர் அண்மைய ஆய்வின்படி, உலகம் முழுவதும் உள்ள எறும்புகள் மொத்தமாக சுமார் பன்னிரண்டு மில்லியன் டன் உலர் கரிமத்தைக் கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் உள்ள எறும்புகளின் எண்ணிக்கை சுமார் இருபது குவாட்ரில்லியன் அல்லது இருபதாயிரம் மில்லியன் மில்லியன்கள் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவை கூட்டாக காட்டுப்பறவைகள் மற்றும் பாலூட்டிகளைவிட அதிக எடை கொண்டவையாக இருக்கும்.

6. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சுப்ரோதோ கோப்பையுடன் தொடர்புடைய விளையாட்டு எது?

அ. ஹாக்கி

ஆ. கால்பந்து ☑

இ. மட்டைப்பந்து

ஈ. பூப்பந்து

✓ சுப்ரோதோ கோப்பைக்கான சர்வதேச கால்பந்து போட்டியின் 61ஆவது பதிப்பு ஈராண்டு இடைவெளிக்குப்பிறகு தொடங்கியது. நாடு முழுவதுமுள்ள பள்ளிகளுக்கு இது மிகவும் மதிப்புமிக்க கால்பந்துப் போட்டியாக கருதப்படுகிறது. இந்தப் போட்டியை இந்திய வான்படையுடன் இணைந்து சுப்ரோதோ முகர்ஜி விளையாட்டுக் கல்விச்சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்தியாவின் 25 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தம் 92 பள்ளிகள் மற்றும் வங்காளதேசத்தின் வான்படை பள்ளி ஆகியவை இப்போட்டியில் போட்டியிடுகின்றன.

7. 2023 ஜன.1 வரை அனைத்து வகையான பட்டாசுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கு தடைவிதிப்பதாக அறிவித்த மாநிலம்/யூடி எது?

அ. மகாராஷ்டிரா **ஆ. புது தில்லி ☑**

இ. சிக்கிம் ஈ. ஹிமாச்சல பிரதேசம்

✓ அனைத்து வகையான பட்டாசுகளின் உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாட்டுக்கான தடை 2023 ஜனவரி.1 வரை நீட்டிக்கப்படும் என தில்லி சுற்றுச்சூழலமைச்சர் கோபால் ராய் அறிவித்தார். பண்டிகை காலங்களில் மாசுபாட்டைக்

கட்டுப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இணையதளத்தில் பட்டாசு விற்பனைக்கும் தடைநீட்டிக்கப்பட்டுள்ளது. இத்தடையை கடுமையாக அமல்படுத்துவதை உறுதிசெய்வதற்கான செயல்திட்டம் வரையப்படவுள்ளது. 'ஆம் ஆத்மி' கட்சி பட்டாசு வெடிப்பதற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, 'படகே நகி தியே ஜலாவ்' என்ற பிரச்சாரத்தையும் தொடங்கியது.

8. 'கலாச்சாரத்திற்கான சிறந்த இடத்திற்கான' சர்வதேச சுற்றுலா விருதை பெற்ற மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளா

இ. மேற்கு வங்கம் ☑

ஈ. ஜம்மு காஷ்மீர்

✓ ஐநா உலக சுற்றுலா அமைப்பின் துணை அமைப்பான பசிபிக் ஏரியா டிராவல் ரைட்டர்ஸ் அசோசியேஷன், மேற்கு வங்காளத்திற்கு 2023ஆம் ஆண்டுக்கான சர்வதேச பயண விருதை, 'கலாச்சாரத்திற்கான சிறந்த இடம்' என்ற தலைப்பில் வழங்கவுள்ளது. பெர்லினில் நடைபெறும் உலக சுற்றுலா மற்றும் வான்போக்குவரத்து தலைமைகளின் உச்சிமாநாட்டில் இவ்விருது வழங்கப்படும். UNESCO பாரம்பரிய தகுதி மேற்கு வங்கத்தின் துர்கா பூஜைக்கு இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ளது.

9. திருநங்கையருக்காக பிரத்யேகமாக, 'ரெயின்போ சேமிப்புக்கணக்கை' அறிமுகப்படுத்திய இந்திய வங்கி எது?

அ. ESAF சிறு நிதி வங்கி ☑

ஆ. AU சிறு நிதி வங்கி

இ. YES வங்கி

ஈ. கோடக் மஹிந்திரா வங்கி

ESAF
ESAF SMALL FINANCE BANK
Joy of Banking

✓ ESAF சிறு நிதி வங்கி திருநங்கைகளுக்காக பிரத்யேகமாக, 'ரெயின்போ சேமிப்புக்கணக்கை' அறிமுகப்படுத்தியது. அதிக சேமிப்பு விகிதம் மற்றும் மேம்பட்ட கடனட்டை வசதிகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்களை இந்தக் கணக்கு வழங்குகிறது. கேரளாவைச் சார்ந்த இந்த நிறுவனம், கடந்த 2017இல் ஒரு சிறு நிதிய வங்கியாக நிறுவப்பட்டது.

10. UNESCOஇன் உலக பாரம்பரிய தளமான மொகஞ்சதாரோ அமைந்துள்ள நாடு எது?

அ. இந்தியா

ஆ. ஆப்கானிஸ்தான்

இ. பாகிஸ்தான் ☑

ஈ. கஜகஸ்தான்

✓ UNESCOஇன் உலக பாரம்பரிய தளமாக விளங்கும் மொகஞ்சதாரோவின் இடிபாடுகள் பாகிஸ்தானின் தெற்கு சிந்து மாகாணத்தில் சிந்து ஆற்றுக்கருகில் அமைந்துள்ளது. முன்னெப்போதும் இல்லாத பருவமழைக்காலம் காரணமாக பாகிஸ்தானில் நூற்றுக்கணக்கான மக்கள் மாண்டனர். இந்தச் சூழ்நிலை, 1922இல் கண்டுபிடிக்கப்பட்ட 4,500 ஆண்டுகளுக்கு முந்தைய மொகஞ்சதாரோ தொல்பொருள் தளத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 2020 – தாதா சாஹேப் பால்கே விருது வழங்கி ஆஷா பரேக் கௌரவிக்கப்படவுள்ளார்.

202ஆம் ஆண்டுக்கான தாதா சாஹேப் பால்கே விருது பிரபல திரைப்பட நடிகை ஆஷா பரேக் பெறுவதாக நடுவண் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. புது தில்லியில் நடைபெறும் தேசிய திரைப்பட விருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்படும்.

ஆஷா பரேக் புகழ்பெற்ற திரைப்பட நடிகை, இயக்குனர், தயாரிப்பாளர் இவற்றுடன் இந்திய செவ்வியல் நடனக் கலைஞருமாவார். 1992இல் பரேக், 'பத்மஸ்ரீ' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 1998 முதல் 2001 வரை நடுவண் திரைப்பட சான்றிதழ் வாரியத்தின் தலைவராக அவர் பணியாற்றியுள்ளார்.

---

2. காலாண்டு வேலைவாய்ப்பு கணக்கெடுப்பின் நான்காவது சுற்று (ஜனவரி–மார்ச், 2022) தகவல் அறிக்கை வெளியிடப்பட்டது.

நிறுவனம்சார்ந்த வேலைவாய்ப்புகுறித்த அகில இந்திய காலாண்டு ஆய்வின் ஒருபகுதியாக காலாண்டு வேலை வாய்ப்பின் நான்காவது சுற்றுபற்றிய ஆய்வறிக்கையை நடுவண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெளியிட்டார்.

உழவுசாராத துறைகளில் உள்ள மொத்த வேலைவாய்ப்பில் பெரும்பங்காற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 துறைகளில் முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைசாரா வேலைவாய்ப்புகுறித்த தகவல்களைக் காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு அக்கைகள் தொடர்ந்து வழங்குகின்றன. உற்பத்தி, கட்டுமானம், வர்த்தகம், போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், உணவகம் மற்றும் தங்குமிடங்கள், தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ மற்றும் நிதி சேவைகள் ஆகியவை இந்த ஒன்பது துறைகளாகும்.

நிறுவனம் சார்ந்த வேலைவாய்ப்புகுறித்த அகில இந்திய காலாண்டு ஆய்வு, இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, "காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு", இரண்டாவதாக, "பகுதி திட்ட அமைப்பு ஆய்வு". காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு என்பது பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங்கள் சம்பந்தப்பட்டதும், இரண்டாவது ஆய்வு, ஒன்பது அல்லது அதற்கும் குறைவான பணியாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் பற்றியதுமாகும்.

பொருளாதாரத்தின் முறைப்படுத்தப்பட்ட துறைகளில் வேலைவாய்ப்பு மற்றும் அதுசம்பந்தமான முக்கிய தகவல்களை திரட்டுவதற்காக அகில இந்திய காலாண்டு ஆய்வின் ஒருபகுதியாக காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வு ஏப்ரல், 2021இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு காலண்டிலும் சுமார் 12000 அமைப்புகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன. இவ்வாறு, முதன்முதலில் 2021 ஏப்ரல்–ஜூன் காலத்திற்கான அறிக்கை, 2021 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டது.

பொருளாதாரத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் வேலைவாய்ப்பு நிலவரம் அதிகரித்து வருவதாக நான்காவது காலாண்டு அறிக்கையை வெளியிடுகையில், நடுவண் அமைச்சர் தெரிவித்தார். மூன்றாம் காலாண்டில் (செப்டம்பர்–டிசம்பர் 2021) 3.14 கோடியாக இருந்த மதிப்பிடப்பட்ட வேலைவாய்ப்பு, நான்காவது காலாண்டில் (ஜனவரி–மார்ச், 2022) 3.18 கோடியாக உயர்ந்தது. ஆறாவது பொருளாதாரக்கணக்கெடுப்பில் (2013–2014) இத்தேர்ந்தெடுக்கப்பட்ட 9 துறைகளில் மொத்த வேலைவாய்ப்பின் அளவு 2.37 கோடியாக பதிவானது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கை என்பது, விநியோகம் மற்றும் தேவை குறித்த ஆய்வாகும். அதாவது குறிப்பிட்ட கால அளவிற்கான தொழிலாளர் ஆய்வு என்பதால் நாட்டில் வேலைவாய்ப்புகுறித்த தரவு இடைவெளிகளை இது குறைக்கும்.

நான்காவது காலாண்டு வேலைவாய்ப்பு ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

• 3ஆவது காலாண்டில் 3.14 கோடி பணியாளர்கள் பணியாற்றியதுடன் ஒப்பிடுகையில், நான்காவது காலாண்டில் 5.31 இலட்சம் நிறுவனங்களில் மொத்தம் 3.18 கோடி தொழிலாளர்கள் பணிபுரிந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

• பணியாளர்களின் மொத்த எண்ணிக்கையில் உற்பத்தித்துறை முதலிடமும் (38.5%), அதைத்தொடர்ந்து 21.7% உடன் கல்வித்துறையும், 12% உடன் தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ துறையும், 10.6% உடன் சுகாதாரத் துறையும் உள்ளன.

• 1.4% நிறுவனங்களில் மட்டுமே குறைந்தபட்சம் 500 பேர் பணியாற்றினார்கள். இதுபோன்ற மிகப்பெரிய அமைப்புகள் பெரும்பாலும் தகவல் தொழில்நுட்பம் / பிபிஓ மற்றும் சுகாதாரத் துறையில் இயங்குகின்றன.

• மூன்றாவது காலாண்டில் 31.6%ஆக இருந்த பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை, நான்காவது காலாண்டு அறிக்கையில் 31.8%ஆக, சற்று உயர்ந்தது. இருப்பினும், சுகாதாரத்துறையில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 52%ஆக இருந்தது. அதைத்தொடர்ந்து கல்வி, நிதி சேவை மற்றும் தகவல் தொழில்நுட்பம்/பிபிஓ துறைகளில் முறையே 44%, 41% மற்றும் 36%ஆக பதிவானது. சுயதொழில் புரியும் ஆண்களைவிட நிதி சேவை துறையில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விஷயம்.

---

1. 2026ஆம் ஆண்டுக்குள் தேசிய மாசற்ற காற்றுத் திட்டத்தின்கீழ், நகரங்களில் துகள்மப்பொருள்களின் செறிவைக் குறைப்பதற்கான புதிய இலக்கு சதவீதம் என்ன?

அ. 25%

ஆ. 30%

இ. 40% ☑

ஈ. 50%

✓ 2026ஆம் ஆண்டுக்குள் தேசிய மாசற்ற காற்றுத் திட்டத்தின் (NCAP) கீழுள்ள நகரங்களில் துகள்மப்பொருள்களின் செறிவை 40 சதவீத அளவுக்குக் குறைக்க நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் புதிய இலக்கை நிர்ணயித்துள்ளது. இதற்கு முன்னர் 2024ஆம் ஆண்டுக்குள் 20 – 30% அளவுக்குக் குறைக்கப்பட வேண்டும் என இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. இருபது நகரங்கள் ஆண்டு சராசரி செறிவான (ஒரு கன மீட்டருக்கு 60 மைக்ரோகிராம்) PM10 என்ற தேசிய தரநிலைகளைச் சந்தித்துள்ளன.

2. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'IinvenTiv' நிகழ்வு என்றால் என்ன?

அ. வேலைவாய்ப்பு முகாம்

ஆ. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகாம் ☑

இ. திறன் மேம்பாட்டு முகாம்

ஈ. துளிர் நிறுவல்கள் முகாம்

✓ இருபத்து மூன்று இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IITs) இணைந்து, "IinvenTiv" என்ற ஒரு பிரம்மாண்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முகாமை ஏற்பாடு செய்யும். இந்த நிகழ்வு அந்நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் புதுமைத்திட்டங்களைப்பற்றிய முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புத்தாக்கங்களின் சிறந்த மேம்பாட்டிற்காக பல்கலைகள் மற்றும் நிறுவனங்கள், தொழிற்துறை மற்றும் ஐஐடிகளுடன் அம்முகாம் ஒத்துழைக்கும்.

3. 'தேசிய ஊழல் எதிர்ப்பு ஆணைய மசோதா'வுடன் தொடர்புடைய நாடு எது?

அ. அமெரிக்கா

ஆ. இந்தியா

இ. ஆஸ்திரேலியா ☑

ஈ. பாகிஸ்தான்

✓ ஆஸ்திரேலியாவின் தலைமை வழக்கறிஞர் அண்மையில் தேசிய ஊழல் தடுப்பு ஆணைய மசோதாவை தாக்கல் செய்தார். தேசிய ஊழல் தடுப்பு ஆணையம் என்பது பொதுத்துறையில் உள்ள தீவிரமான அல்லது முறையான ஊழலை விசாரித்து அறிக்கையளிக்கும் ஓர் அமைப்பாகும். இது ஒரு ஆணையரால் வழிநடத்தப்படும்; அவர், ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு பதவி வகிப்பார். பொதுநலவாய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள், பொதுநலவாய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊழியர்கள், அரசாங்க ஒப்பந்ததாரர்கள் மற்றும் அவர்களது ஊழியர்கள், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள், சட்டப்பூர்வ அலுவலகம் வைத்திருப்பவர்கள் உள்ளிட்டோரை விசாரிப்பதற்கான பரந்த அதிகார வரம்பு இந்தத் தேசிய ஊழல் தடுப்பு ஆணையத்திற்கு உள்ளது.

4. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற தாமிரபரணி ஆறு முதன்மையாகப் பாயும் மாவட்டங்கள் எவை?

அ. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ☑

ஆ. மதுரை மற்றும் சிவகங்கை

இ. திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி

ஈ. சேலம் மற்றும் ஈரோடு

✓ தாமிரபரணி ஆறு தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேற்குத்தொடர்ச்சிமலையின்கண் பொதிகை மலையிலிருந்து உற்பத்தியாகிறது. பெங்களூருவைச் சேர்ந்த அசோகா ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழலுக்கான அறக்கட்டளையின் (ATREE) ஆராய்ச்சியாளர்கள் தாமிரபரணி ஆற்றின் மறுசீரமைப்புப் பணியை, 'தாமிரசெஸ்' என்ற திட்டத்தின்கீழ் தொடங்கினர். பூர்வீக பல்லுயிர் பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்துதற்கான சேவைகளை செயல்படுத்துவதை இந்தத் திட்டம் தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

5. 'ஜல்தூத்' என்ற செயலியை உருவாக்கியுள்ள நடுவண் அமைச்சகம் அல்லது அமைச்சகங்கள் எது / எவை?

அ. ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஆ. ஊரக வளர்ச்சி அமைச்சகம் மற்றும் பஞ்சாயத்து இராஜ் அமைச்சகம் ☑

இ. ஜல்சக்தி அமைச்சகம்

ஈ. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம்

✓ 'ஜல்தூத்' என்ற செயலியை நடுவண் ஊரக வளர்ச்சி அமைச்சகமும் நடுவண் பஞ்சாயத்து இராஜ் அமைச்சகமும் இணைந்து உருவாக்கியுள்ளது. ஒரு கிராமத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தைக் கண்டுபிடிக்க இந்தச் செயலி நாடு முழுவதும் பயன்படுத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கிணறுகளின் நீர்மட்டத்தை ஆண்டுக்கு இருமுறை (பருவமழைக்கு முந்தையது மற்றும் பிந்தையது) காலங்களில் அளவிடுவதற்கான வேலைவாய்ப்புக்கு 'ஜல்தூத்' செயலி உதவும். நீர்மட்டத்தை அளவிட நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள், நிலக்குறியீடிடப்பட்ட (geo–tagged) நிழற்படங்களை இந்தச் செயலியின்மூலம் பதிவேற்றுவார்கள்.

6. NTPCஆல் சமீபத்தில் கையகப்படுத்தப்பட்ட ஜபுவா மின்னுற்பத்தி நிலையம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. இராஜஸ்தான்

ஆ. மத்திய பிரதேசம் ☑

இ. பஞ்சாப்

ஈ. சத்தீஸ்கர்

JHABUA POWER

✓ இந்தியாவின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த மின்னுற்பத்தியாளரான NTPC, பெருநிறுவன நொடிப்புநிலை தீர்மானச் செயல்முறைமூலம் ₹925 கோடிக்கு ஜபுவா பவர் லிட் (JPL) நிறுவனத்தை வெற்றிகரமாக கையகப்படுத்தியுள்ளது. கொல்கத்தாவில் உள்ள தேசிய நிறுவனச்சட்டத் தீர்ப்பாயம்மூலம் (NCLT) இந்தச் செயல்முறைகள் தொடங்கப்பட்டன. இது NCLT வழிமூலம் NTPC கையகப்படுத்தும் முதல் சொத்தாகும். JPL என்பது மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள 600 மெகாவாட் திறன்கொண்ட செயல்பாட்டில் உள்ள ஓர் அனல்மின்னுற்பத்தி நிறுவனமாகும்.

7. 'ஷிக்ஷாக் பர்வ் கூட்டத்தின்' தொடக்க விழாவை நடத்திய நகரம் எது?

அ. பெங்களூரு

ஆ. புது தில்லி ☑

இ. வாரணாசி

ஈ. காந்தி நகர்

✓ 'ஷிக்ஷாக் பர்வ்' என்பது ஆசிரியர்களைப் பாராட்டவும் தேசியக் கல்விக் கொள்கை–2020ஐ முன்னெடுத்துச் செல்வதற்காகவும் நடத்தப்பட்ட ஒரு கூட்டமாகும். கல்வி அமைச்சகம், CBSE, AICTE மற்றும் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகம் ஆகியவை புது தில்லியில் ஏற்பாடு செய்திருந்த தொடக்க மாநாட்டுடன் 'ஷிக்ஷாக் பர்வ்' ஆரம்பமானது. இந்நிகழ்ச்சியில், 'தேசிய மனநல ஆய்வறிக்கை', 'தேசிய அறக்கட்டளை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் ஆய்வறிக்கை' மற்றும் 'குறிப்பிட்ட கற்றல் குறைபாடுகளுக்கான ஸ்கிரீனிங் டூல்ஸ் மொபைல் ஆப்–பிரஷாஸ்ட்' ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன.

8. அண்மையில் காலமான இரண்டாம் எலிசபெத் இராணி, பிரிட்டனின் அரசியாக எத்தனை ஆண்டுகள் இருந்தார்?

அ. 30

ஆ. 45

இ. 60

ஈ. 70 ☑

✓ அண்மையில் தனது 96ஆவது வயதில் காலமான இரண்டாம் எலிசபெத் மகாராணி, 1952ஆம் ஆண்டு பிரிட்டன் அரச அரியணை ஏறினார். 70 ஆண்டுகள் ஆட்சிசெய்த மிகநீண்ட கால அரசியாக அவர் திகழ்ந்தார். 1837 முதல் 1901 வரை ஆட்சிசெய்த விக்டோரியா மகாராணியின் சாதனையை முறியடித்து, 2015ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் மிக நீண்டகால அரசியாக அவர் ஆனார். அவரது மூத்த மகன் சார்லஸ், அவருக்குப் பிறகு மூன்றாம் சார்லஸ் மன்னராக அரியணை ஏறுகிறார்.

9. 2023 – ஆடவர் உலகக்கோப்பை ஹாக்கியை நடத்துகிற இந்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. புது தில்லி

இ. ஒடிசா ☑

ஈ. மகாராஷ்டிரா



✓ 2023 – ஹாக்கி ஆடவர் உலகக்கோப்பைப் போட்டிகளை புவனேசுவரத்தில் உள்ள கலிங்கா மைதானத்திலும், ரூர்கேலாவில் உள்ள பிர்சா முண்டா அரங்கத்திலும் நடைபெறும். 2023 ஜனவரியில் இந்தப்போட்டிகள் தொடங்கும். போட்டியின் டிரா சமீபத்தில் புவனேசுவரத்தில் நடைபெற்றது. கடந்த 2018இல் நெதர்லாந்தைத் தோற்கடித்து முதல் பட்டத்தை வென்றதால், பெல்ஜியம் இவ்வுலகக்கோப்பையின் நடப்புச்சாம்பியனாக உள்ளது. இதில் பங்கேற்கும் இந்தியா, ஜப்பான், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 16 அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

10. கீழ்க்காணும் எந்நகரத்தில், 'கலாம் நோ கார்னிவல்' என்ற புத்தகக்கண்காட்சியை பிரதமர் தொடக்கி வைத்தார்?

அ. மும்பை

ஆ. அகமதாபாத் ☑

இ. வாரணாசி

ஈ. இராமேசுவரம்



✓ அகமதாபாத்தில் நவபாரத் சாகித்திய மந்திர் ஏற்பாடு செய்திருந்த, 'கலாம் நோ கார்னிவல்' புத்தகக் கண்காட்சியின் தொடக்க விழாவில் பிரதமர் நரேந்திர மோதி உரையாற்றினார். பாரம்பரியமாக நடைபெற்று வரும் இக்கண்காட்சி குஜராத் மாநிலத்தின் இலக்கியம் மற்றும் அறிவை விரிவுபடுத்த பேருதவி புரிகிறது.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. பிரதமரின் ஏழைகள் நல உணவுத்திட்டத்தை மேலும் 3 மாதங்களுக்கு (அக்டோபர் 2022–டிசம்பர்2022) மத்திய அரசு நீடித்துள்ளது.

கடந்த 2021இல் பிரதமரால் அறிவிக்கப்பட்ட மக்கள் நலத்திட்டமான பிரதமரின் ஏழைகள் நல உணவுத்திட்டத்தின் கீழ், கூடுதல் உணவுப்பாதுகாப்பு வெற்றிகரமாக அமலாவதை அடுத்து இந்த திட்டத்தின் 7ஆவது கட்டத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு அதாவது அக்டோபர் 2022 முதல் டிசம்பர் 2022 வரை நீட்டிக்க நடுவண் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நலத்திட்டத்தின்மூலம் தேசிய உணவுப்பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பயனடையும் பயனாளிகள் அனைவருக்கும் விலையில்லாமல் ஒவ்வொரு நபருக்கும் மாதம் ஒன்றுக்கு 5 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது. தற்போது மேலும் 3 மாதங்களுக்கு இந்தத் திட்டம் நீடிக்கப்பட்டிருப்பதால் அரசுக்கு ₹44,762 கோடி கூடுதலாக செலவாகும். 7ஆம் கட்டத்திற்கு உணவு தானிய ஒதுக்கீடு 122 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கக்கூடும்.

---

2. மோதலில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் திட்டம்: விண்கல்லில் செயற்கைக்கோளை மோதி நாசா சோதனை

எதிர்காலத்தில் பூமியின்மீது விண்கற்கள் மோதி பேரழிவை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, அவற்றின் பாதையை மாற்றியமைக்க முடியுமா? என்பதை தெரிந்துகொள்வதற்காக அத்தகைய விண்கல் ஒன்றின்மீது செயற்கைக்கோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான NASA மோதச்செய்தது.

பூமியில் மிகப்பெரிய விண்கற்கள் மோதி மிகப்பெரிய அழிவை ஏற்படுவத்துவதற்கான அபாயத்தை தவிர்ப்பதற்காக NASA விஞ்ஞானிகள் நீண்டகாலமாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாக, பூமியை நோக்கி வரக்கூடிய விண்கற்களை திசைமாற்றுதற்கான வழிமுறைகளையும் விஞ்ஞானிகள் தேடிவருகின்றனர்.

இந்நிலையில், ஒரு பொருளை விண்கல்லின்மீது பலமாக மோதச்செய்வதன்மூலம் அதன் சுற்றுவட்டப்பாதையை மாற்றியமைக்க முடியுமா? என்பதைத் தெரிந்துகொள்வதற்காக, 'தி டபுள் ஆஸ்டிராய்ட் ரிடைரக்ஷன் டெஸ்ட்' (டார்ட்) என்ற சோதனையை NASA மேற்கொண்டது. அந்தச் சோதனைத் திட்டத்தின்கீழ், 160 மீட்டர் விட்டம்கொண்ட டிமார்ஃபோஸ் என்ற விண்கல்மீது செயற்கைக்கோளை மோதச் செய்ய முடிவுசெய்யப்பட்டது. அந்த விண்கல், டிடிமோஸ் என்ற 780 மீ விட்டம் கொண்ட மிகப்பெரிய விண்கல்லுக்கு நிலவாகச் சுற்றிவருகிறது.

இந்த நிலையில், டிமார்ஃபோஸ் மீது மோதுவதற்காக NASA அனுப்பிய செயற்கைக்கோள் 10 மாதங்களுக்குப்பிறகு அந்த விண்கல் மீது மோதிச்சிதறியது.

இந்த மோதலையும் அதனைத்தொடர்ந்து ஏற்பட்ட மாற்றத்தையும் ஆய்வுசெய்தற்காக, இத்தாலிய விண்வெளி ஆய்வு நிறுவனம் தயாரித்த LICIA கியூப் செயற்கைக்கோள், டார்ட் செயற்கைக்கோளுடன் இணைக்கப்பட்டிருந்தது. அது, டார்ட்டிலிருந்து கடந்த 11–ஆம் தேதி தனியாகப் பிரிந்து அதனை பின்தொடர்ந்தது.

டிமார்ஃபோஸ் விண்கலம்மீது டார்ட் செயற்கைக்கோள் மோதுவதையும் அதனால் எழுந்த தூசிமண்டலத்தின் தன்மையையும் LICIA கியூப் செயற்கோள் பதிவுசெய்து பூமிக்கு நேரடியாக அனுப்பி வருகிறது.

இந்தச்சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட விண்கல்லைக் குறிவைத்து, அதன் மீது வேண்டுமென்றே மோதச்செய்து, அதன் பாதையை மாற்றியமைக்கும் திறன் NASAஉக்கு உள்ளது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

---

1. எந்த மாநிலத்திற்கு, 2022ஆம் ஆண்டுக்கான, 'ஆயுஷ்மான் உத்கிரிஷ்டா விருது' வழங்கப்பட்டுள்ளது?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. உத்தர பிரதேசம் ☑

இ. கர்நாடகா

ஈ. ஹிமாச்சல பிரதேசம்

✓ சுகாதார வசதி பதிவேட்டில் பல்வேறு சுகாதார வசதிகளை சேர்த்ததற்காக உத்தர பிரதேச மாநிலத்திற்கு 2022ஆம் ஆண்டுக்கான, 'ஆயுஷ்மான் உத்கிரிஷ்டா விருது' வழங்கப்பட்டுள்ளது. தேசிய சுகாதார வசதி பதிவேட்டில் 28,728 சுகாதார வசதிகள் சேர்க்கப்பட்டு நாட்டிலேயே சிறப்பாக செயல்படும் மாநிலமாக அது திகழ்கிறது. கிட்டத்தட்ட 2 கோடி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்குகளுடன் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை (ABHA) உருவாக்குவதில் இது இரண்டாவது சிறந்த மாநிலமாக விளங்குகிறது.

2. ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் (HAL) ஒருங்கிணைந்த கிரையோஜெனிக் எஞ்சின் உற்பத்தி வசதி திறக்கப்பட்ட நகரம் எது?

அ. திருவனந்தபுரம்

ஆ. பெங்களூரு ☑

இ. சிம்லா

ஈ. ஹைதராபாத்

✓ பெங்களூருவில் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தின் (HAL) ஒருங்கிணைந்த கிரையோஜெனிக் எஞ்சின் உற்பத்தி வசதியை இந்தியக்குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு திறந்து வைத்தார். இந்திய ஏவுகலங்களுக்கான கிரையோஜெனிக் (CE20) மற்றும் செமி கிரையோஜெனிக் (SE2000) எஞ்சின்களை தயாரிப்பதற்கான எழுபதுக்கும் மேற்பட்ட உயர்தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சோதனை வசதிகள் இந்த வசதியில் இடம்பெற்றுள்ளன. கடந்த 2013ஆம் ஆண்டில், HALஇல் கிரையோஜெனிக் எஞ்சின் தொகுதிகளை உற்பத்தி செய்வதற்கான வசதியை அமைப்பதற்காக ISROஉடன் HAL ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

3. மாநிலத்தின், 'பழங்குடியினரின் கலைக்களஞ்சியத்தை' வெளியிட்டுள்ள மாநிலம் எது?

அ. மத்திய பிரதேசம்

ஆ. ஜார்கண்ட்

இ. ஒடிஸா ☑

ஈ. மேற்கு வங்கம்

✓ ஒடிஸா மாநிலத்தில், 'பழங்குடியினரின் கலைக்களஞ்சியத்தை' ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் வெளியிட்டார். இந்தக் கலைக்களஞ்சியத்தின் ஐந்து தொகுதிகள், பட்டியலினத்தோர் (SC) மற்றும் பழங்குடியினர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCSTRTI) மற்றும் ஒடிஸா மாநில பழங்குடி அருங்காட்சியகம் ஆகியவற்றால் வெளியிடப்பட்டது. 3800 பக்கங்கள் மற்றும் 418 ஆய்வுக்கட்டுரைகளைக் கொண்ட இத்திருத்தப்பட்ட தொகுதிகளில், அனைத்து 62 பழங்குடி சமூகங்கள் மற்றும் 13 குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி குழுக்களைப்பற்றி உள்ளது. இந்த நூல் கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு ஒரு களஞ்சியமாக இருக்கும்.

4. அண்மையில், 2022 டிசம்பர் மாதம் வரை நீட்டிக்கப்பட்ட, 'PMGKAY' என்றால் என்ன?

அ. உடல்நலக் காப்பீட்டுத் திட்டம்

ஆ. இலவச உணவு தானியங்கள் திட்டம் ☑

இ. MSME மானியத் திட்டம்

ஈ. இலவச LPG எரிவாயு உருளை திட்டம்

✓ வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்களுக்கான (BPL) இலவச உணவு–தானியத் திட்டத்தை 2022 டிசம்பர்.31 வரை மேலும் மூன்று மாதங்களுக்கு நீட்டிக்க நடுவணரசு முடிவுசெய்துள்ளது. இது பிரதம மந்திரி கரீப் கல்யாண் அன்ன யோஜனாவின் (PMGKAY) ஏழாம் கட்டமாகும். இதனால் நடுவணரசுக்கு கூடுதலாக ₹44,762 கோடி செலவாகும்.

5. இந்தியாவின் முதல் எண்ம கல்வியறிவுபெற்ற பஞ்சாயத்தான, 'புல்லம்பாறை' அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கேரளம் ☑

இ. தெலுங்கானா

ஈ. பஞ்சாப்

✓ திருவனந்தபுரத்தில் உள்ள 'புல்லம்பாறை' என்னும் சிற்றூர் கேரளாவின் முதல் டிஜிட்டல் கல்வியறிவுபெற்ற கிராமப் பஞ்சாயத்தாக ஆனது. புல்லம்பாறையில் உள்ளோர் அனைவரும் முழு டிஜிட்டல் கல்வியறிவைப்பெற்றதை அடுத்து டிஜிட்டல் கல்வியறிவுபெற்ற நாட்டின் முதல் கிராமப்பஞ்சாயத்தாக அது ஆனது. அப்பஞ்சாயத்தில் உள்ள சமூகத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவினருக்கு டிஜிட்டல் கல்வியை வழங்குவதற்காக, 'டிஜி புல்லம்பாறை' திட்டம் 2021 ஆக.15 அன்று தொடங்கப்பட்டது. கல்லூரிகள், குடும்பஸ்ரீ பிரிவுகள் மற்றும் பிற சுயவுதவி குழுக்களின் தன்னார்வலர்களின் உதவியுடன் இது நடத்தப்பட்டது.

6. 2022இல் வரும், உலக தற்கொலைத் தடுப்பு நாளுக்கானக் கருப்பொருள் என்ன?

அ. செப்டம்பர்.05

ஆ. செப்டம்பர்.10 ☑

இ. செப்டம்பர்.15

ஈ. செப்டம்பர்.20

✓ உலக தற்கொலை தடுப்பு நாள் செப்.10 அன்று அனுசரிக்கப்படுகிறது. உலக நலவாழ்வு அமைப்பின் கூற்றுப்படி, ஓர் ஆண்டுக்கு 703,000 பேர் உலகம் முழுவதும் தங்கள் இன்னுயிரை மாய்த்துக்கொள்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையிலான உலக தற்கொலைத் தடுப்பு நாளுக்கான முப்பெரும் கருப்பொருளாக, "Creating Hope through Action" என்பது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள், அரசு மற்றும் பொதுமக்களிடையே தற்கொலைகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும்.

7. 2022ஆம் ஆண்டில் இரண்டாவது இந்தியா–ஜப்பான் 2+2 பேச்சுவார்த்தையை நடத்தும் நகரம் எது?

அ. புது தில்லி

ஆ. டோக்கியோ ☑

இ. காந்தி நகர்

ஈ. ஒசாகா

✓ இரண்டாவது இந்தியா–ஜப்பான் 2+2 பேச்சுவார்த்தையானது அண்மையில் டோக்கியோவில் நடைபெற்றது. இதில், பாதுகாப்புத்துறை அமைச்சர் இராஜ்நாத் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் Dr ஜெய்சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இரு நாடுகளின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மதிக்கும் அதேவேளையில், இந்தியா–ஜப்பான் உறவுகளை மிகவும் வலுவானதாக மாற்றுவதற்கான தங்கள் தீர்மானத்தை இருதரப்பும் மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டன.

8. 'Prevention and Management of Osteoarthritis' என்பது செப்.8 அன்று கடைப்பிடிக்கப்பட்ட எந்த நாளின் கருப்பொருளாகும்?

அ. உலக ஆயுஷ் நாள்

ஆ. உலக பிசியோதெரபி நாள் ☑

இ. உலக எலும்புநல நாள்

ஈ. உலக எலும்பியல் நாள்



✓ 1996ஆம் ஆண்டு செப்.8ஆம் தேதி முதன்முதலாக உலக பிசியோதெரபி நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 1951ஆம் ஆண்டு இந்நாளில் உலக பிசியோதெரபி நிறுவப்பட்டது. இந்த நாள் பிசியோதெரபி சமூகங்களின் ஒற்றுமை மற்றும் கூட்டாண்மையை மதிக்கிறது. "Prevention & Management of Osteoarthritis" என்ற கருப்பொருளின் அடிப்படையில் இந்த நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

9. மனித உரிமைகளுக்கான ஐநா உயராணையராக நியமிக்கப்பட்ட வோல்கர் டர்க் சார்ந்த நாடு எது?

அ. துருக்கி

ஆ. ஆஸ்திரியா

இ. அமெரிக்கா ☑

ஈ. ஐக்கிய இராச்சியம்

✓ ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகளுக்கான புதிய உயராணையராக ஆஸ்திரிய தூதர் வோல்கர் டர்க் நியமிக்கப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஒப்புதல் அளித்துள்ளது. அவர் முன்னாள் உயர் ஆணையர் மைக்கேல் பச்லெட்டுக்குப் பதிலாக இப்பதவிக்கு வந்துள்ளார். வோல்கர் டர்க், மலேசியா, காங்கோ மக்களாட்சிக் குடியரசு, குவைத் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் ஐநா அகதிகள் அமைப்பில் பணியாற்றியுள்ளார்.

10. மினிட்மேன் III என்ற கண்டம்விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்த நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. அமெரிக்கா ☑

இ. இஸ்ரேல்

ஈ. பிரான்ஸ்

✓ கலிபோர்னியாவில் அமைந்துள்ள வாண்டன்பெர்க் விண்வெளிப்படைத்தளத்திலிருந்து அமெரிக்க வான்படையின் ஆயுதமேந்தாத, 'மினிட்மேன் III' என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதனை செய்தது. ICBM சோதனை ஏவுதல் திட்டத்தின் நோக்கம் அமெரிக்க அணுவாற்றல் படைகளின் தயார்நிலையை நிரூபிப்பதாகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. முப்படைகளின் தலைமைத் தளபதியாக அனில் சௌஹான் நியமனம்

முப்படைகளின் தலைமைத்தளபதியாக லெப்டினென்ட் ஜெனரல் அனில் சௌஹான் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், நாட்டின் இராணுவ விவகாரத்துறை செயலாளராகவும் அனில் சௌஹான் பொறுப்பு வகிப்பார் எனவும் நடுவணரசு குறிப்பிட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிரிவுக்கு தளபதியாக இருந்த அனுபவம்கொண்ட அனில் சௌஹான், ஜம்மு – காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்களில் பதற்றமான சூழல்களில் திறம்பட பணியாற்றிய அனுபவம் கொண்டவர். சுமார் 40 ஆண்டுகள் வரை இராணுவத்தில் பணியாற்றி லெப்டினென்ட் ஜெனரலாக அனில் சௌஹான் ஓய்வுபெற்றவர். முப்படைகளின் தலைமைத் தளபதியாக இருந்த பிபின் இராவத் நீலகிரியில் நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்ததைத் தொடர்ந்து தற்போது புதிய தலைமைத்தளபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

---

2. புதிய அட்டர்னி ஜெனரல் ஆர் வெங்கடரமணி

இந்தியாவின் புதிய அட்டர்னி ஜெனரலாக மூத்த வழக்குரைஞர் ஆர் வெங்கடரமணி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய அட்டர்னி ஜெனரல் கே கே வேணுகோபாலின் பதவிக்காலம் வரும் 30 அன்று நிறைவடையவுள்ள நிலையில், புதிய அட்டர்னி ஜெனரலாக ஆர் வெங்கடரமணியை நியமித்து குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு உத்தரவிட்டார். இவர் பதவியேற்கும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு நடுவணரசின் அட்டர்னி ஜெனரலாக பதவி வகிப்பார்.

---

3. இளம் வல்லுநர்களுக்கான புத்தாய்வுத் திட்டம்: முதல்வர் தொடக்கிவைத்தார்

இளம் வல்லுநர்களுக்கான ஈராண்டு புத்தாய்வுத்திட்டத்தினை முதல்வர் முக ஸ்டாலின் இன்று தொடக்கிவைத்தார். இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசு தனது அனைத்துத் துறைகளிலும் சிறந்த நல்லாட்சியை வழங்கிட பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த முயற்சியின் ஒருபகுதியாக, தமிழ்நாடு அரசு ஈராண்டுகால, "தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத்திட்டத்தை (2022–2024)" அறிமுகப்படுத்தியுள்ளது. திறன்மிகு இளைஞர்களின் ஆற்றலையும், திறமையையும் பயன்படுத்தி, நிர்வாகச்செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்தி, தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் சேவை வழங்கலை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இப்புத்தாய்வுத் திட்டத்தின்கீழ், தேர்வு செய்யப்பட்டு பயிற்சியில் கலந்துகொள்ளும் இளம் வல்லுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ₹65,000/– மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளை மேற்கொள்வதற்கான பயணச்செலவு, கைப்பேசி மற்றும் தரவு பயன்பாடுபோன்ற செலவினத்திற்காக மாதம் ₹10,000/– கூடுதல் தொகையாக வழங்கப்படும்.

ஈராண்டு புத்தாய்வுத் திட்டத்தை திருப்திகரமாக நிறைவுசெய்யும் வல்லுநர்களுக்கு, பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனம் பொதுக்கொள்கை மற்றும் மேலாண்மையில் முதுகலை சான்றிதழ் (Post Graduate Certificate in Public Policy and Management) வழங்கும். இதுதவிர, ஏற்கனவே முதுகலை பட்டம் பெற்றவர்களுக்கு குறைந்தபட்ச தகுதித்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின்மூலம் முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்வதற்கு வாய்ப்பும் வழங்கப்படும்.

---

4. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் அதிகரிப்பு

நடப்பு 2022–23ஆம் நிதியாண்டின் மூன்றாவது காலாண்டில் மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத்திட்டம் உள்ளிட்ட சில சிறுசேமிப்புத்திட்டங்களுக்கான வட்டி விகிதத்தை நடுவணரசு உயர்த்தியுள்ளது. நடப்பு நிதியாண்டுக்கான அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மூன்றாவது காலாண்டில் சிறுசேமிப்புத் திட்டங்களுக்கான வட்டி விகிதம் தொடர்பான விவரங்களை நடுவண் நிதியமைச்சகம் வெளியிட்டது.

அதன்படி, சில சிறுசேமிப்புத்திட்டங்களுக்கான வட்டி விகிதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மூத்த குடிமக்களுக்கான சேமிப்புத்திட்டத்துக்குரிய வட்டி விகிதம் 7.4 சதவீதத்தில் இருந்து 7.6 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அஞ்சல் நிலைய 3 ஆண்டுகால வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதமாகவும், ஈராண்டு கால வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் 5.5 சதவீதத்திலிருந்து 5.7 சதவீதமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

வருங்கால வைப்புநிதித்திட்டம் (7.1%), தேசிய சேமிப்புத்திட்டம் (6.8%), ஓராண்டு கால வைப்புத்தொகைத்திட்டம் (5.5 சதவீதம்), பெண் குழந்தைகளுக்கான சேமிப்புத்திட்டம் (7.6 சதவீதம்) ஆகியவற்றுக்கான வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

கடன் இலக்கு குறைப்பு: நடுவணரசின் வரி வருவாய் அதிகரித்துள்ள நிலையில், நடப்பு நிதியாண்டில் கடன் வாங்குவதற்கான இலக்கைச் சுமார் ₹10,000 கோடி வரை அரசு குறைத்துள்ளது. அக்டோபர் மாதம் முதல் மார்ச் வரையிலான 2ஆவது அரையாண்டில் சந்தையில் இருந்து ₹5.92 லட்சம் கோடி கடன்பெறவுள்ளதாக நடுவணரசு அறிவித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக ₹14.31 இலட்சம் கோடி கடன்பெறவுள்ளதாக பட்ஜெட்டில் நடுவணரசு அறிவித்திருந்தது. அதை தற்போது ₹14.21 இலட்சம் கோடியாக நடுவணரசு குறைத்துள்ளது.

கடந்த 17ஆம் தேதி வரை நடுவணரசின் நேரடி வரி வருவாய் 30 சதவீதம் அதிகரித்து ₹8.36 இலட்சம் கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.